வாரப் பதிப்பு விலை சதம் 10

சுதந்திரன்

SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO- 12

புத்தகம் 7 ஐய ஆம் சித்திரை 13உ [26-4-54] ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 21 இதழ் 47

BEREC
TRADE MARK

ப்ளாஸ் ஷீட் பெரெக் பட் டரிகள் இங்கி லாந்தில் தயா ரிக்கப் பட் டவை

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது

Books & Newspapers
26 APR 1954
CEYLON.

அடுத்த வாரத்தில் கூடும் பிரதமர்கள் மகாநாடு

நேருவை எதிர்த்து திரிகோணமூலை

'சிவப்பு' பூச்சாண்டி காட்டி யுத்தக் கூட்டு அமைக்கத்திட்டமா?

மகாநாட்டின் பின் வல்லரசுகளின் கரம்

(நமது நிருபர்)

அடுத்த வாரத்தில்-28ந் தேதி தென் கீழ்க்கு ஆசியப் பிரதமர்கள் மகாநாடு கூடுகிறது. இது நிகழ்காலை சரித்தரத்திலேயே அத்முக்கியமான சம்பவமாக கருதப்படும்.

ஆசியாவிலே மற்றெரு உலக யுத்தம் வெடிக்குமா என்ற ஆபத்து அதிகரித்துள்ள இந்நவேளையில் இந்த மகாநாடு ஆசியாவின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கும் திருப்பு முனையாக அமையலாம்.

கீழ்த் திசையில நடைபெறும் யுத்தங்களை நிறுத்தி ஆசியாவிலே ஒரு சமாதான மண்டலத்தை உருவாக்குவதா அல்லது சிவப்பு பூச்சாண்டியில் யுத்த கூட்டுகளை நிறுவுவதா என்பதை இந்த மகாநாடு தீர்மானிக்கும்.

மொத்தத்தில் வாழ்வதா—சாவதா, சமாதானமா—சண்டையா என்பதன் நிர்ணயிப்பாக இந்த மகாநாடு முடியும்.

பிரிட்டிஷ் ராணியார் விஜயத்தின் படாடோபம் முடிந்து விட்டது. அடுத்து ஆசியப் பிரதமர்கள் மகாநாடு கூடுகிறது. 28ந் தேதி கொழும்பில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், பர்மா உட்பட பல ஆசிய நாடுகளின் பிரதமர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்த மகாநாட்டின் தினம் நெருங்க நெருங்க ஆசிய நாடுகளினதும், மேற்கத்தைய வல்லரசு நாடுகளினதும் அரசியல் வட்டாரங்களில் பலத்த பரபரப்பு காணப்படுகிறது. பல ஹேஷ்யங்களும் கூறப்படுகின்றன.

ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டை எப்படியாவது சிதைத்துவிடுவது என்று அமெரிக்க முதல் காரியதரிசி திரு டலஸும், பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி திரு ஈடனும் கலந்து பேசி திட்டமிட்டார்கள் என்ற செய்தி பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. ஆசிய நாடுகளின் மகாநாட்டில் மேற்கத்தைய வல்லரசுகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலையிடுவதாக தெரிய வருகிறது.

திரு டலஸ்-ஈடன்சம்பாஷணை நடத்தியதின் பின் திரு ஈடன் சாம்ராஜ்ய அங்கத்தவ நாடுகளுக்கு ஒரு திட்டம் அனுப்பியுள்ளார் என்ற செய்தியும் ஊர்ஜிதமாகியுள்ளது. ஆசியாவிலே 'சிவப்பு ஆக்கிரமிப்பை' எதிர்த்து ஒரு கூட்டு முனை அமைக்க வேண்டும் என்று அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாம்.

ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டின் கேந்திரப் பிரச்னையாக இது அமையலாம் என்று கணிக்கப்படுகிறது.

இந்தோசீன யுத்தத்தில் மக்கள் சீனு தலையிடுவதாயும் அதை எதிர்த்து எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று திரு டலஸ் எழுப்பிய கோஷத்தை மீண்டும் அமெரிக்க சார்புள்ள நாட்டின்மூலம் ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டிலும் எழுப்பப்படலாம் என்று யூகிக்கப்படுகிறது.

இந்தோசீனத்தில் அமெரிக்கா தலையிட முனைவது தொட்டு ஆசியாவிலே ஜலக்குண்டு பரீட்சை நடத்துவது ஈறாக சகல பிரச்னைகளிலும் அமெரிக்காவுக்கு எதிராக நேரு பகிரங்கமாக பேசுவதாயும் இது மேற்கத்தைய வல்லரசுகளுக்கிடையில் பெரும் மண்டையிடியை ஏற்படுத்தியுள்ளதென்றும் எடுபடலாம் என்றும் யூகிக்கப்படுகிறது.

இதில் நேருவின் செல்வாக்கு முறியடிக்கப்பட்டால், வட அட்லாண்டிக் ராணுவ ஒப்பந்தம் அடிப்படையில் ஆசியாவிலும் ஒரு கூட்டு முனை திருஷ்டிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன

இதற்கு பாகிஸ்தான் பிரதமரும், இலங்கைப் பிரதமரும் போடுகாய்களாக உபயோகிக்கப்படுவார்கள் என்றும் இவர்கள் டலஸின் கொள்கையை மகாநாட்டில் பலமாக ஆதரித்து நிற்பார்கள் என்றும் யூகிக்கப்படுகிறது.

அமெரிக்கா-பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால் ஆசியாவிலே ஏற்பட்ட நிலைமை காரணமாகவே ஆசியப் பிரதமர்கள் மகாநாடு கூட்டுவதற்கு ஆலோசிக்கப்பட்டது.

இலங்கைப் பிரதமர் திரு கொத்தலாவலை மற்ற ஆசிய நாட்டுப் பிரதமர்களுக்கு அழைப்பு விட்டிருந்தார்.

கொரியா யுத்தத்தின் படிப்பினையின் அடிப்படையில் ஆசியாவில் சமாதான மண்டலத்தை நிறுவுவதற்கும். இந்தோசீனபோன்ற நாடுகளில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தவும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த மகாநாடு உதவும் என்றதனால்தான் இதை இந்தியப் பிரதமர் நேரு வரவேற்றார்.

இத்தகைய மகாநாடு ஆசியாவில் தமது நிலைக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று உணர்ந்த மேற்கத்தைய வல்லரசுகள் திரைமறைவில் கயிறிழுக்க ஆரம்பித்தன என்றும் இதற்கு முதல் பலி மகாநாட்டைக் கூட்டிய இலங்கைப் பிரதமர் என்றும் சொல்லப்படுகிறது. 'கொழும்பில் நேரு தனிமைப்படுத்தப்பட வேண்டும். பின் அவரை அடி தேங்காய் போல் உடைத்துவிட வேண்டும்' என்று அமெரிக்க வட்டாரங்கள் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுக்கு அறிவித்திருப்பதாக சில இந்தியப் பத்திரிகைகள் அபிப்பிராயப்படுகின்றன.

இதன்பேரில் கொழும்பு மகாநாடு நேருவை எதிர்த்த மாபெரும் சதியாக மாறலாம் என்றும், ஆனால் எந்த எதிர்ப்பையும் சமாளித்துக்கொண்டு நேரு தமது சமாதான திட்டத்தை முன்வைத்து உறுதியோடு போராடுவார் என்றும் நம்பப்படுகிறது நேருவை எதிர்ப்பதில் பாகிஸ்தான், இலங்கையோடு, பர்மாவும் ஈடுபடலாம் என்றும் யூகிக்கப்

வீரமுனையில் நடைபெற்ற கோரத்தனமான கலவரம்

பட்டினசபைத் தேர்தலின் எதிரொலி பல குடும்பங்களை நிர்க்கதியாக்கிவிட்டது

இருவர் கொலை: பலருக்குப் படுகாயம் வீடுகளும் நெற்களஞ்சியங்களும் தீக்கிரை

(நமது நிருபர்)

புது வருடத் தினத்திற்கு அடுத்த அடுத்ததினங்களில் ஏற்பட்ட ஒரு ஊர்க் கலகத்தினால் பாலுந் தேனும் வழிந்தோடும் பசிய கிராமமான வீரமுனை பேய்கள் உலாவும் ஒரு பயங்கர சுடுகாடாகக் காட்சியளிக்கிறது

இந்தக் கோஷ்டிகளுக்கு இடையில் ஆரம்பித்த இந்தக் கைகலப்பில் துப்பாக்கி, கத்தி, பொல், கல் ஆகிய சகல ஆயுதங்களும் உபயோகிக்கப்பட்டதாகவும் கொலை, கொள்ளை, படுகாயம், தீவைத்தல் முதலிய சகல கோரங்களும் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

பீதியடைந்த கிராம மக்கள் கிராமத்தையே விட்டு வெளியேறிவிட்டதாகவும், பெண்களும் பிள்ளைகளும் திருக்க வீடின்றி காட்டிற்குள் மரத்தடிகளில் பதுங்கிக் கிடப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அறுபதுக்கு மேற்பட்ட வீடுகளும் பலலாயிரம் ரூபாய் பெறுதியான நெற்களஞ்சியங்களும் தீக்கிரையாகிவிட்டன.

ஸ்தலத்திற்கு சென்ற நமது

[8-ம் பக்கம் பார்க்க]

குறைந்த செலவில் கூடிய உற்பத்திக்கு
உங்கள் தோட்டங்களை இயந்திர மயமாக்க

பெர்குஸன்


ட்ராக்டர்கள் இயந்திர உபகரணங்கள்

ட்ராக்டர்கள் இயந்திர உபகரணங்கள்

வாங்குவதற்கு மலிவானது

இலகுவாக உபயோகிக்கக் கூடியது. திறமைவாய்ந்த நிபுணர்களின் உதவி என்றும் உத்தரவாதம் செய்யப்படுகிறது.

இலங்கையில் பெர்குஸன் உற்பத்திகளுக்கு ஏகவினியோகஸ்தர்களான கீழ்க் கண்டவர்களிடம் விபரங்களைக் கேட்டுக் கொள்ளவும்.



பிரவுண் அன் கம்பெனி லிமிட்.,
விவசாயப் பிரிவு.
யூனியன் பிளேஸ், கொழும்பு.

வடமாகாணத்தில் அதிகாரம்பெற்ற வியாபாரி:
ஆர்ன்கோ,
ரெஜிஸ்ட்ரிகோ ரோடு—பரந்தன்.

கீழ்மாகாணத்தில் அதிகாரம்பெற்ற வியாபாரி,
எ. பி. எம். ஜ. எஸ்.
யூனியன் லிமிட்டெட்,
மட்டக்களப்பு.

இலங்கை வாழ் தமிழ் இணைய நிலையின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை எழிலுற வைக்கும் கவிஞனின் கவினுறு கண்கள்

உதிர்ந்து விழும் மலர்களை விடுத்து

பொம்மைகளை உயிர் பெற்றெழச் செய்யும் கவி

தாமரையை வட்டமிடும் வண்டு-மலர் மொக்கில் காதலன் காட்சி

இவற்றில் ஓராயிரம் உணர்ச்சித் துடிப்புகளை வடிக்கும் பாவனை நயம்

எஸ். ஸி. எம். ஸுபைர்

இயற்கை எங்கும் எழில் நிறைந்து பரந்துளது. அழகுக்கு அழகுசெய்யும் பேராற்றல் படைத்த கவிஞரின் பார்வையால் இயற்கை யெழில் புதுமெருகு பெற்றுப் பொலிந்து தோற்றுகின்றது. கவிஞர் இக்பாலின் கருத்துச் செறிந்த ஒரு கவிதை இதைத் தெளிவுறுத்துவதைக் காணலாம்.

"கவிஞனின் இதயத்தில் அழகு
சிறை விரிக்கிறது.
அவனுடைய உவ்வத்தின்
மலர்ச் சிகரத்திலிருந்து
அழகாகிய பகலவன்
ஒளிக்கதிர் பரப்புகின்றான்
அவர் பார்வை அழகை
அதிக எழிலுள்ளதாக்குகிறது
அவன் மந்திர சக்தியால்
இயற்கை அதிகம்
விரும்பத்தக்கதாகிறது

கவிஞரின் கண் பார்வையிற் பட்டுக் கற்பனை மெருகேற்றப் பெற்று கவின் பெற்றிலங்கும் மலர்கள் இன்பத்திலும் இன்பம் பயப்பனவாகும். கவிஞர் இக்பாலின் பார்வை அழகு மலருக்கு எழிலூட்டும் தன்மை வியக்கத்தக்கதாகும்.

மலர்களை அள்ளித் தெளிக்கும் வசந்தகாலம் பிறந்திருக்கின்றது. எங்கும் கண்ணைக் கவரும் எழில் மலர்கள் பூத்துக் குலுங்கித் தென்றலின் தழுவலில் உணர்ச்சிபொங்க அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. பூங்கொத்துகள் பொலிவுடன் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு மரத்தின் கீழாகப் பளிங்கு மேனியுடன் நெளிந்து சென்று கொண்டிருக்கின்றது ஒரு குளிர்ந்த நீரோடை. அசைந்தாடும் மலர்க் கொத்துக்களின் அழகொளிரும் நிழல் அந்தப் பளிங்கு நீரிலிலே மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. அந்தக் காட்சி கவிஞர் இக்பாலின் உயிர் நிரம்பிய பார்வைக்கு,

"கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவனை பவள மலர்
மற்பூத்த விரைக் கொடியோ"

என்று பெரிய புராணத்திலே நம்பியாரூரர் கண்டதிசயித்தது போன்ற ஒரு எழில் மங்கை, கண்ணுடியிலே தன் பொன்னுருவைப் பார்த்துப் பூரிப்படைவது போன்று தோற்றுகிறது.

"அழகி கண்ணுடியிலே
தன்னைப் பார்ப்பது போல
மலர் குலுங்கும் மரக்கிளைகள்
ஓடையின் மேலே
தொங்கிக்கொண்டிருந்தன"

என்று அவர் கூறும் முறை இன்பந் தருவதாகும்.

குலுங்கும் மலர்களின் காட்சியில் மயங்கிய கவிஞருக்கு உதிர்ந்து விழும் மலர்களும் ஒரு உயர்ந்த கற்பனையை உண்டாக்கிவிடுகின்றன. வரண்டு போன வாழ்க்கையின் இறுதிக் காலத்தையே உதிர்ந்து விழும் மலர்கள் உணர்த்துவதாகப் பாடுவர் புலவர். ஆனால் கவிஞர் இக்பாலின் கற்பனை படுத்துறங்கும் குழந்தையின் அரவணைப்பிலுள்ள பொம்மை மேற் படிந்து உயிர்பெற்றிலங்குவதுதான் இன்பந் தருவதாகும். மழலை பயிலும் குழந்தையொன்று தாயன்பு பொழிந்து தான் பாராட்டிச் சீராட்டி வளர்க்கும் ஒரு அழகிய பொம்மையை அணைத்துக்கொண்ட வண்ணமே தூங்கி விடுகின்றது. நெஞ்சிலே கிடத்தி நிறைந்த அன்புடன் தழுவிப் பிடித்திருந்த கரங்கள் தூக்கத்தின் மிகுதியாற் தளர்ந்து விலக நழுவி விழுகிறது அப்பொம்மை. அந்தக் காட்சி கவிஞர் இக்பாலின் கவிதையில் மிளிர்கிறது.

"தூங்கும் குழந்தையின்
கரத்திலிருந்து
நழுவி விழும் பொம்மைகளைப்
போல
வண்ண மலர்கள் உதிர்ந்தன"

என்ற இனிமையிற் குழைந்த அவர் பாடல் என்றும் பயின்று மகிழற்குரியதாகும்.

செங்கதிர்ச்செல்வன் சென்று மேல்வரையில் மறைகின்றன். அழகுற மலர்ந்து திகழ்ந்த நறுந்தாமரை மலர்கள் இதழ் குவித்து அடங்கி நிற்கின்றன. மலர் மஞ்சத்திலே துயில் கொண்ட மணிவண்டுகள் இன்னிசை பாடிப் பறந்துகொண்டிருக்கின்றன. குளிர்ந்த வெண்மதி குறுநகை புரிதலைக் கண்ட நீலோற் பல மலர்கள் கண் விழித்துக் கருத்துடன் நோக்குகின்றன. வில்லிபுத்தூரரின் விரிந்த கற்பனைத் திறன், இவ் வியற்கை நிகழ்ச்சியில் உள்ளத்தையுருக்கும் ஒரு காதற் காட்சியைப் படைத்துக் காட்டுவது படித்து மகிழற்குரியது. வண்டெனுந் தலைவன் தன் அன்புத் தலைவியாகிய தாமரையிடம் கொண்ட மிக்க காதலால் விரைந்து வருகிறான். வாயினுள்ளே கனிவான காதற் கீதத்தை இசைத்துக்கொண்டு சிவந்த மேனியாளை உவந்து நெருங்குகின்றான். 'ஊடுதல் காமத்திற்கின்பம்' என்ற ஞாயப் பெருந்தகையும். தலைவனின் வரவெதிர் குறித்து நெடுநேரம் காத்திருந்த தாமரையாந் தலைவி, பிந்திய தலைவனை நொந்தவள்போல ஊடி நிற்கின்றாள். 'ஊடலை விட்டு உன் சிவந்த இதழ்களை நெகிழ்த்தி ஒரு முறை புன்னகைத்திடு கண்ணே' என்று இரங்குவான்போல வண்டு சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருக்கின்றது. பக்கத்திலே நின்று இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த நீலோற் பல மலர்களாகிய கணிகை மாதர்கள், கண்டவர் மனத்தைக் காந்தம் போற் கவர்ந்திடும் தம் முறுவலைக் காட்டி, 'அன்புத் தலைவனே! அங்கு நின்றேன் தயங்குகின்றாய். எம்மிடம் வந்தால் இன்ப மொழிகள் பேச வராதா?' என்று வாய்திறந்து அழைக்கிறார்கள்.

'கொண்டமென் சிறைவண்
டென்னுங் கொழுநருக்
கிடங்கொ டாமல்
முண்டகக் குலத்து மாதர்
முகங்குவித் தூடி நிற்பக்
கண்டெதிர் நின்ற காதற்
கயிரவக் கணிகை மாதர்
வண்டுறை நின்று தங்கள்
வாய்மலர்ந் தழைக்க லுற்றார்'

இங்கு தாமரை மலரும், தண்மதியின் தழுவலால் மலர்ந்து விளங்கும் நீலோற் பல மலரும் கவிஞரின் பார்வையால் உயிர் பெற்றெளிர்வது நோக்கி உணரத்தக்கதாகும்.

இதே கவிஞர், பால் நிலாப் பொழியும் சந்திரன் நீலவானிலே தோன்றியதால் ஒளி பெற்றிலங்கும் தாரகைக் கூட்டம், கானிலே மலர்ந்து அணி பெறத் திசழும் முல்லை மலர்கள் வானிலே எழுந்து அழகுற விளங்குவதுபோன் றிருக்கிற தெனக் கூறுமாற்றான் முல்லை மலர்க்கு நட்சத்திரப் பதவியளித்துப் பொலிவுறச் செய்யும் பான்மை போற்றி மகிழத் தக்கதாகும்.

"கானெலாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற"

என்பதே முல்லை மலருக்கு அவரூட்டும் எழிலாகும்.

மிதிலை மாநகர் வீதியிலே முனிவரோடும், தம்பியோடும் சென்ற மேகவண்ணனுகிய இராமனை, மேல் மாடியிலே நின்று கண்டு, கண்ணோடு கண்ணினை நோக்கிக் கருத்துமொன்றித்தபின் சென்ற அண்ணலை நினைந்து சிந்தையழிகிறாள் சீதை. பிரிவாற்றுமையினால், துயில் கொள்ளாது, இரவு முழுதும் அவன் நினைவொன்றே நெஞ்சை வருத்தப் பஞ்சணையிலே துவண்டு விழுகிறாள். காதலனையெண்ணிக் கருத்தழிகின்ற சீதைக்குக் காலையில் மலர்ந்த கமலத்தின் மூலம் ஆறுதலளித்து அதற்கு அழியாப் புகழைத் தந்துவிடுகிறார் கம்பர். பிரிவின் துயரால் நிலை கொள்ளாது பொய்கையின் பக்கமேனும் சென்று ஆறுதல் பெறுவோமென நினைக்கிறாள் சீதை. அவளுடைய எண்ணம் நிறைவேற ஏதுக்கள் அங்கிருந்தது கண்டு அகங் குளிர்கிறாள் அவள். செந்தாமரை மலரிலே தனதன்பின் செல்வனுடைய சிவந்த கண்களைக் காணுகிறாள்; செழித்து வளர்ந்த இலைகளிலே அவனுடைய மேனி வண்ணத்தையும் காண்கிறாள். 'அலர்ந்து நோக்கும் கமலங்களே! எனத் தாசை நாயகனின் அணிபெறு முருவைக் காட்டி என்னுயிர் தரிக்கும்படி செய்த உங்களுக்கு என்ன கைம்மாறியற்றவேனே!'

"பெண்இவண் உற்ற தென்னும்
பெருமையால் அருமை யான
வண்ணமும் இலைகளாலே
காட்டலால் வாட்டந் தீர்ந்தேன்
தண்ணறுங் கமலங்காளென்
தவிர்திற முண்ட கண்ணின்
உண்ணிறம் காட்டி னீரென்
உயிர்த்தர உதவினீரே!"

என்று வாயாரக் கூறி வழுத்துகிறாள் சீதை.

கவிஞனின் பார்வையாலே கஞ்ச மலர்கள் சீதையின் உயிர் தரித்திருக்க உதவியாயிருந்த தன்மை ஊன்றி நோக்கத்தக்கதாகும்.

கம்பரின் கனிவான நோக்கினாலே ஒரு பெண்ணை உயிர் தரித்திருக்கச் செய்தது ஒரு மலர். அதே கவிஞரின் பார்வையிலே பட்ட இன்னொரு மலர் ஏமாற்றமடைந்த ஒரு எழில் மயிலின் செயலைக் கண்டு குறுநகை புரிகின்றது.

வனவாசத்திற்குப் புறப்பட்டு வாட்கண் நங்கையுடன் வழிநடந்தான் இராமன். எழி

(15-ம் பக்கம் பார்க்க)

கருத்து மேடை:

புரட்சிக் கவிஞர் பாரதியார்

ரசயா

பாரதியார்? அவரை சிலர் வேதாந்தக் கவி என்று எழுதுவதைப்பற்றி மிகவும் ஆச்சரியப்படுகிறேன். பாரதி சக்தி வணக்கம் பாடியது உண்மைதான். இதைக் கொண்டு பாரதியை முற்றுந் துறந்த வேதாந்தக் கவியாக வர்ணிப்பது சரியல்ல.

பாரதியார் தனிய வேதாந்தக் கவிகளை மட்டும் பாடியிருந்தால் பாரதியின் புகழ் இன்று ஓங்கிய வண்ணமாக இருக்குமா? பாரதி ஒரு உலக மேதையாக—பாருலக கவிஞனுகத் தோன்றக் காரணமாயிருப்பது அவர் பாடிய புரட்சிக் கவிகளே.

ஆதிகால மனிதர்கள் கல்லாயுதம் பாவித்தார்கள். இன்றைய மனித குலம் அணுக்குண்டு ஆயுதம் பாவிக்கும் விஞ்ஞான நிலையுள்ளதை யாரும் மறுக்க முடியுமா? இதனால் அணுக்குண்டை நான் வரவேற்பதாக நினைத்துவிட வேண்டாம். ஆனால் மனிதர்கள் விஞ்ஞான ரீதியில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறேன்.

பாரதி பாடும் பொழுது வேதாந்தக் கவிகளைப் பாடினார். ஆனால் அவரது அறிவு வளர வளர ஆயினையும், அம்பாவையும் விடுத்து ஏழை மக்களின் வறிய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டிப் பாடினார். இன்று புரட்சிக்காரர் புதிய சமுதாயத்தை அமைக்கப் போராடுவது போல, மக்களுக்கு புரட்சியை — சமுதாய மாற்றத்தை எடுத்துக் கூறுவது போலவே அவரும் பின் புரட்சிக் கவியாக மாறிவிட்டார். சில அடிகள்;

நெஞ்சு பொறுக்குதில்லையே
—இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைத்துவிட்டாலோ
பஞ்சமோ பஞ்சமென்றே
பரதவிக்கிறார்
அதன் காரணம் இனதென்று
அறிந்தீலார்

என்கிறார். பஞ்சத்தைப்பற்றிப் பாடும்பொழுது அதன் காரணத்தைப்பற்றிஅறியும்படி பாடுகிறார். இதை ஏன் மக்கள்மத்தியில் பாரதியார் பாடவேண்டும்? உண்மையில் மக்கள் பஞ்சத்தினால் படும் வேதனையை நினைத்துப் பாடவில்லை. அதன் வேதனையைத் துடைக்க வேண்டுமானால் மக்கள் பஞ்சத்திற்கு காரணமாயிருக்கும் சர்க்காரை தூக்கியெறிய வேண்டுமென்பதுதான்.

ஜார் மன்னன் ஆட்சியிலே ரஷிய தேசத்திலே பஞ்சமிருந்தது. மக்கள் பஞ்சம் வறுமை இவையால் தாம் பாதிக்கப்படுவதை அரசாங்கத்தின் அரசாட்சியே என்று உணர்ந்தனர்; ஜாரின் தலை உருண்டது. அங்கும் புத்தாட்சி புரட்சி மூலம் பூத்தது. பஞ்சம் தொலைந்தது. பட்டினி வாழ்வு ஒழிந்தது. மக்கள் சோவியத் ஆட்சியிலே சுபிட்சத்துடன் வாழ்கிறார்கள். இந்த நாட்டின் சுபிட்சத்தைப் போல பாரதி பிறந்த நாட்டிலும் வர வேண்டுமென்பதுதான் பாரதி பாடிய இந்த பஞ்சப் பாட்டு.

அடுத்ததாக ஒரு பாட்டில் சில அடிகள்

எழுந்தது யுகப் புரட்சி சரிந்தது
சடசட வென்று ஜார் ஆட்சி
சரிந்தது

என்று பாடுகிறார். ஏன் பாரதி இந்த யுகப் புரட்சியைப்பற்றிப் பாடவேண்டும்? ஜார் மன்னன் ஆட்சி ஒழிந்தது. ஆனால் அது ஏன் பாரதிக்கு யுகப் புரட்சியாகத் தென்பட்டது? அடிமை, வறுமை, சுரண்டல் நிறைந்த ஆட்சியை ஒழித்து, ஒரு சுரண்டலற்ற—சுபீட்சமான ஆட்சி பூத்தது. மக்களைச் சுரண்டி வாழ்ந்த ஆட்சி தொலைந்த தோடல்லாமல், அந்தச் சுரண்டப்பட்ட மக்கள் ஆள அரசு செலுத்துவதை உரிமையாக்கப்பட்டுள்ளதைக் கண்டுதான், ஒரு யுகமாக சுரண்டி வாழ்ந்தவர் காலம் ஒரு காலம், அந்தக் காலம் தொலைந்து சுரண்டப்பட்ட வர்கள் ஆளுவது ஒரு கால மாற்றம்—இது ஒரு யுக மாற்றம் என்பதையே பாரதியார் பாடியுள்ளார். இந்த யுகப் புரட்சியைப்பற்றி வெறும் வெற்று வேட்டு கவிஞர்கள் பாடுவார்களா? பாடத்தான் அவர்களுக்கு மனம் வருமா? உண்மையான ஒரு புரட்சிக் கவிஞன்தான் இந்த பாடலைப் பாடுவான். அந்தப் பாடலை—அதைத்தான் புரட்சிக் கவி பாரதி பாடினார். இது மாத்திரமல்ல.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்

என்று உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்கிறார் பாரதி. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு—அந்நாடு வாழ்வதற்கு ஜீவநாடியாக உள்ள வர்கள் உழவர்களும், தொழிலாளர்களுமே. ஆகவே இந்தப் பாடல்களை வேதாந்திகளையாராவது பாடினார்களா? அவர்களுக்கு பாடத்தான் மனம் ஒப்புமா?

இத்துடன் பாரதி நிற்கவில்லை. சீர்திருத்த, வர்க்கபேதமற்ற அனம்பின் கவிஞனுகத் திகழ்கிறார்

வீணில் உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்


என்று உழவன் ஊதியத்திலே உண்டு கழித்து கொளுத்து சோம்பேறிகளாக சுரண்டல் வாழ்வு நடத்தும் முதலாளிகளை சாடுகிறார் தமது புரட்சிக் கவியான நிந்தனைமூலம். இதிலிருந்து நாம் காண்பதென்ன? பாரதி ஒரு வேதாந்தியல்ல! அல்லது வெறும் வெற்று வேட்டு வர்க்க பேதமற்ற சீர்திருத்தக் கவியுமல்ல!! அவர் ஒரு புரட்சிக் கவியென்று. இன்னும்,

முப்பது கோடி மக்கள்
முழுமைக்கு
பொதுவுடமை ஒப்பில்லாத
சமுதாயம்
வாழ்க வாழ்கவே

என்று முப்பது கோடி மக்கள் நல் வாழ்வு இந்திய நாட்டிலே வாழவேண்டுமானால் பொதுவுடமை ஆட்சி வேண்டுமென்று வேண்டுகிறார். இது வரை எந்த சீர்திருத்த கவிஞனும் வேதாந்தியும் பொதுவுடமையாட்சியைப் பற்றி பாடினார்களா? ஆகவே உண்மையான பொதுவுடமைக் கவிஞன்தான் புரட்சிக் கவிஞன், அது மட்டுமல்ல; புரட்சிக் கவிஞனுக ஒருவன் தோன்றவேண்டுமானால் பொதுமக்களுடைய பிரச்னையைப்பற்றிப் பாட வேண்டும். அவர்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டியாயுள்ள கவிதைகளைப் பாட வேண்டும். கொடுமை செய்யும் அரசாங்கத்தை தாக்கிப் பாடும் பாடல்களை மட்டும் பாடினால் போதாது; அந்த ஆட்சியைத் தொலைத்து சுபீட்சமான ஆட்சியமைக்கப்படும் வழிகளைக் காட்டவேண்டும்; அதற்கான பாடல்களைப் பாட வேண்டும். இதனால்தான் இவை அத்தனையும் நிறைந்துள்ள கவிஞனைத்தான் புரட்சிக் கவிஞன் என்று மக்கள் போற்றுவார்கள். அந்தப் புரட்சிக் கவிஞர்களுக்கு மக்கள் மத்தியில் அழியாப் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

ஆகவே பாரதி மக்களுக்காகப் பாடினார்—மக்கள் வளமான செழித்த வாழ்வு அமைக்கும் முறைகளைப்பற்றி பாடினார். இதனால்தான் பாரதி நாமம் புகழ் வளர்ந்த வண்ணமாக தோன்றுகிறது. இன்று மக்கள் மத்தியிலே இந்தப் பாரதி புரட்சிக் கவியாக இருப்பதனால் என்றும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி ம. பத்மாவதி, தீருகோணமலை

கே: தங்களுக்கு கோயில்கள் என்றால் பிடியாதாம். இது உண்மையா?

ப: திறந்த கோயில்கள் எனக்குப் பிடிக்கும்; பூட்டி வைக்கும் கோயில்கள் மீது தான் எனக்கு வெறுப்பு. கோயில்களில் ஆண்டவனுக்கு மட்டுமல்ல ஏழைகளுக்கும் படித்துறங்க இடங்கிடைக்க வேண்டும். வெளவால்களைவிட மனிதர்கள் உயர்ந்தவர்கள் என்பது என் கருத்து.

***

பூ. தங்கராசா, ஊர்காவற்றுறை

கே: இன்றைய அரசியலில் பஞ்சாட்சரம் எது?

ப: அமெரிக்கா.

***

எம். செல்வரட்ணம், காங்கேசன்துறை

கே: பாராளுமன்றத் திறப்புவிழாவில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதை மிகச் சுருக்கமாக எப்படி வர்ணிக்கலாம்?

ப: ''தமிழனின் தலைப்பாகை பறந்தது'' எனலாம்!

***

செல்வி ஆர். இராசப்பாக்கியம், மட்டக்களப்பு

கே: இத்தனை கேள்விகளுக்கும் பதில சொல்ல எப்படிப் பழகினீர்கள் குயுக்தியாரே?

ப: தினம் நான் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆபீஸுக்கு கொண்டுபோன இரண்டு ரூபாயை எப்படிச் செலவு பண்ணினேன் என்பது முதல் கொண்டு சினிமாவுக்கு எந்த சாரியை உடுத்துப் போவது என்பதுவரை தினம் தினம் ஸ்ரீமதி குயுக்தியார் கேட்கும் கேள்விகள் ஒன்று இரண்டா?

***

க. செல்லம்மா, பருத்தித்துறை

கே: புதுவருஷத்தில் நான் ஒரு பிரதிசனை செய்துகொண்டிருக்கிறேன். என்ன சொல்லும் பார்க்கலாம் குயுக்தியாரே?

ப: புதுவருஷத்தில் தவறுமல் வாராவாரம் ஒரு பிரதி சுதந்திரன் வீலை கொடுத்து வாங்குவதென்றும் அதில் குயுக்தியாரைத் தவறுமல் படிப்பதென்றும் பிரதிக்ஞை செய்திருப்பீர்கள்.

***

★பி. டி. சுந்தரமூர்த்தி, யாழ்ப்பாணம்

கே: பெண் எப்படிப்பட்டவள்?

ப: குழந்தையாயிருந்தால் அவள் ஒரு பாவை; குமரியாய் இருந்தால் அவள் ஒரு பிரச்னை; மனைவியாய் இருந்தால் சர்வாதிகாரி; அன்னையாய் இருந்தால் அன்பின் தெய்வம்; பாட்டியாய் இருந்தால் ஒரு ஒட்டை கிராமபோன் றெக்கோட்!

***

எல் பஞ்சாபிகேசன், கண்டி

கே: ஒரு காதலனிடம் ஒரு காதலி எதை எதிர்பார்க்கிறாள்?

பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப் படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்தகேள்வியை அனுப்புவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

ப: தன்னை அவன் நேசிக்க வேண்டும் என்பதை விட வேறொருத்தியை அவன் நேசித்து விடக் கூடாது என்றுதான் எதிர்பார்க்கிறாள்.

***

ப. குருநாதன், சுன்னாகம்

கே: ஒரு விதவையைக் கலியாணம் செயயும் ஒரு இளைஞனின் மனம் எப்படியிருக்கும்?


ப: திக்குத் தெரியாத காட்டில் வழித்துணை கிடைத்த பிரயாணியின் மனோ நிலையை ஒத்திருக்கும்.

***

ரா. பஞ்சாட்சரம், ரக்வானை

கே: 'காலில்லாதவன் நொண்டி' — இது பழமொழி. ஒரு புதுமொழி சொல்லும் பார்க்கலாம்?

ப: கொழும்பைப் பொறுத்தவரையில் 'கார் இல்லாதவன் நொண்டி'.



சோம்பரத் தோற்றத்தோடு புதிய பிரிட்டிஷ் கப்பல் "இபிரா" வெளிவருகிறது. சமீப காலத்தில் கட்டப்பட்ட பிரமாண்டமான இரு கப்பல்களில் இது ஒன்று "இபிரா" 718 அடிகள் நீளமுள்ளது இதில் 674 முதலாம் வகுப்புப் பிரயாணிகளுக்கும் 753 டூரிஸ்ட் வகுப்பு பிரயாணிகளுக்கும் இடமுண்டு. இதில் 711 அதிகாரிகளும் ஊழியர்களும் இருப்பர்.

ஜ. ஜெயரத்தினம், மட்டக்களப்பு

கே: இன்றைய மனிதன் கடவுளுக்கு காது கொடுக்கிறானோ காதலுக்கு காது கொடுக்கிறானோ?

ப: இன்றைய மனிதன் என்ன அன்றைய மனிதனும் காதலுக்குத்தான் காது கொடுத்தான். ஏடன் தோட்டத்துக் கனியை உண்ண வேண்டாம் என்றார் கடவுள். கேட்டானா மனிதன்? பழம் வேண்டுமென்று ஏவாள் கேட்டாள். உடனே அவள் பேச்சுக்கு செவி கொடுத்தான்.

***

த. முருகுப்பிள்ளை, குரும்பசிட்டி

கே: இதற்கு இருவர் வேண்டும். எதற்கு?

ப: நட்பிற்கு.

***

ந. சு- மனியம், காரைநகர்

கே; 'என் கடன் பணி செய்து கிடப்பதே'. உம் கடன்.....?

ப: என் கடன் மாதச் சம்பளத்தில் முதலைக் கொடுக்க முடியாமல் வட்டியை மட்டும் கொடுத்துவிட்டு பட்டினி கிடப்பதே!

***

எஸ் பி. கிருஷ்ணன், மட்டுவில்

கே: நமது நாட்டிற்கு ஏற்ற ஆட்சி எது?

ப: சுயாட்சி

***

சி. வேலாயுதம், கொடிகாமம்

கே: தொடங்குங் கால் துன்பமாய், பின் இன்பம் பயப்பது எது?

ப: கல்வி.

கே: மெஸ்மரிசம் என்ற வித்தை யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? அதற்கு தமிழ் நாட்டில் என்ன பெயர்?

ப: ஏவாளினால் கண்டுபிடிக்கப்பட்டது, தமிழ் நாட்டில் அதற்குத் 'தலையணை மந்திரம்' என்று பெயர்.

***

அ. மு. அ. செயினுலாப்தீன், மன்னார்

கே: வயோதிபர்கள் கலியாணம் செய்வது எதற்காக?

ப: தள்ளாத வயதில் சல்லாபத்திற்காக அல்ல. சம்பளமில்லாமல் ஒரு வேலைக்காரியை அமர்த்திக் கொள்வதற்காக.

***

ம. குருச்சந்திரன், திருகோணமலை

கே: அந்தக் காலத்தில் திரௌபதிக்கும் இந்தக் காலத்து நவநாகரீக நங்கைக்கும் ஒற்றுமையுண்டா?

ப: இரண்டு வகைகளில் ஒற்றுமை யுண்டு. ஒருவகையை நான் குறிப்பிட விரும்பவில்லை. மற்றொருவகை: அந்தக் காலத்து திரௌபதியின் மானத்தைக் காப்பாற்ற எத்தனை சேலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தனவோ அதற்கு இரண்டுமடங்கு சேலைகள் இந்தக் காலத்து நாரிமணிகளின் உடுப்புப் பெட்டிகளில் இருக்கின்றன;

***

த. சரோஜினிதேவி, நாயன்மார்கட்டு

கே: ஐயா, குயுக்தியாரே, எந்த நாளும் சந்தோஷமாக வாழ முடியாமல் இருக்கிறது. அப்படி சந்தோஷமாக வாழ என்ன செய்வது?

ப: சந்தோஷத்திற்கு ஆசைப்படாமல் கஷ்டமே

இரவுக்கொரு செய்தி!

"தில்லைச்சிவன்"

முல்லை மணத் தென்றலிலே முயங்கி இன்ப
முறுக்கேறி அவள் நினைவில் மூழ்கி அந்தக்
கிள்ளை மொழியாளுயிர்ப்புக் கேங்கும் என்னைக்
கிண்டல் செய்வான்போல் வானில் நிலவைப் பெய்து
கள்ளி அவள் சுடர்விழியும் கனகமார்பும்
கருங்கூந்தல் செறிந்த இருட் காடும் காட்டி
எள்ளி நகையாடுகிறுய் இரவே! நீதான்
இனி யொருகால் வந்தென்னை இம்சிக்காதே!

2

'காதல்' எனுங் கொடுந்தீயில் வெந்து இன்பக்
கடல் காணத் தத்தளிக்கும் ஏழை என்னை
வேதனையே தரும் கொடிய மதியங் காட்டி
விறகிட்டுத் தூண்டுகிறுய் இரவே யிந்தப்
பேதை மதி யேன் உனக்கு? களவுஞ் சூதும
பிறப்பது முன் இடத்தன்றே அதனல் இந்தச்
சாதனையில் நீ விண்ணன் ஒப்புக் கொண்டேன்
சண்டையின்றிச் சரணடைந்தேன் தஞ்சம் நீ தான்!

3

'காலையிலே அரும்பாகிப் பகலில்ப் போதாய்
காதல் மணப் பூங் கொடியின் கண் அலரில்
மாலையிலே மலர்கின்ற மையல் நோயை'
வளர்விக்கும் இரவே யுன் வஞ்சந் தீர்க்க
வேளையிது என்றறிந்தாய்! வென்றுய்! இந்த
வெற்றி வெகு கால மல்ல இன்னுங் கொஞ்ச
நாளையிலே என்னிதயம் தழுவுமந்த
நளின மலர் மலர்ந்து விடின் தெரிந்துபோகும்

இயல்பாக வருவது என்று மனதை உறுதிப் படுத்திவிட்டால் துன்பம் அடையாமல் இருக்கலாம் என உபாயம் கூறுகிறார் வள்ளுவர். ''இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பமுறுதல் இலன்''

கே: குயுக்தியாரே நீர் ஓர் காவாலியென்று சொல்லுகின்றார்கள். உண்மைதானு?

ப; உண்மைதான். அதாவது அப்படிச் சொல்கின்றவர்களை நான் காப்பாற்றுகின்றேன். கா—வாலியென்றால் வாலுள்ளவர்களைக் காப்பவன் என்று அர்த்தம்.

***

க. ஆறுமுகம், அக்கரைப்பற்று

கே; கடவுள் அருளைப்பெற எதுவேண்டும்?

ப: விட்டமின் 'ப' வேண்டும். அதாவது அந்தக் காலத்தில் 'பக்தி' இந்தக் காலத்தில் 'பணம்'

***

எஸ். முருகேசன், குரும்பசிட்டி

கே: அருளுக்கும், மருளுக்கும், தெருளுக்கும் வித்தியாசமென்ன?

ப: பொருள்தான்!

***

எம். சுப்பையா, தெனியாகல

கே: மனிதனுக்கு ஏழு பிறவிகள் என்கிறார்களே இது உண்மையா?

ப: மனித வாழ்க்கையிலேற்படும் ஏழு நிலைகளைத்தான் இப்படி வர்ணித்தார்கள் நமதுமுன்னோர்கள். அவையாவன 1. கர்ப்பம், 2. பிரசவம், 3. பால்யம், 4. வாலிபம், 5. முதுமை 6. முதுமை 7. மரணம்.

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் கார்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" மதியத்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 550. சிறியது ரூ. 3-00. வி.பி.பி. செலவு வேறு


புறோப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை


நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 2.



பிரவேசக் கட்டணம் சதம் 50



பிரவேசக் கட்டணம் சதம் 50



மேல் இரண்டு கட்டங்களுக்குப் பிரவேசக் கட்டணம் ரூ 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....சதம்.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

ரொக்கப் பரிசு ரூ 1,000-00
முதற் பரிசு ரூ 600-00
இரண்டாம் பரிசு ரூ 300-00
அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு பரிசு ரூ 100-00

முடிவு திகதி 11-5-54--- நேரம் பி. ப. 5-00மணி

சரியான விடை 16-5-54ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விவரம் 23-5-54ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 29-5-54ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1 தொண்ணூறு மன்னர்கள் ஆட்சி புரிந்ததாகச் சொல்லப்படும் இலங்கையின் புராதன நகரம்.
5 ஒரு பெண்ணுக்கு இது ஏற்பட்டால் அவள் முகத்தில் தெரியும்.
8 செவிலித்தாய்.
9 யாழ்ப்பாணத்தில் அரசு புரிந்த இந்த வீரத் தமிழ் மன்னன் அன்னியர்கள் இந்நாட்டில் அடியெடுத்து வைக்கக் கூடாதென போர்த்துக்கீசரோடு சமர் புரிந்தான்.
10 பன்றி
11 கிராமத்து மக்கள் இந்த இடத்தில் கூடுவதுமுண்டு.
12 பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து தமிழ் மக்களுக்கு மங்காப் புகழைத் தேடித் தந்த மாவீரன்.
17 சாபத்தால் மூப்படைந்த இந்த மன்னன் தன் முதுமைப் பருவத்தை தன் வாலிப மைந்தனுக்கு மாற்றிக் கொடுத்து அவன் இளமையை இவன் பெற்றுக் கொண்டதாக புராணம் கூறுகிறது.
18 இப்பதத்தை அடிதலை மாறிப் போட்டால் அது நாய் போடும் ஆரவாரத்தைக் குறிக்கும்
19 குழந்தை
20 பலவீதமான இது கிடைக்கும் என்பதற்காக சுயேச்சையாகப் போட்டியிட்டு வென்ற சில பாராளுமன்றப் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன சேர்ந்திருக்கிறார்கள்
22 ஆபிரிக்காவிலுள்ள இது தான் உலகத்தில் மிகப் பெரிய பாலைவனமாகும்.
23 ஒரு பறவை
24 இந்த நேரத்தில் சூரியன் வெப்பம் குறைவாகக் காணப்படும்
25 வாசனையுடையது
26 இது பிடித்துச் செத்துப் போகிறவர்களுமுண்டு

மேலிருந்து கீழ்

1 முருகக் கடவுள்மீது திருப்புகழ் பாடி இவர் தம்மைப் பீடித்திருந்த குஷ்ட ரோகத்தைப் போக்கிக் கொண்டாராம்
2 முறைக்கு மாமியாரான இவளையும் கிருஷ்ணன் தன் பிரிய நாயகியாகக் கொண்டான்.
3 கண்டிக்கு விஜயம் செய்யும் எலிசபெத் மகாராணி தரிசிக்கும் இந்த மாளிகையில் புத்த பகவானுடைய புனித பல் வைக்கப்பட்டிருக்கிறது
4 அறிவு
6 சீதை
7 மணமுள்ள ஒரு மலர்
11 உண்மையானது
12 வட அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய நீர்வீழ்ச்சி.
13 கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் மசக்கை
14 மன்மதனின் மனைவி
15 நீண்டு கிடப்பது
16 அசோக சக்கரவர்த்தியின் மகனை மகிந்தன் வேட்டைக்குச் சென்ற தேவநம்பியதீசனை இந்த இடத்தில் சந்தித்துத்தான் புத்த மதத்தை முதன் முதல் இலங்கையில் பரப்பத் தொடங்கினன்.
19 இமாலய மலைத் தொடரிலுள்ள ஒரு உயர்ந்த சிகரம்
20 தென்னிந்தியர்களின் நித்திய உணவில் இது சேராமலிராது
21 தராதரம்
23 மட்பாண்டம்
24 கள்

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி விதிகள்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக வினியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

2 விடைகள் தெளிவாக மையினால் எழுதப்படவேண்டும். எழுத்துக்கள் அழித்தெழுதப் படலாகாது. மாற்றங்கள் செய்யப்படலாகாது. எல்லாக் கட்டங்களும் பூரணமாக நிரப்பப் பட்டிருக்கவேண்டும்.

3 ஒவ்வொரு கூப்பனிலும் போட்டியில் கலந்து கொள்பவரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்படவேண்டும்.

4 (அ) ஒரே கவரினுள் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படுவதானால் அவை அனைத்தும் ஒரு போட்டி நேயருடைய கூப்பன்களாகவே இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படும்போது எல்லாக் கூப்பன்களுக்குமுரிய கட்டணமும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும். அததோடு கூப்பன்கள் அனுப்பப்படும் எல்லா கவர்களின் பின் புறத்திலும் போட்டியில் கலந்து கொள்ளும் நேயருடைய பெயரும்விலாசமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(ஆ) இப்போட்டிக்குரிய பிரவேசக் கட்டணம் விடை ஒன்றிற்கு சதம் 50 வீதம் மேற்பட்ட விடைகளுக்கு ரூ 1-00

(பின் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
இராணி வருகையால் உணவுப்பொருட்கள் விலையேற்றம்

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இலங்கை விஜயத்தில் ஏழை மக்களின் வரிப்பணம் மட்டுமல்ல அவர்களது வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுவிட்டது. ஏழைப் பொதுமக்களின் உணவுப்பொருட்களின் விலை கடந்த இரு வாரங்களாக உச்சாணிக் கொம்பிலேறிவிட்டன. இதனால் ஏழைத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பழவகைகளுட்படக் காய்கறி சாய்ப்புச் சாமான்கள் அனைத்தும் இரட்டிப் பங்கு உயர்ந்த விலையில் விற்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாணத்தில் உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. கடந்த இரு வாரங்களும் காய்கறிகளும், பழவகைகளும் இங்கிருந்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் இறக்குமதி பெருமளவு ஸ்தம்பித்துவிட்டது.

(ந—நி)

காதிமார் சபை
முறையீடு நிரல் 1-5-54 காலை 10 மணி

முறையீடு: கும்பனித் தெரு, கொழும்பு. காதி கோடு வழக்கு இலக்கம் 5828.
வாதி: ஹுஸைன் மீஸா ஹஜீரா பீபீ.
பிரதிவாதி: முஹமது யூசுப் மரைக்கார் ரவூன் மஹர். வாய்தாவை நிர்ணயிக்கும் கட்டளை பிறப்பித்தல்.

முறையீடு: 566 கும்பனித் தெரு, கொழும்பு. காதி கோடு வழக்கு இலக்கம்: 5858
வாதி: முஹமது சாலி சித்தி ஹசிமா.
பிரதிவாதி: தஸ்மான் அப்துல் ராஹிம் பராமரிப்பு. முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

முறையீடு: 567. கும்பனித் தெரு. கொழும்பு. காதி கோடு வழக்கு இலக்கம் 5785.
வாதி: முஹம்மது சரீப்டீன் அறிவது வலீலா.
பிரதிவாதி: அஹமட் முஹம்மது சமீன் பராமரிப்பு முறையீடு நிராகரிக்கப்பட்டது

'அலகு' குத்திக்கொண்டு தி. மு. க. வினர் ஊர்வலம்!

தேவாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 'அலகு' குத்திக் கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

கடவுள் அருள் இல்லாமலும் 'அலகு' குத்திக்கொள்ளலாம் என்பதைக் காட்டுவதற்காகத் தான் அவர்கள் 'அலகு' குத்திக்கொண்டு சென்றதாகத் தெரிகிறது. அத்துடன் பால் காவடி, இளநீர் காவடி முதலியவற்றையும் அவர்கள் தூக்கிச் சென்றார்கள்.

'பகுத்தறிவு வளர்க!' 'மூட நம்பிக்கை ஒழிக!' என்று கோஷமிட்டுக்கொண்டு அவர்கள் ஊர்வலம் சென்றனர். மேற்படி ஊர்வலத்தை திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் கோ. கந்தசாமி ஆரம்பித்துவைத்தார்.

உரிமையற்ற சமுகத்தில் உண்மைக் காதலின் விதி என்ன? கலப்பு மணத்தின் கதி என்ன? சமுகம் அவனை எதிர்த்தது! அவன் சமுகத்தை எதித்தான!! வென்றது அவனா? சமுகமா? 'சுதந்திரன்' சிறுகதைப் போட்டியிற் பரிசு பெற்ற செ. பரமேஸ்வரன் எழுதிய

"கொந்தளிப்பு"

என்னும் இலட்சிய நாவினம் விரைவில் வருகிறது

தவிப் பிரதிக்கு 55 சதம் போஸ்டல் ஓடர் உடன் எழுதுங்கள்.

C. S. PARAMESWARAN
Araly south ARALY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் அடிச்சுவட்டில் வந்த பகுத்தறிவுக் கவிஞன் பாரதிதாசன்

தேனென இனிக்கும் செந்தமிழ்க் கவிதைகளைத் திகட்டாது படைக்கும் பாவலர்

"கவிஞர் பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். கதைக்காக ஒருமுறை, கலைக்காக ஒரு முறை, கவிக்காக ஒரு முறை, கருத்திற்காக ஒரு முறை, இன்பத்திற்காக ஒரு முறை எழிலுக்காக ஒரு முறை, கொள்கைக்காக ஒரு முறை, குறிப்பிற்காக ஒரு முறை படித்தேன். ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு முறை படித்தேன் எனவே இனித்தது" என்று ஒரு அறிஞர் பாரதிதாசன் கவிதை களைப் பாராட்டுகிறார்.

அப்படிப்பட்ட பாரதிதாசன் கவிதைகளை தமிழ் மக்கள் இன்னும் உரிய முறையில் உணர்ந்து பாராட்டாதது ஏன்? அச்சாணி மண்டபத்தில் கொலுவிற்றிருந்து அதல பாதாளத்தில் அள்ளியெறியப்பட்ட தமிழனே கணை விழி, கடமையைச்செய் என்கிறார் கட்டுரை ஆசிரியர். இம்மாதம் 29—ந் தேதி வரும் புதுவைதந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்ததினத்தையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

—ஆசிரியர்



சுப்பிரமணிய பாரதியார்

சிறையில் கிடக்கும் சைதியின் சிந்தனை, சிறைக்கதவுகளையும், மதிற்சுவர்களையும் தாண்டி, மலர்க் காடுகளிலும், மக்கள் கூடுமிடங்களிலும் பறந்து செல்வதைப் போல் கவியின் எண்ணங்களும் பரவும் அவனே உண்மைக்கவி. உயிர்க்கவி. புரட்சிக்கவி. உலகக் கவி இத்தவரிசையிலே தமிழர்க்கு கிடைத்தவர் பாரதிதாசன். எனவே பாரதியாரிலிருந்து பாரதிதாசனை பிரித்தெடுத்து, வேறு படுத்திக் காட்ட முயல்வது உடலிலிருந்து உயிரைப் பிடுங்கும் முயற்சியை ஒப்பதாகும்.

ஒருசில கவிகள் மூலம் பாரதியையும், பாரதிதாசனையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இனிமையும், கனிமையும், தனித்தியங்கும் தகைமையும் வாய்ந்த தமிழ் மொழியை பாரதியார்,

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்..."

என்று பெருமையோடு கூறுகிறார். பாரதிதாசனோ

இனிமைத் தமிழ் மொழி
எமது—எமக்
கின்பந் தரும்படி வாய்த்த
நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு—
எங்கள்
கதியில் உயர்ந்திட
யாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லே
—எங்கள்
தமிழினும் வேறெங்கும்
யாங்கண்டதில்லே!

என்று சொல்கிறார். தமிழ் மொழியைப்போல் இனிய மொழியை உலகெங்கிலுமே தான் காணவில்லை என்ற பாரதியார் கூற்றை வலியுறுத்துவதாகவே, தனிமையான சுவையுள்ள சொல்லே தமிழைவிட வேறு எங்கும், எந்த மொழியிலும் தாம் கண்டதில்லை யென அறுதியிட்டு பாரதிதாசன் சொல்கிறார்.

பிறநாட்டாருடையசிறந்த ஏடுகளை செந்தமிழில் இயற்றவேண்டும். அவற்றில் நம் நாட்டுக்கு வேண்டிய நல்ல கருத்துக்களைனைத் தான் அவற்றை நமதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை பாரதியார்,

பிறநாட்டு நல்லறிஞர்
சாஸ்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல்
வேண்டும்;
இறவாத புகழுடைய
புதுநூல்கள்

தமிழ் மொழியில் இயற்றல்
வேண்டும்

எனக் கூறினார். அவர் வழிவந்த பாரதிதாசன்.


தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற.....

செய்தி தம் காதுகளிலே, தமிழ் மக்களுடைய காதுகளிலே என்று வந்து கேட்கப் போகிறதோ என்று கனவு காண்கிறார். "திற

(எஸ். இராஜதுரை)

மான புலமையெனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் சொல்லில் தமிழ் இலக்கியங்களை வெளிநாட்டார் படித்து, தமது மொழிக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் கருத்து மறைந்து தொங்கிக் கொண்டிருக்கிறது. பாரதிதாசன் அந்தக் கருத்தை—

பாரதியார்விட்ட பகுதியை "ஆயிரம் மொழியிற் காண" எனத "தாயெழிற்றமிழை, என்றன் தமிழரின் கவிதை தன்னை" என்ற அடிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.



பாரதிதாசன்

இன்று புழுதியில் புரளும் குழந்தைகளிடமே நாளைய உலகம் தங்கியிருக்கிறது. அத்தகைய செல்வக் குழந்தைகளை நாம் பிள்ளைப் பருவத்திலேயே நல்லவை சொல்லி நல்லவை செய்ய பழக்கவேண்டும். அக்குழந்தைகளின் பளிங்கு போனற மனத்தில் கெடுதிகளை ஏற்படுத்திவிடக் கூடாது. பிஞ்சுப் பருவத்தில அவற்றின் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும் பேச்சுக்களே பிற்காலத்தில் பல செயல்களையும் சீசய்ய தூண்டி

றது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே வளர்ந்த பின் வளைக்க முற்படுவது சிரமமும் ஆபத்தானதும்கூட. ஆகவே ஐந்திலே—ஐந்து வயதிலே பிள்ளைப பருவத்திலே வளைத்துவிடுவோமென்று பாரதியார் அணிந்தார். ஜாதிகள் விளைவித்த கொடிய சம்பவங்கள் அவர் மனதில் ஆழப்பதிந்திருந்தன.

ஜாதிகள் இல்லையடி பாப்பா—
குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்
பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி—
அன்பு
நிறைய உடையவர்கள்
மேலோர்

"சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற ஔவை வாக்கை வலியுறுத்திய பாரதியார் பாப்பாக்களைப் பாடி "பாதகஞ் செய்பவரை கண்டால் பயங் கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா" அதுமட்டுமல்ல "முகத்திலும் உமிழ்ந்து விடு" எனறு கொதித்தெழுகிறார்.

பாரதிதாசனோ, மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்தாலும் போதாது அவர்களை வேரோடு பெயர்த்து வீழ்த்தியமரத்தைப்போல் இல்லாதொழிக்க வேண்டுமென்கிறார்.

அன்னும் வறுமை
அகற்றுமல் அம்பு
விக்குக்
கொள்ளை நோய்
போல்மதத்தை
கூட்டியழும் வைதிகத்தை
போராடிப் போராடிப்
பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பேர்க்கவந்த
வீர இளைஞர்!

பெண்கள் ஒரு நாட்டின் கண்கள், அவர் இதயம் நொந்தால் நாட்டில் இன்பம் மறையும். அவர்கள் கண்களில் நீர்வடிந்தால் சாவலன் செங்கோல் கைமாறும். இந்நிலையை பழந்தமிழ் இலக்கி

(12ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 1.

பரிசு பெற்றவர்களின் விவரம்

முற்றும் சரியான விடை அனுப்பிய மூவர்

ஆர். சுப்பையா
கீஞ கொட கட்டை
லுணுகல

ஸ்ரீமதி எஸ். குமாரவேலு
மீசாலை

எஸ். சிதம்பரம்
நம். 5 கடியனெல்ல பஸார்
கொட்மல்ல

அதிக கூப்பன்கள் அனுப்பியதற்கு ரூபா 100 பரிசு பெற்றவர்.

என். எம். மொகிதீன்
தலைமை ஆசிரியர்
பறஹதெனிய அரசினர் பாடசாலை வேஉட
இவர் அனுப்பிய கூப்பன்களின் மொத்த தொகை 66

ஒரு பிழையோடு கூடிய விடை அனுப்பி இரண்டாவது பரிசு பெற்றவர்கள்.

வி. வன்னியசிங்கம்
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை

யு. எல். பி. துவான் அரிவ்
நம் 5 யு. ஸி. டெனமன்ட்ஸ்
வெலிமடரோட்,
பண்டாரவெல

பி. சுந்தரமூத்து
நம். 14 குருணகல ரோட்,
நாரமல்ல

எஸ். ஏ. எம். அஹமது
நம். 68 பஸார் அனுராதபுரம்

எம். யு. எம். நஸீம்
கோட்டை—கொழும்பு

சவரிமுத்து லூர்தம்மா
நம். 22 பருத்தித்துறை
ரோட், யாழ்ப்பாணம்

எஸ். ஏ, கார்த்திகேசு
பண்ணாகம் தெற்கு சுளிபுரம்

வி. சோமசுந்தரம்
நாரந்தனை வடக்கு
ஊர்காவற்றுறை

ஏ. சுந்தரம்
சமதர்ம பவான் அன்கோ,
றிக்கிலகஸ்கொட போஸ்ட்

ஸ்ரீமதி கமலம் சிவராஜ்
பாம் கார்டன் குரூப்
ரத்னபுரி

எம். அருளம்பலம்
நம். 83 முதல் டிவிஷன்
மருதானை, கொழும்பு 10.

எம். எஸ். சஹிட்
சிங்கர் கம்பனி
கண்டி ரோட், வத்துகாமம்

கே. கந்தசாமி
லட்சுமி ஸ்டோர்ஸ்
நம். 54 ஹப்புத்தளை

என். எஸ் தங்கராஜா
ஆசிரியர் பண்டிருப்பு
கல்முனை

எஸ். ஏ. தாசன்
முதல் வார்ட் மூதூர்

ஏ. ஏ. எம். அமீன் உம்மாள்
C/o ஏ. ஏ. முஹமது கனி
பஸார், தொளஸ்பாகை

புனிதவதி பெரியதம்பி முடையன்,
நம் 19,2—வது மைல் ரோட்டு
நல்லூர்—யாழ்ப்பாணம்

க. மெய்யழகன்
451 றெயில்வே அப்புரோச்
ரோட், அனுராதபுரம்

வி. எம். இப்ராஹிம்
நத்பிட்டி முஸ்லிம் கல்முனை

எஸ். கதிரேசன்
யோகலட்சுமி தோட்டம்
கலஹா

என். புஸ்பநாதபிள்ளை ஆசிரியர்
பொன்னையா ஒழுங்கை
ஆனைக்கோட்டை

எம். முத்தையா கண்டக்டர்
களுமண்டி, சர்னியா பதுளை

ஜே. பி. மைக்கேல்
அறபொலகந்த தெபுவன

எஸ். எம். ஸட். அப்தீன்
தபால் கந்தோர் முறுத்தலாவ

ஏ. வேலுப்பிள்ளை ஆசிரியர்
சுண்ணாகம் கிழக்கு—
சுண்ணாகம்

எஸ். என். தாஸை
நம். 125 பாலன்ஸ்டோர்ஸ்
மெயின் ஸ்ட்ரீட்,
பண்டாரவெல

வல்லிபுரம் நாகராஜா
கொள்ளுப்பிட்டி தோட்டம்
பதுளை

எஸ். சிங்கர அய்யர்
மஹாஉவா ஹரஸ்பத்த

எஸ். பி. நடராஜன்
131. படியாபெல்ல
(வியா) கண்டி

எம். செபஸ்தியன் பிள்ளை
ஆசிரியர் கரிசல்
பெஸாலை

கே. ராஜசிங்கம்
உபதபாற் கந்தோர்
கொலம்பகம, யாழ்ப்பாணம்

எம். முஹமத் மக்கீன்
217 பிச்சர்ட்ஸ் லேன்
கொழும்பு 10

கே. பாக்கியரத்தினம்
6 இந்திரா லேன்
பம்பலப்பிட்டியா

யு. கே. ராமசாமி
விரவதோட்டம்
உடஹென்தேன

எம். ஏ. எம். சேலா மரைக்கார்
ஸஹிரா கல்லூரி புத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 புஷ்பாவின் கடிதம்

பாரிஜாதம் சன்விழித்தபோது மாடியில் தனதறையில் கட்டிலில் படுத்திருப்பதை யுணர்ந்தாள். அவள் மூளை இன்னமும் சரியாக வேலை செய்யவில்லை. எங்கும் ஒருவகை புகை பரவியிருப்பதுபோல் தென்பட்டது. அப் புகையினூடே நாலைந்து உருவங்கள் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அவள் மயக்கமுற்றதும் சந்திரபவனமே அல்லோலகல்லோலப்பட்டது. மீளுவுக்கு ஏற்பட்ட பரபரப்பையோ விவரிக்க இயலாது.

பாரிஜாதத்திற்கு உணர்வு திரும்ப வெகு நேரம் பிடித்தது. சுற்றிலும் மிரள மிரள அவள் பார்ப்பதைக் கண்ணுற்றதும் மனேகரன் கவலையோடு அவளருகில் சென்று குனிந்து நோக்கினான். ''இப்போது எப்படியிருக்கிறது பாரி?'' என்று அன்போடு கேட்டான். பாரிஜாதம் பதிலுரைக்காமல் மீளுவைப் பார்த்து ''மீளு அத்தானோடு நான் சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது. வேலைக்காரரைப் போகச் சொல்லு. நீயும்.....'' அவளது குரல் கம்மியது. மீளு பெருமூச்சுடன் அவ்வறையை விட்டு அகன்றாள். வேலைக்காரரும் அவளைப் பின்தொடர்ந்தனர்.

''அத்தான், தயவு செய்து என்னிடம் எல்லாம் விவரமாக-ஒன்றுகூட மறைக்காமல் சொல்லிவிடுங்கள்!'' வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அத்தானைப் பார்த்தாள் பாரிஜாதம். ஏற்கனவே புண்ணாயிருந்த மனேகரனின் நெஞ்சை அவளது கண்ணீர் ஈட்டிபோல் குத்தியது. தன் பிசகை உணர்ந்தான் மனேகரன். தனது கலியாணத்தைப்பற்றி அவளிடம் மறைத்து வைத்திருந்ததனாலன்றே இன்று இந்த விபரீதங்களெல்லாம் ஏற்பட்டன? ஆனால் இனி வருந்தித்தான் பயன் என்ன?

'பாரி, என்னை மன்னித்து விடுங்கள். என் கல்யாணத்தைப்பற்றி நீங்கள் அறிந்தால் வருந்துவீர்களென்றே இவ்வளவு காலமும் மறைத்து வைத்திருந்தேன். ஆனால் இந்த அனர்த்தங்களெல்லாம் நேரிடுமென்று நான் கனவில்கூட சிந்திக்கவில்லையே!'' என்று துயரத்தோடு கூறிய மனேகரன் அவளது தளிர்க்கரத்தை இலேசாகப் பற்றினான்.

''பரவாயில்லையத்தான். உங்கள் இலட்சியத்தை நீங்கள் நிறைவேற்றினீர்கள். உங்கள் விருப்பத்தில் குறுக்கிட எனக்கு என்ன உரிமை இருக்கிறது? அந்தப் பெண்ணை எப்படியத்தான் நீங்கள் சந்தித்தீர்கள்? எங்கு கண்டுபிடித்தீர்கள்?'' என்று ஆவலோடு கேட்டாள்.

பல வருடங்களுக்கு முன் சம்பனூர் கற்பாறையடிக்கு விறகெடுக்க வந்த மல்லிகாவைத் தன் உயர் ஜாதி நாய் எப்படி வழிமறித்தது என்பது முதற்கொண்டு இன்றுவரை நிகழ்ந்த சம்பவங்களை ஒன்றுவிடாமல் கூறி முடித்தான் மனேகரன். அவனது துணிகரமான சரித்திரத்தைக் கேட்ட பாரிஜாதம் ஆச்சரியமும் திகைப்பும் மகிழ்ச்சியுமடைந்தாள்.

''அத்தான் உங்கள் மீது எனக்கு அணுவளவேனும் கோபமோ வெறுப்போ கிடையாது. அந்த ஏழைப் பெண்ணிற்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற என்னையும், மாமாவின் சொத்துக்களையும் தியாகம் செய்த ஒரு மாபெரும் விரராகவே உங்களை மதிக்கிறேன்'' என்றாள் பாரிஜாதம். இப்போதுதான் அவள் முகத்தில் இலேசான புன்முறுவல் தோன்றிற்று.

''ஆனால் பாரி, என்னைவிடச் சிறந்தவள் நீங்கள். நான் உங்களை ஏற்றுக்கொள்ளவில்லையென்பதற்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையையே பரித்தியாகம் செய்து கன்னிப் பெண்ணுகக் காலங்கழிக்கின்றீர்களே!''

தொடர் நவீனம்:

வாடாமலர்

"சுலோசனை"



நீலா—

''அத்தான் புஷ்பா உங்கள் மனைவியென்று தெரிந்திருந்தால் நான் அவளை என் எஜமானியாக ஏற்றுக்கொண்டிருப்பேனே: அவளது வேலைக்காரியாக நான் பணிவிடை செய்திருப்பேனே.....''

''நடந்ததை மறந்துவிடுவோம் பாரி. இனி மல்லிகாவைக் கண்டுபிடிப்பதுதான் நமது முக்கிய வேலை. அவள் அறையையும் உடைமைகளையும் நன்றாகச் சோதித்துப் பார்த்தீர்களா? அவள் ஏதாவது கடிதம் கிடிதம்கூட எழுதி வைக்கவில்லையா?''

இருவரும் புஷ்பாவின் அறையை நோக்கி நடந்தனர். புஷ்பாவின் துணிமணிகளையும் பொருட்களையும் பார்க்கப் பார்க்க மனேகரனின் வேதனை பன்மடங்கு அதிகரித்தது. அந்தப் பேதை எங்கு சென்றாளோ என்னவெல்லாம் கஷ்டம் அனுபவிக்கின்றாளோ என்றுஎண்ணி சொல்லொணா துயரமடைந்தான். புஷ்பாவும் பாரிஜாதமும் சேர்ந்து புதிதாகப் பிடித்துக்கொண்ட போட்டோ படம் ஒன்று சுவற்றில் மாட்டப்பட்டிருந்தது. அதைக் கண்ணுற்றதும் மனேகரனுக்கு இடி விழுந்தாற்போலிருந்தது. அதனருகில் சென்று வெறிபிடித்தவன்போல் விழித்துப் பார்த்தான். அவனது கண்களில் நீர் பெருகுவதைக் கண்ட பாரிஜாதத்தின் உள்ளம் அந்த அபாக்கியத் தம்பதிகளுக்காகப் பெரிதும் பரிதாபப்பட்டது.

மனேகரனின் மனதில் புதிதாக ஓர் எண்ணம் உதித்ததோ என்னவோ திடீரென்று அந்தப் படத்தின் பின்னே கையைவிட்டுப் பார்த்தான். பாரிஜாதம் வியப்போடு அவனை நோக்கினாள். ஆம், மனேகரனின் ஆராய்ச்சி வீண்போகவில்லை. நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்த ஓர் கடிதம் அவள் கையில் சிக்கியது. 'பாரி இதோ கடிதம்!' என்று அலறியவன் நடுங்கும் கரத்தினால் கடிதத்தை அவசர அவசரமாகப் பிரித்தான். பாரிஜாதம் ஒரே எட்டில் அவனைச் சமீபித்தாள். இருவரின் நெஞ்சமும் ஒரேமாதிரியாக அடித்துக்கொண்டிருந்தன. பதைபதைப்புடன் கீழ்வருமாறு படித்தனர்.

கடிதம்

அன்புள்ள அக்கா,

இதுகாலவரைத் தங்களை 'அம்மா' என்று அழைத்து வந்தவள் இன்று 'அக்கா' என்று எழுதுகிறாளே எனத் தாங்கள் ஆச்சரியப்படக்கூடும். கடிதத்தைத் தொடர்ந்து படித்தீர்களானால் தங்களை அக்கா என்று அழைக்கும் உரிமை எனக்கு உண்டு என்பதை ஒப்புக்கொள்வீர்கள்.

அக்கா, இக்கடிதத்தைத் தாங்கள் கண்டுபிடித்துப் படிக்கும் வேளை தங்கள் மனம் எந்நிலையிலிருக்கும் என்பதை நான் அறிவேன். ஆனால் எனக்காகத் தாங்கள் வருந்த வேண்டாம். என்னை ஒரு வஞ்சகி என்று திட்டவும் வேண்டாம். என் கடமையை நான் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. அக்கா, தாங்கள் நினைப்பதுபோல் என் பெயர் புஷ்பா அல்ல. என் உண்மைப் பெயர் மல்லிகா என்பது. தங்களிடம் நான் கூறிய கற்பனைக் கதைகளுக்காக தாங்களும், என் கணவரும் என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் இருவருக்காகவும்தான் நான் வேலைக்காரி வேஷம் போட்டு தங்களிடம் வந்தேன். அதற்கு காரணம் கூறுகிறேன் கேளுங்கள்.

அன்புள்ள அக்கா, இன்னும் விவாகமாகாமல் இருப்பவர் என்று தாங்கள் எண்ணிக் கொண்டிருக்கும் தங்கள் அத்தான் மனேகரரே என் அருமைக் கணவர். சில வருடங்களுக்கு முன் நாங்கள் இருவரும் சம்பனூரில் சந்தித்து ஒருவர் அன்பு கொண்டோம். அது தூய காதலாக மாறியது. எங்கள் திருமணமும் இரகசியமாக பதிவுத் திருமணமாக நடைபெற்றது. ஆனால் இந்த உண்மைகளையெல்லாம் என் கணவர் தங்களிடம் மறைத்து வைத்திருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏதேதோ சாக்குப்போக்குச் சொல்லி என்னைச் சமாதானப்படுத்தி வந்தார். ஆனால் தாங்கள் அவர்மீது காதல்கொண்டிருக்கிறீர்கள் என்ற இரகசியம் எனக்குப் புலப்பட்டுவிட்டது. தங்களது உதவியால் அவர் லண்டனுக்குச் சென்றார். அவரிடமிருந்து ஆரம்பத்தில் எனக்கு கடிதம் வந்தது. பிறகு ஒரு வருடமாகியாதொரு தகவலும் வராமல் போகவே, எனக்குப் பெரும் பீதியும் வேதனையும் ஏற்பட்டது.

உங்கள் அத்தான் என்னைக் கல்யாணம்செய்துகொள்வதற்காகப் பெரும் தியாகம் புரிந்தார். முதலில் அதுகூட எனக்கு மறைவாகவேயிருந்தது. அவர் லண்டனுக்குச் சென்ற பிறகு ஒருதினம் அவர் மேசை டிராயரில் என்றோ தங்களால் அவருக்கு எழுதப்பட்ட கடிதமொன்று கிடந்ததைக் கண்டேன். அதில் 'பெரியப்பாவின் உயில் நம்மைப் பிரித்தது' என்றசாராம்சத்தில் ஏதேதோ எழுதியிருந்தது. அதைப் படித்த பிறகு எனக்கு ஒரே சந்தேகம். என் கணவர் எனக்காகத் தம் சொத்து சுதந்திரம் எல்லாம் இழந்தாரோ என்று எண்ணிக் கவலைப்பட்டேன். அவர் இழந்த இன்பத்தை மீண்டும் அவருக்கு அளிக்க வேண்டும். அது தங்கள்மூலமாக அன்றி முடியாது என்று கருதினேன். சந்திரசேகரின் மரண சாசனத்தில் எழுதப்பட்டுள்ளதை எவ்விதமேனும் படித்துவிட வேண்டுமென்ற ஒரே வைராக்கியம்-இலட்சியம்—என்னை ஆட்சிபுரிய ஆரம்பித்துவிட்டது.

இதனிடையில் எனக்கு ஒரே துணையாயிருந்த லட்சுமி மாமியும் இறந்துவிடவே, என்உறுதி பலப்பட்டது. புஷ்பா என்ற பெயரின் பிறகே ஒளிந்துகொண்டு தங்களிடம் வந்தேன். தங்கள் அன்பைப் பெற்றேன். கணவனின் சேமத்தைப் பற்றி அறிந்தேன். எனக்குக் கடிதங்களே எழுதாத அவர் தங்களுக்கு மட்டிலும் ஒழுங்கு தவறாது எழுதி வருவதால் அவர் என்னை முற்றிலும் மறந்துவிட்டாரென்று தீர்மானித்தேன். தாங்கள் அவரைக் காதலிக்கிறீர்கள். அதற்கும் நான் இடையூறாக இருக்க விரும்பவில்லை. எனது இலட்சியம் நிறைவேறியது. நேற்று இரவு தங்கள் பெரியப்பாவின் உயிலைப் படிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. தங்களைக் கல்யாணம் செய்துகொள்ளும்பட்சத்தில் தான் இழந்த சொத்துக்களை என் கணவர் மீண்டும் பெறுவார் என்பது உயிலின் கருத்து. ஆகவே அதை நிறைவேற்ற நான் முடிவு கட்டிவிட்டேன்.

அக்கா, இனி நான் உயிரோடிருப்பதில் பயனில்லை. நான் உயிரோடிருந்தால் என் கணவருக்கு மனச்சாந்தியும் இன்பமும் ஏற்படாது. அவர் இன்பங்களுக்கு நான் ஒரு முட்டுக்கட்டையாக இருப்பதைவிட என் உயிரை அவருக்காக அர்ப்பணம் செய்யத் தீர்மானித்து விட்டேன். என் இலட்சியம் நிறைவேறியது அக்கா. நான் விடியற்காலை ரயிலில் கதிர்காமம் போகிறேன். அங்கு முருகப் பெருமானைக் கடைசிமுறையாகக் கும்பிட்டுவிட்டு மாணிக்க கங்கையில் என் உயிரைப் போக்கிக்கொள்ளப் போகிறேன். அக்கா, என்னைத் தேட எத்தனிக்க வேண்டாம்.

தங்கள் அன்புள்ள தங்கை

புஷ்பா.

மனேகரனின் கையிலிருந்து கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. இடி விழுந்தவன்போல் தலையைக் கையால் தாங்கிக் கொண்டு பக்கத்தில் கிடந்த கட்டிலில் உட்கார்ந்தான் மனேகரன். பாரிஜாதம் திருதிருவென்று விழித்துக்கொண்டு நின்றாள். கீழே அனாதரவாகக் கிடந்த கடிதத்தை யெடுக்க அவள் மனம் துணியவில்லை. மனேகரனின் மௌன நிலை அவளை அச்சப்படுத்தியது. 'அத்தான்' என்று கூவினாள். மனேகரன் பேசவில்லை. பாரிஜாதத்திற்கு தூக்கிவாரிப் போட்டது. சட்டென்று முழங்காலில் நின்றுகொண்டு அவனது கவிழ்ந்த முகத்தை உற்று நோக்கினாள். அவன் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தான்!

சாரதீ வழி

சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர்



நீவா—

வினா: 1

அவனன்றி அணுவு மசையாது என்று மகான்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்களே, அப்படியானால் உலகில் நடைபெறும் கொடுமைகளும் மக்கள் படும் எல்லையற்ற அல்லல்களும் இறைவன் சித்தப்படிதான் நடைபெறுகின்றன என்று எண்ணுவது தவறுகுமா? ஆம் என்றால் கருணை வடிவான இறைவனே துன்பத்திற்கும் ஆதாரம் என்பது சரியாகுமா? தயவுசெய்து இதை விளக்க வேண்டுகிறேன்.

மு. சுப்பராமன், மட்டக்களப்பு

விடை:

மகான்கள் கூறுகிறார்கள் என்று சரியாகச் சொன்னீர்கள். அவர்களே அப்படிக் கூறலாம்: மற்றவரால் இயலாது: ஏனெனில் மகான்கள் அவ்வண்ணமே அனுபவிக்கின்றார்கள்: தமது செயல் என்று எதுவுமே அவர்களுக்கில்லை. கொடுமைகளும் அல்லல்களும் அவன் சித்தப்படிதான் நடைபெறுகின்றன. இதனால் அவன் கருணையற்றவனுவதில்லை. அரசாங்க நீதி கொலைபுரிந்தவனை மரண தண்டனைக் குள்ளாக்குகிறது: இதனால் அரசாங்கம் கொடுந் தொழில் புரிந்ததாகுமா? படியாத குழந்தையை ஆசிரியர் கோல்கொண்டு அடிக்கிறார். ஆருத புண்ணை மருத்துவர் அறுத்துத் தள்ளுகிறார். இவை கொடுந் தொழில்களா? கருணையற்றவையா? இன்றேல் இயலாது:

எனது இத்தகைய செயல்களுக்கு மறக் கருணையென்று பெயர். இப்பார்வை சாதாரண மக்களுக்கு வந்தமைவது இயலாத காரியம்.

உலக நிலையில் மக்கள் இப் பழமொழியைக் கையாளுதல் கூடாது. ஒருவன் மற்றவனை அடித்துவிட்டு அவன் செயலென்று கூறிச் சமாதானமடையலாம்: மற்றவன் திருப்பியடிக்கும்போது அவன் செயல்தானென்று கூறி அமைதியுற வேண்டுமே! அஃதியலாதபோது சீவச் செயலும் சிவன் செயலுமாக இரண்டுண்டு எனக்கொள்ள வேண்டும்: இவ்விரண்டு செயலையும் ஒரு உதாரண முகத்தால் விளக்குவோம்: புல் நிறைந்த ஒரு பெரிய வெளியில் பசுவொன்று பத்தடிக் கயிற்றால் ஒரு முளையோடு கட்டப்பட்டிருக்கிறதென்றுகொள்வோம். இந்நிலையில் அப்பசு 10 அடி விட்டார்த்தத்துக்குள் (Radius) உள்ள புல்லை மட்டும் மேயலாம். அதுதான் அதனுடைய அதிகப்படியான எல்லை: அதற்குள் 5 அடி வட்டத்துள் மட்டுமே மேய விரும்பினாலும், மேயாமலே இருக்க விரும்பினாலும், அதன் எல்லைக்குள் இருக்கும் புல்லை மிதித்து நாசப்படுத்த விரும்பினாலும், செய்ய உரிமையுண்டு. அதற்கு மேல் வெளியே நிறையப் புல் இருந்தாலும் அது ஒன்றும் செய்யலாகாது.

இதைப்போலவே சீவன் தனது மனம் என்னும் கயிற்றால் உலகப் புல்வெளியில் கட்டப்பட்டுள்ளான். அந்த அளவிலே அவன் என்ன வேண்டுமானாலும் செய்து உலகப் பொருள்களென்ற புல்லை நன்முறையில் மேய்ந்து சுகம் பெறவோ, தீய முறையில் கையாண்டு துன்பமுறவோ உரிமையுண்டு. அதனால் வரும் பயனை அவன் அனுபவித்துத் தானாக வேண்டும். அதைவிட்டுத் தனது மனக் கயிற்றை அறுத்து இறைவன் கருணையென்னும் கயிற்றால் கட்டிக் கொள்ள இசைவானேயாகில் அவருடைய எல்லையற்ற பெருவெளியில் துன்பமொரு சிறிதுமின்றி வாழ்ந்து எங்கும் அவன் செயலையே கண்டு சாந்தி பெறலாம்.

வினா: 2

சமயக் கொள்கையின்றி ஒழுக்க சீலராக மக்கள் வாழ முடியாதா? சாதாரண மக்கள் வாழ்வுக்கு மதம் அவசியந்தானா?

எம். வடிவேலு, நாவலப்பிட்டி

விடை:

எல்லாச் சமயங்களும் நல் லொழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டே எழுந்துள்ளன: ஒழுக்கம் சீவியத்தை நன்கு நடத்திச் செல்ல மட்டும் உதவும். இன்ப துன்ப மயமான இயற்கையின் இரட்டிப்புகளி

[18—ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் தாய் மொழி?

சிங்களம் வேண்டுவது சமுகத்தையும்-சமயத்தையும் புதைக்கும் படுகுழி

கையில் வெண்ணை இருக்க நெய்க்கலையும் பேதமை

கொண்ட புருடனை கைவிட்டு வேற்றுனைக் கொள்வதற்கு ஒப்பும்

[எம். ஸீ. எம். ஸாயிறு]

இலங்கையில் தேசிய மொழிக் கிளர்ச்சி தலைதூக்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதுவும் தமிழை ஒழித்துக்கட்ட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இத்தருவாயில், இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் ஒரு பகுதியாகிய முஸ்லிம்களின் தாய்ப் பாஷை சிங்களமாகத்தான் இருக்க வேண்டும் என்று நம் சமூகத்தினிடையே ஆடும் லெதலைகளை நோக்க விந்தையாகத் தானிருக்கிறது. இவ்விதச் சந்தர்ப்பவாதிகள் நம் சமூகத்தில் அமைந்திருக்கிறார்களே என எண்ணும்போது ஏக்கம் உண்டாகிறது. நம்மைப்போன்ற வீர இளைஞர்களின் தலையே கிறுகிறுக்கின்றது.

நாம் விளையாடியது தமிழ். அன்னை மடியில் தவழ்ந்த காலையும் புகட்டப்பட்ட ஆசைமொழி தமிழ். நம் அன்னை நம்முடன் கொஞ்சிக் குலாவி அமுத மொழி பேசியதும் தமிழிலே. பிறப்பிலிருந்தே, பெற்றோரின் இரத்தத்திலிருந்தே நம்முடன் ஒட்டிப் பிறந்த இனிய தமிழ் இன்னும் நம் வீர இரத்தத்தில் விளையாடிக் கொண்டுதான் இருக்கிறது இதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது. நம் தாய்ப் பாஷை சிங்களமாக வேண்டும் எனப் பறைசாற்றும் வீரவான்கள்கூட சிங்களத்தில்தான் கதைக்கிறார்களென்றால் பெரிதும் விந்தைதான். இன்னும் ஒருசிலருக்காக இலங்கைவாழ் முஸ்லிம்களைப் படுகுழியில் இறக்கக் கருதும் உந்தப்பட்டோரின் போக்கை நினைக்க நம் சமூகம் என்ற தோரணியில் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. இதுவா இவர்கள் நம் சமூகத்துக்குத கேடிக்கொடுக்கும் கீர்த்தி? இவர்களா நம் சமுதாயச் சிற்பிகள்!

இலங்கைவாழ் பெரும்பான்மை முஸ்லிம்கள் இதுவரை சிங்களத்தைத்தான் கற்று வந்தார்களா? இப்போதுதான் கற்கிறார்களா வென்றால் அதுவும் இல்லை. இந்தான் விந்தையிலும் விந்தை. நிஜமில் சிங்களத்தை நாடுவது முஸ்லிம்களின் நன்மைக்காக வல்ல. நாசத்துக்காக. இது அரசியற் சந்தர்ப்பவாதமென முன் ஒரு அன்பர் கூறியது முற்றிலும் சரியே. ஆட்சியாளரின் போக்கைக் கண்டு இவர்கள் பிரண்டுவிட்டார்களோ என்றுதான் ஐயுற வேண்டியிருக்கிறது. அடக்குமுறைகள் எழுந்தாலும், சிறைச் சாலைகள் வாய் பிழந்து வரவேற்றாலும் நம் உரிமைகளைக் கைவிடுவது கோழைத்தனம். சொற்ப நபர்களை நாடி, நகத்தை நாடி அளறில் அமர்ந்ததடியேபோன்று ஆகுவது அதைவிடக் கோழைத்தனம். இதனை அன்பர்கள் அறிய வேண்டும். இது நன்மையாக முடியுமென்றால் அதுவும் இல்லை. ஆழமறியாமல் ஆற்றில் காலிவிட்ட கதைதான். இதலில் சிங்களம் அவ்வளவு ஆழமானதென்று புரிந்து கொள்ளவொண்ணாத பிறரின சிறு பூனை பெறத் தன் மதிப்பற யானையைக் கைவிடுவதுபோலே வெனலாம். அதுவுமன்றி ஆழமறியாப் படுகுழியில் முஸ்லிம் சமுதாயத்தை உதவி செய்வதென அழைத்துத் தள்ளிவிடலுக்குச் சமம். அத் தொழிலைச் செய்ய நம் சமுகத் தூண்கள் முன் வந்தது "கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்" இதனை அவ்வன்பர்கள் நன்கு அறிய வேண்டும். நம்மகத்தே பரம்பரை தொட்டே இனிய நாதம்-எழிய நடை பெருந்திய தமிழ் இருக்கச் சிங்களத்தைத் தாய்ப்பாஷையாகக்கொள்ள ஏன் சிரமப்பட வேண்டும். நம்மகத்தே இருக்கும் ஈடறு செல்வத்தைக் கைவிட்டுச் சிறு தொகைப் பணத்துக்காகச் சரித்திரங்களைப் புரட்டிக்கொண்டு "நாம் சிங்களவரின் சந்ததி, சிங்களமே நம் தாய்ப் பாஷையாக வேண்டும்" எனக் கொக்கரித்துக் கொண்டு இலங்கைவாழ் முஸ்லிம்களின் வாழ்வில் புதியதோர் சகாப்தத்தை-இல்லை, ஓர் புதிய யுகத்தை அமைக்க எண்ணும் இச் சிறு தொகையோரின் பேதமையை என்னென்றுதான் புகல்வது. இதற்காக நாம் ஏன் சரித்திரங்களைப் புரட்டியாராய வேண்டும். நாம் எவருடைய சந்ததியாய் இருந்தாலென்ன? நாம் தற்போது கைக்கொண்டொழுகும் இனிய மொழியை நம் மக்கள் விட்டகல்வார்களா? நாம் எவர் சந்ததியாராயினும் முன்பெருட்டே கைக்கொண்ட தமிழைத் தன் தாய் மொழியாகக்கொள்ள வீரமுள்ள-தன்மானமுள்ள எம் முஸ்லிம் இளைஞனும் தயங்கமாட்டான் என்பது நிச்சயம்.

முஸ்லிம்களில் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள் இலங்கையில் இல்லை என்று புழுகியிருந்தார் நம் அன்பர். ஆனால் தமிழிலும் அதிகமானோர் அதாவது சிங்களத்தில் பாண்டித்தியம் பெற்ற முஸ்லிம்கள் தமிழைவிடப் பெரும் பான்மையாக இலங்கையில் இருக்கிறார்கள் என்று அவ்வன்பருக்குக் கூற முடியுமா? வெறும் கற்பனையால் எதையும் சாதித்துவிட முடியாது அன்றியும் நட்டாற்றில் விட்டபட்ட படகுபோல் தத்தளிக்க நம் முஸ்லிம்களில் எவரேனும் பிரியப்படமாட்டார்கள் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இன்று முழு இலங்கையிலும் வருடா வருடம் எத்தனை முஸ்லிம் ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறுகிறார்கள். ஆசிரியர்களே சமுதாயத்தின் சிற்பிகள். சமூகம் அழியாது புகழ் பெற்றோங்கப் பாடுபடுபவர்கள். ஆனால் சிங்களத்தில் ஒரு வருடத்தில் ஓர் முஸ்லிம் ஆசிரியன்கூடப் பயிற்சி பெற்று வெளியேறினானென்றால் அற்புதமே. இந்நிலையில் முஸ்லிம் ஆசிரியர்களால்-அறிஞர்களால் நம் முஸ்லிம் சமுதாயம் சீரழியாமல் வலுவடையக் கட்டப்படும் இச்சந்தர்ப்பத்தில் அதனை இடித்துத் தள்ளிக் கற்பனைக்கெட்டாக் கட்டிடம் கட்டப்போகும் ஒரு சிலரை நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. தமிழில் இவ்வளவு உயர்நிலை நம் சமுதாயம் அடைந்திருக்கும்போது-அடைந்து வரும்போது சரித்திரங்களைப் புரட்டிக்கொண்டு பழையதை ஆராய்கிறீரே நம் மக்கள் என எண்ணும்போது அழுகை அழுகையாகத்தான் வருகிறது. என இவ்வளவு பேதமை! இத்தனை ஆசிரியர்கட்கும், எதிர் காலத்தில் தமிழ் வல்லுனர்களாக-செயலாளர்களாக வரப் போகும் ஆயிரமாயிரம் முஸ்லிம் இளைஞருக்கும் இவர்கள் என்னதான் சொல்லப்போகிறார்கள் கொண்ட புருடனைக் கைவிட்டு வேற்றுனைக் கைபிடிக்கும் செயலும் செயலாமோ? அதுவும் பெருமையாமோ. இது இருக்கச் சிங்களத்தை நாம் தாய்ப் பாஷையாகக்கொண்டால் இத்தனை ஆசிரியர்களும், இளைஞர்களும் என்ன செய்யப்போவதென்றே விளங்கவில்லை. அவர்கள் அழிய நேரிடுமா? இல்லை. புது யுகத்தை யுண்டாக்கச் செல்லும் காலத்துக்குள் நம் சமூகம்தான் ஆதரிப்பாரற்று அழிய நேரிடும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகற்கு"

என்கிறார் வள்ளுவர்.

ஆதியில் இருந்தே நம்மை வளர்த்துப் போஷித்து, நமக்கு இன்பம் தந்த தமிழ் மொழி செய் நன்றியை மறந்துவிட்டு அதுவும் சிறப்பான தனிப் பெருமை வாய்ந்த ஒரு மொழியைப் புறக்கணித்துவிட்டு வேறொரு மொழியில் விழுந்து திண்டாடுவதால் நமக்கு உய்வுண்டா? எவ்வழியிலும் உய்வில்லை. இல்லவேயில்லை அது நமக்கு நாமே வெட்டிக்கொள்ளும் படுகுழி.

இது இருக்க நமது தாய்மொழி சிங்களமாக இருக்க யோக்யதை உடையதா என எண்ணிப் பார்த்தால் அதுவுமில்லை. விசேடமாக வெள்ளிக்கிழமை பள்ளிகளில் நடத்தப்படும் "குத்பா" (பிரசங்கம்) சிங்களத்தில் ஆற்றப்படுகிறதா என்றால் முயற் கொம்பு. மத்திய மாகாணத்தில்கூட அவ்வாறு இல்லையெனத் திட்டவட்டமாகக் கூறிவிடலாம். பள்ளிகளில் சிங்களத்தைப் பேசுதலே பாபமெனக்கொள்வார்கள் நம் பாமர மக்கள். இது இறக்க இஸ்லாமிய நூல்கள் ஒன்றுவது சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கிறதா வென்றால் நம்பக்கூடிய விடயமல்ல இஸ்லாமிய நூல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பார்களாம் நம் அன்பர்கள். எக்காலமோ? சிலர் அவைகட்காக ஏன் அவ்வளவு சிரமப்டுவான். நூற்றுக்கணக்கான இஸ்லாமிய நூல்கள் தமிழில் நம்மகத்தே இருக்கின்றனவே. இன்று இஸ்லாமிய மக்கள் அனைவரும் "ஆலிம்"களல்ல. அரபியைக் கற்றவர்களல்ல. அவர்கள் எவ்விதம் மார்க்க அறிவைப் பெற்று தம் கடமைகளைச் செய்கிறார்களென அன்பர்கட்குக் கூற முடியுமா? சிங்களத்திலா அவ்வறிவை அவர்கள் பெறுகிறார்களென்று சினேகிதர்கள் எமக்கு அறிவிப்பார்களா? வெட்கப்பட வேண்டிய விடயம்.

ஒன்றுமறியாப் பாமரனும்கூட இன்று இஸ்லாமிய மதத்தைப் புரிந்துகொள்வது தமிழிலேயே எனின மிகையாகாது. சிசுக்கள் கூட சிறு வயதில் தமிழிலேயே மார்க்க அறிவைப் பெறுகின்றன வென்பதை எங்கள் அன்பர்களுடைய பிள்ளைகளைக்கொண்டே ஏன அவர்களைக்கொண்டே அவ்வன்பர்கள் அறிவார்கள். இதன் மர்மமில் நாம் யார் பரம்பரை என்று நோக்குவதில் என்ன பயன்? நம் இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும்-எதிர்காலத்தையும் தயைகூர்ந்து சிங்களப் பற்றுள்ள சினேகிதர்கள் நோக்குவார்களா?

இன்னும் ஏன் இலங்கையில் "சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இஸ்லாம் விடைத்தாள் சிங்களத்தில் பரீட்சையெடுப்பவனும் தமிழில்தான் எழுத வேண்டும்" எனக் கூறப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய அறிஞர்கள் சிங்கள அறிவுடையவர்களா? என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. மக்களை நல்வழிப் படுத்துவது மார்க்கம். இவ்வாறிருக்க சிங்களத்தை முஸ்லிம்களின் தாய்ப் பாஷையாக்குவது சமுதாயத்தை மாத்திரமல்ல, சமயத்தையே படுகுழியில் ஆழ்த்தும் என்பதற்கையமில்லை. எனவே சமுதாயத்துக்கும், சமயத்துக்கும் எவ்விதமும் பொருந்தாத சிங்களம் எவ்விதம் நம் தாய்ப் பாஷையாக மாறும்? பிறநாட்டில் இருந்து இஸ்லாமிய தமிழ் அறிஞர்களை எமக்கு வரவழைக்க வெட்கம் வராதா? இன்று உலகம் முழுதும் தமிழ் வியாபிக்கிறதென்பதற்குப் பத்திரிகைகள் சான்று. ஆனால் சிங்களமோ? சொல்லக்கூட வாய் கூசுகிறது. வாசகர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. சமயத்தையும், சமுதாயத்தையும் வாழவைக்கும் நம் இனிய செந்தமிழைக் கைவிட்டு மாழவைக்கும் சிங்களத்தைக் கடைபிடித்தால் உலகம் மெச்சுமா? இல்லை நம் முஸ்லிம்கள்தான் மெச்சுவார்களா?

முஸ்லிம் இளைஞர்களே!
தமிழ்ப் பேசும் மக்களே!

நமக்காக, நம் சமுதாயத்திற்காகப் பாடுபடுவது இச்சந்தியில் இருந்து தப்ப வைப்பது உங்கள் கடன். படுகுழி கிண்டும் இச் செய்கைக்கு ஆட்சேபம் தெரிவியுங்கள். தமிழை ஒழித்துக்கட்ட வேண்டும் என எண்ணும் சமய, சந்தர்ப்பவாதிகளின் போதனையில் ஆழாமல் தமிழுக்குப் புத்துயிரளிக்க முன்வாருங்கள். அகில உலகுக்கும் காரிக்கும் சூரியனை இவர்கள் கைலேஞ்சிகொண்டு மறைக்கப் போகிறார்கள். முடியுமான காரியமா? தமிழே நம் தாய்மொழி. தமிழும் இணைந்தே நம் தேசிய பாஷையாக வேண்டும். வாழ்க தமிழ்.

சிங்களப்பெண்கள் சந்ததியினர் இஸ்லாமியரென்றால் இதுகாறும் தமிழ் பேசியதேன்?

சரித்திரப்புரட்டலை விட்டு சாதாரண வாழ்விலிருந்து நினையிக்க வேண்டும்

வாழையடி வாழையாக வந்த நம் இன்பத் தமிழை கைவிடோம்

சுதந்திரன் 14-3-54. இதழில் முஸ்லிம்களின் மொழிப் பிரச்னை பற்றி மத்திய மாகாண முஸ்லிம் லீக் கௌரவ காரியதரிசி ஜனாப் ஏ. எச். எம். ஹுசைன் அவர்களின் சுயநலமும் தற்புகழ்ச்சியும் கொண்டக் காரணங்களும் நிரம்பிய அபிப்பிராயக் கட்டுரையைக் கண்ணுற்ற நான் மட்டுமென்ன வாழையடி வாழையாக தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்ட எந்த ஓர் முஸ்லிமும் வருந்தாதிருக்க முடியாது!

ஜனாப் ஹுசைன் அவர்களின் சரித்திர ஏட்டுப் பிரசங்கம் அன்னாரின் அறிவையும் அனுபவத்தையும் மெச்சத் தக்கனவாய் இருந்தாலும், ஒரு சிலரின் நன்மைக்காக- முகஸ்துதிக்காக- பதவி வேட்டைகளாக- இலங்கை முஸ்லிம்களுக்கிடையே சிங்களத்தை நுழைத்து விட எடுத்தோதும் காரணங்கள் அவரின் அறிவீனத்தையும் சிறிது பிரதிபலிக்கத் தான் செய்கிறது!

இலங்கை முஸ்லிம்கள் மட்டுமென்ன முஸ்லிம்களே அராபியர் பிற்சந்ததியார் என்பது சரித்திரம் கண்ட உண்மைதான். அக்காரணத்தைக் கொண்டு அவர்களைச் சிங்களத்துக்குரிததுடையோராக்குதல் எவ்வாறு? "அக்காலத்தில் அரேபியாவிலிருந்து இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் சிங்களப் பெண்களை விவாகம் செய்தார்கள் அவர்களின் சந்ததியே இலங்கை முஸ்லிம்கள்" என்னும் ஜனாப் ஹுசைன் அவர்களின் சரித்திரச் சான்றினால்? அப்படியானால் சிங்களப் பெண்களை சிங்களப் பெண்களாகவே தான் அக்கால முஸ்லிம்கள் விவாகம் செய்தார்களா? இக்கூற்றை இஸ்லாமிய சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா!

மத்திய மாகாணத்தில் பெய்த மழையால் இலங்கை முழுவதுமுள்ள தெடி கொடிகள் செழிப்படையும் என்பது ஜனாப் ஹுசைன் அவர்களின் எண்ணமா! மத்திய மாகாணத்திலுள்ளதையும் முஸ்லிம்களின் நடையுடை பேச்சு முதலியவற்றில் பெண்களைக்கூட மதிப்பிடமுடியாத! அவ்வளவிற்கு சிங்களத்தில் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மைதானே? கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுத முண்ணும் அல்லவா? சிங்களப் பிரதேசத்தில் சிங்களவர்கள் மத்தியில் சிங்களவர்களோடு சேர்ந்து நெருங்கி வாழும் எச்சாதியினரும் சிங்களத்தைத் தீர்க்க முறப்பேசுவர் என்பதில் ஆச்சரியப்படத் தக்கதென்னயிருக்கிறது! அக்காரணத்தைக் கொண்டு இலங்கை முஸ்லிம்களைச் சிங்களவர்களென்றோ சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் என்றும் 100க்கு மேல் எழுதவாசிக்கத் தெரியும் என்றும் ஜனாப் ஹுசைன் அவர்களால் எப்படிக் கணிக்க முடிந்ததோ? இலங்கை முஸ்லிம்களெல்லாம் மத்திய மாகாணத்தில் தான் வசிக்கிறார்களா?

சாலிஹ்

முஸ்லிம்களில் 75ற்று விகிதம் சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் என்றும் 100க்கு மேல் எழுத வாசிக்கத் தெரியும் என்றும் ஜனாப் ஹுசைன் அவர்களால் எப்படிக் கணிக்க முடிந்ததோ? இலங்கை முஸ்லிம்களெல்லாம் மத்திய மாகாணத்தில் தான் வசிக்கிறார்களா?

வேலிக்கு ஓணன் சாட்சி என்னும் நாட்டுப் பழமொழிக் கேற்பதனது குமாரர்கள் சிங்களம் கற்கிறார்கள் கற்கப் போகிறார்கள் என்றகாரணத்தால் சிங்களம்தான் இலங்கை முஸ்லிம்களின் தாய்ப பாஷையாக வேண்டுமென்று இவரால் எப்படித துணிந்து கூறமுடிந்ததோ? இரத்தினபுரியில் விளையும் இரத்தினத்தை இலங்கை முழுவதிலும் விளைகிறது என்பது எவ்வாறு சாத்தியமாகும். "இப்பகுதியில்" என்று ஜனாப் ஹுசைன் அவர்கள் குறிப்பிடும் மத்திய மாகாணத்தில் முஸ்லிம்களில் சிங்களத்தில் அனுபவம் வாய்ந்த எழுத்தாளரும் பேச்சாளரும் கவிஞர்களும் இருப்பதாகவும் ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களாக தமிழையே தாய்ப்பாஷையாகக் கொண்ட இலங்கை முஸ்லிம்களுக்கிடையில் தமிழில் அனுபவம் வாய்ந்த எழுத்தாளரோ பேச்சாளரோ இல்லையென்றும் குறைகூறுகிறீரே எவ்வித ஆராய்ச்சியில் தான் கண்டுகொண்டாரோ! படிப்பதும் பட்டாதாரியாவதும் ஒவ்வொருவரினதும் சுயநலத்திலும் சூழ்நிலையிலுமல்லவா தங்கியிருக்கிறது. தமிழ் பேசும் முஸ்லிம்களில் எழுத்தாளரோ பேச்சாளரோ இல்லையென்றுதான் பல நூறுவருடங்களாக முஸ்லிம் களுக்கிடையில் சுடர் விட்டோங்கும் தமிழ் மொழியை அழித்தொழிக்கும் அரும்சேவையிலிறங்கி விட்டாரா? இலங்கை முஸ்லிம்களின் கல்வி, அறிவு, அனுபவம் போன்றவைகளின் தராதரப் பத்திரங்களெல்லாம் ஜனாப் ஹுசைன் அவர்களிடம் தான் இருக்கிறதா?

பெட்டியில் பூட்டிவைத்திருக்கும் வைரமாகவேயை பிறக்கயிருக்கும் பிள்ளைக்குப் போட்டு அழகுபார்க்க ஆசைப்படுவதைத் தவிர மடியில் தவழும் மழலைக்குப் போடுவது தானே உலகஇயற்கை சிங்களமொழி இலங்கை முஸ்லிம்களின் தாய்ப் பாஷையானதும் உண்மையான இஸ்லாமிய இரத்தங்களை வெளியிட யிருக்கும் ஜனாப் ஹுசைன் அவர்கள் இதுகாறும் எல்லோருக்கும் எழுதில் உபயோகமாகும் இனிய தமிழில் வெளியிட்டு இஸ்லாம் மதத்தைத் தழைக்கச் செய்யப்பன்னின்றது ஏனோ? சிங்களம் தான் அதற்கேற்றதோ?

போலிக் காரணங்களையும் பொருந்தாத உவமைகளையும் காட்டி தலைமுறை தலைமுறையாக இலங்கை முஸ்லிம் களுக்கிடையில் தழைத்தோங்கிய தமிழ் மரத்தை சிங்களம் என்ற ஓர்சிறிய கொப்புக் துவண்டு விட்டதற்காக வெட்டி வீழ்த்தச் சொல்கிறார் ஜனாப் ஹுசைன்சிந்தித்துப்பாருங்கள் எதைவெட்டுவது? கிளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுமான் அழுகிறார்!

லக்ஷ்மணபுரியில் அரசமரத்தின் கீழுள்ள ஹனுமான் கற்சிலை அழும் அற்புதத்தைக் காண நகரமே திரண்டெழுந்து விட்டது. காலை 11 மணி இருக்கும். பூசாரி அன்றாட பூஜை முறைப்படி அரைத்த மஞ்சள் குழம்பை விக்கிரகத்திற்கு அப்பிக்கொண்டிருந்தார். அப்போது சிலையின் இடது கண்ணிலிருந்து தண்ணீர் தாரை தாரையாக வருவதைக் கண்டார்;

சுதந்திரன்
SUTANTIRAN

1954 ஏப்ரல் மீ 25 ஒ

194 ஏ தடட்ட தெரு. போன: 3411.

யாரால் என்ன?

சேர் ஒலிவர் குணதிலகா இந்நாட்டின் மிகப் பெரிய பதவியான மகா தேசாதிபதிப் பதவியை அடைந்துவிட்டதுபற்றி சிங்கள மக்கள் களிப்புறுவதற்கு இடமுண்டு எனக் கடந்த வாரம் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். அப்படியானால் தமிழ் மக்களின் நிலை யென்ன?

இலங்கையில் நிலவும் ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மக்களுடைய நிலைமை இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன கூட வந்த குரங்கு ஆண்டாலென்ன என்பதுதான்.

சோல்பரி அரசியல் திட்டம் இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை இனமான சிங்கள இனத்திற் குத்தான் சகல அதிகாரங்களையும் தேடிக் கொடுத்திருக் கிறது. இந்தத திட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மக்களும் இதர சிறுபான்மையினரும் ஒடுக்கப்பட்ட மக்களாக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த நாட்டின் ஆட்சியில் ஆதிக்கத் தில் அவர்களுக்கு நியாயப்பூர்வமான உரிமை எதுவும் வழங்கப்படவில்லை. அவர்களில் சிலர் குமாஸ்தாக்களாக வும், அதற்கு சற்று மேற்பட்ட உத்தியோகஸ்தர்களாக வும், கைகாட்டும் பொம்மை மந்திரிகளாகவும் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் நாட்டின் தலைவிதியைத் தீர்மா னிக்கும் உரிமையில் சிறு பங்கு கூட அவர்கள் கையில் கிடையாது. அதிகமேன் அரசாங்க வைபவத்தில் சிங்களத் திற்கு இடமளித்தால் தமிழுக்கும் இடமளிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல வாய்ப்பலம்கூட அவர் களுக்கில்லை.

பிரதமர் மாறினாலென்ன, புதிய மந்திரி சபை தோன்றினாலென்ன, பழைய மந்திரிகளுக்கு சீட் டுக் கிழிக்கப்பட்டாலென்ன, மகா தேசாதிபதிப் பதவி யில் மாற்றம் ஏற்பட்டாலென்ன தமிழ் மக்கள் சகல நாடகங்களையும் கொட்டகைக்கு வெளியில் கைகளைக் கட்டிக்கொண்டு கால்கடுக்க நின்று பார்க்கும் பார்வை யாளர்களைப் போலவே ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் தன்மானத்துடன் சுயாதீன மக்களாக வாழ்வதெப்படி?

மகா தேசாதிபதிப் பதவியில் மாற்றமோ அன்றி பிரதமர் பதவியில் மாற்றமோ தமிழ் பேசும் மக்களுக்கு எதுவித பயனும் அளிக்கப் போவதில்லை. நாட்டின் அடிப் படை அரசியல் திட்டமே மாறவேண்டும். அதை மாற்றி யமைக்க தமிழ் இனம் ஒன்றுபட்டுப் போராடவேண்டும். அப்படிப் போராடி வெற்றி கண்டால்தான் தமிழ் மக்க ளுக்கு இந்த நாட்டில் விமோசனமுண்டு.

தங்களைத் தாங்களே ஆளக்கூடிய ஒரு அரசியல் திட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கிற காலத்தில்தான் அவர்கள் தாங்கள் விரும்பிய பிரதமரை யும், தேசாதிபதியையும் தாங்களே தேர்ந்தெடுத்து அத னால் பெருமிதமும் பேறும் அடைய முடியும்.

அப்போதுதான் தமிழ் இனத்திற்கு ஆதிக்கமும், விடுதலையும், சுபீட்சமும், இன்பமும் ஏற்பட இடமுண்டு.

பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது

நேரு-கொத்தலாவலை ஒப்பந்தம் வெளியான போது அந்த ஒப்பந்தம் பொதுவாக இலங் கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கும் குறிப்பாக மலைநாட் டுத் தமிழ் மக்களுக்கும் மிக மிகப் பாதகமானது என்று குறிப்பிட்டு சுதந்திரன் 24—1—54 இதழில் இவ்வொப் பந்தத்தை "எல்லோரும் எதிர்க்கவேண்டும்" என்று தலையங்கம் தீட்டினோம்.

மேற்படி தலையங்கத்தில் நாம் குறிப்பிட்ட பகுதி பின்வருமாறு:

> "தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்குமே படுபா தகமாக முடியப் போகிற இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படாமல் தடுத்து நிறுத்துவதில் தமிழ் பாரா ளுமன்றப் பிரதிநிதிகள், அரசாங்கக் கட்சி யைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இன நன்மை, மொழி நன்மைகளை உத்தேசித்து அவர்கள் தோளோடுதோள் நின்று எதிர்ப்புக் காட்ட வேண்டும்."

பிரஸ்தாப ஒப்பந்தத்தைப்பற்றி சுதந்திரன் அரசி யல்விமர்சகர் எழுதுகையில் "இலங்கை இந்தியப் பிரதமர்களின் சந்திப்பினால் பெரும் பயன் எதுவும் ஏற் பட்டுவிடாது. இந்த சந்திப்பு தங்களுக்கு விமோசனத்தைக் கொண்டுவரும் என்ற பலநாட்டுத் தமிழர்கள் எண்ணுவார்களே யானால் அவர்கள் ஏமாற வேண்டியதுதான் என்றும்

"நேரு—கொத்தலாவலை சந்திப்பு பயன் அளிப்பதற் குப் பதிலாக இப்போது நிலவிவரும் நிலையிலும் படுமோசமான கதிக்குள் மலைநாட்டுத் தமிழர்களைத் தள்ளியிருக்கிறது" என்றும் குறிப்பிட்டார்.

சுதந்திரனின் தீர்க்கதரிசனமான அரசியல் கருத்துக் கள் எழுத்துக்கெழுத்து சரியாகி வருவதை நேயர்கள் இப்போது உணரக்கூடியதாக இருக்கிறது. இலங்கை இந் தியர் காங்கிரஸ் தலைவர்கள் இருவர் வெவ்வேறு இடங் களில் கடந்த வாரம் பேசியிருக்கிறார்கள்.

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் இலங் கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்ட மான் பேசியதாவது:

> "டில்லியில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந் தியா ஒப்பந்தத்தின் இலட்சியம் இலங்கை இந்தியர் நிலைமையை அபிவிருத்தி செய்வதே தவிர மேலும் மோசமாக்குவதல்ல. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நிலைமை டில்லி ஒப்பந்தத்திற்குப்பின் படுமோசமாகிக் கொண்டிருக்கிறது."

> "டில்லி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட திகதி யிலிருந்து இங்குள்ள இந்தியரின் நிலைமை தினே தினே மோசமடைந்து வருவதை இரு தேச அரசாங்கங் களும் மறுக்க முடியாது. நிலைமை இவ்வளவு மோசமடைந் தும் ஒன்றும் நடவாததைப்போல இந்தியத் தூதுவர் திரு எஸ். தேசாய் மௌனமாயிருப்பது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது."

நாவலப்பிட்டியையடுத்த தொளஸ்பாகையில் பேசிய திரு எஸ். வி. வேலுப்பிள்ளை கூறியிருப்பதாவது:

> "இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பொழுது எல்லா வட்டாரங்களிலும் நல்லெண்ணம் அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது ஆனால் துரதிர்ஷ் டவசமாக ஒப்பந்தத்திற்குப்பின் இலங்கை அரசாங் கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் அனைத்தும் நல் லெண்ணத்திற்கு மாறாக இருந்துவருகின்றன. ஒப்பந் தம் இல்லாமல் இருந்தால் தங்கள் நிலைமை இன்னும் நன்றாக இருந்திருக்குமோ என இலங்கை இந்தியர் கள் இன்று எண்ணுகிறார்கள். இலங்கை இந்தியரின் எதிர்காலத்தைத் தீர்மானித்துவிட வேண்டுமென்ற ஆவலில் திரு. தேசாய் கொண்ட நடவடிக்கை பிள்ளையார் பிடிக்க குரங் காய் முடிந்த கதையாய் விட்டது. இப்பொழுது ஆயிரக் கணக்கான இந்தியர்கள் நிர்ப்பந்தமாக நாட்டை விட்டு வெளியே அனுப்பப்படக்கூடிய நிலை ஏற்பட் டுள்ளது. இந்த துரதிர்ஷ்டத்திற்கு திரு. தேசாய்க்குத்தான் நாம் நன்றி கூறவேண்டும்!"

நாம் ஏற்கனவே கூறியபடி நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம் பயனற்றது என்பது மாத்திர மல்ல இந்த நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு பெரிதும் பாதகமானது என்பதும் இப்போது தெளிவாகிவிட்டது. இனி மேலும் அவ்வொப்பந்தத்தைக் கட்டியழுதவதில் அநுகூலம் எதுவும் ஏற்படப் போவதில்லை. இம்மாதக் கடைசியில் இந்தியப் பிரதமர் நேரு இலங்கைக்கு வரு கிறார். அவரிடம் இலங்கை இந்தியக் காங்கிரஸார் தம் தீர்க்கமான முடிவைத் தெரிவித்து இந்தப் படுபாதக மான ஒப்பந்தத்திற்கு ஒரு முடிவு காணவேண்டியது அவர்கள் கடமை. ஒப்பந்தத்தை நிராகரிக்கவுமில்லை; ஏற்றுக் கொள்ளவுமில்லை என்ற இரண்டுங் கெட்டான் நிலைமையை அவர்கள் இன்னும் தொடர்ந்து கடைப் பிடிப்பது மதியூகமான செயலாகாது என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம்.

பிரதம மந்திரிகள் மகாநாட்டின் பின் மந்திரி சபை மாற்றியமைக்கப்படும்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

ஐ. என். பி. குள்ளேயே குத்து வெட்டுக்கான சூழ்நிலை யொன்று உருப்பெற்று வருவ தாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். சேர் ஒலிவர் குணதிலகாவை அடுத்த கவர் னர் ஜெனரலாக சேர் ஜோன் சிபார்சு செய்தது பலருக்கு திருப்தியளித்த போதிலும் ஒரு குறிப்பிட்ட சிலருக்கு இது பிடிக்கவில்லையாம். அவர்கள் உள்ளுக்குள்ளேயே பிளவு ஏற் படுத்தவும் கட்சி பிரிக்கவும் கங் கணம் கட்டிக்கொண்டு வேலை செய்து வருகிறார்கள். இவர் கள் சிலராய் இருந்தபோதிலும் பலம் பொருந்திய கோஷ்டி யினர் என்று சொல்லப்படு கிறது. இவர்களுடைய திட் டம் சேர் ஜோனைக் காலவாரி விட்டு திரு ஜே. ஆர். ஜெய வர்தனவை அதிகாரத்திற்குக் கொண்டுவருவதுதான்.

ஒலிவர் குணதிலகா கவர் னர் ஜெனரலானதும் காலியா கும் நிதிமந்திரிப் பதவிக்கு திரு ஹரி ஜயவர்தன நியமிக்கப்பட விருப்பது திரு ஜே ஆர். ஜய வர்தனவுக்கு கொஞ்சம் கூடத் திருப்தியளிக்கவில்லையாம். தன்னிடமிருந்த நிதிமந்திரிப் பதவியை சேர் ஒலிவரிடம் பிடுங்கிக்கொடுத்துவிட்டு இப் போது பொறுப்பு வாய்ந்த அப்பதவிக்கு ஒரு ஜூனியர்மந் திரியை நியமிப்பது தம்மை அவமதித்தது போலாகிறது என்று திரு ஜே. ஆர். கருது கிறாராம்.

பிரதம மந்திரிகள் மகாநாடு முடிவுற்றதும் சேர் ஜோனின் கவனம் மந்திரி சபையை மாற் றியமைக்கும் விஷயத்தில் செல் லும் என்றும் மந்திரிகளின் தொகை குறைக்கப்படலா மென்றும் நம்பப்படுகிறது. உள்நாட்டு மந்திரி திரு ஏ. ரத் நாயகாவை சுகவீனக் காரண மாகராஜினாமாச் செய்யும்படி செய்துவிட்டு அந்த இடத்தில் திரு டட்லியைக் கொண்டு வந்து புகுத்த இப்போதிருந் தே அடித்தளம் அமைக்கப்படு கிறதாம். ஆனால் இதுவரை திரு டட்லி தமது சம்மதத் தைத் தெரிவிக்கவில்லை யென் றும் சற்றுப் பின்வாங்குவதாக வும் தெரிகிறது.

மந்திரி சபையின் தொகை குறைக்கப்பட்டால் திரு ஸி. டபிள்யு. டபிள்யு. கன்னங் கராவுக்கு சீட்டுக் கிழியாம் எனப் பலர் எதிர்ப்பார்க்கின் றனர். மந்திரி சபையிலுள்ள தமிழ் மந்திரிகளின் தொகை யையும் இரண்டிலிருந்து ஒன் றுக்கி விடுவதென்றும் ஆலே சிக்கப்பட்டு வருகிறதாம். இதற்கிடையில் ஏதாவதொரு தமிழ் மந்திரியின் இடம் காலி யானால் அதைப் பிடித்துவிட தமிழ் டேசும் அரை மந்திரிகள் இருவர் இடபோதிருந்தே சேர் ஜோனுக்கு காச்சாய் பிடித்து வருவதாகவதற்திகள் அடிடு கின்றன. எது எப்படியிருந்த போதிலும் கூடிய விரைவில் மந்திரி சபையில் பல மாற்றங் கள் நிசழவிருக்கின்றன என் பதுமட்டும் திண்ணம்.

சேர் ஒலிவர் குணதிலகா கவர்னர் ஜெனரலானால் சென்ட் சபையின் முதல்வர் யார் என்ற பிரச்னையும் எழுகி றது. இதற்கும் இப்போதி ருந்தே திரைக்குப் பின் கயிறு இழுக்கும் வேலைகள் ஆரம்ப மாகிவிட்டன என்று தெரிகி றது. சேர் கந்தையா வைத் தியநாதன், உக்வத்த ஜயசுந் தரா, ஈ. பி. விக்கிரம நாயகா ஆகியோரின் பெயர்கள் அடிப் படுகின்றன. ஒரு தமிழருக்கு இப்பதவி கிடைக்கும் என்று நினைப்பது முயற் கொம்பே. அநேகமாக திரு விக்கிரமநாய காவிற்குத்தான் 'சான்ஸ்' உண்டு என்று நம்பப்படுகிறது.

காரைநகர் ஆதாரக் கல்விப் பாடசாலைக்கு மூடுவிழா!

கல்வியிலாகாவின் சர்வாதிகாரத்திற்கு எதிர்ப்பு

தமிழை எதிர்க்கும் சூழ்ச்சி?

[நமது நிருபர்]

ஊர்காவற்றுறை, ஏப். 15

இன்றைய பூ. என். பி. ஆட்சியினர் ஈழத் தமிழினத்தை ஒழித்துக்கட்ட முற்படடிருக்கின்றார்கள்—முழுமூச்சாக முயற்சித்து வருகின்றார்களென் பதைக் கடந்த காலச் சம்பவங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. காரைநகர் ஆதாரக் கல்வி பாடசாலைக்கு அரசாங்கம் மூடு விழா நடத்த முனைந்திருப்பது இதை மீண்டும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

தமிழ் மொழியை இலங்கை யிலிருந்து ஒழித்துக்கட்டி இலங் கையை முழுக்க முழுக்கச் சர்வ சிங்கள நாடாக மாற்றுவதற் குரிய வேலைகள் சிங்கள வகுப்பு வாதிகளினால் தீவிரமாகக் கையாண்டு வரப்படுகிறது. தமிழ்ப் பாஷையை ஒழித்துக் கட்டும் முயற்சி இப்பொழுது பல இடங்களிலும் சையாளப் பட்டு வருகின்றது. பலநாட் டுப் பகுதித் தமிழ்ப் பாடசாலை களை மூடித் தமிழ் மக்களை நசித்து வரும் ஆட்சியினர் இப் பொழுது வட மாகாணத்தி லும்—செந்தமிழ் மக்கள் வாழும் தீவுப் பகுதிகளிலும் கைவைக்கத் தொடங்கிவிட்டனர். பல வருடங்களாக—இலங் கையிலேயே காந்தீய அடிப் படையில் நடைபெற்று வரும் ஓரேயொரு தமிழ்ப் பாடசாலை யான காரைநகர் ஆதாரக் கல் விப் பாடசாலை ஆட்சியினரின் அடக்குமுறைக்கு—மூடுவிழா வுக்கு அகப்பட்டுவிட்டது. இப் பாடசாலையை உடனடியாக மூடிவிடுமாறு கல்வி இலாகா சர்வாதிகாரத்துடன் அறிவித் துள்ளதாம்.

இப்பாடசாலையில் நான்கு ஆசிரியர்கள் படிப்பிக்கின்றார் கள். இவர்களில் ஒருவருக்குத் தான் அரசாங்கம் சம்பளம் கொடுக்கின்றது. ஏனையோருக் குப் பொதுமக்களின் உதவியு டன் வேதனம் வழங்கப்படுகிற தாம். இப்படிப்பட்ட பாட சாலையை முடுமாறு கல்வி இலாகா உத்தரவிட்டதானது தமிழ்ப் பேசும் மக்களை ஒழிக் கும் சூழ்ச்சியின் ஒரு படியாகு மெனப் பொதுமக்கள் கூறுகி றார்கள்.

வீரமுனையில் நடைபெற்ற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபர் அங்கு விசாரித்தறிந்த கலவரத்தின் விவரங்கள் பின் வருமாறு:—

வீரமுனை யென்பது சம்மாந் துறையென்னும் ஊரையடுத் துள்ள ஒரு சிறு கிராமம். இங்கு தமிழ் மக்களும் அதை யடுத்து முஸ்லிம் மக்களும் வாழ்கிறார்கள். பல நூறாண் டுகளாக இந்த இரு சமுகத்தி னரும் சகோதரர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இன பேதமோ மதபேதமோ இவர் களிடம் கிடையாது. இது போன்ற ஒரு கலகம் அங்கு இதற்கு முன்பு நடந்ததுமில்லை. இப்போது நடைபெற்ற கல வரத்திற்கு தமிழ் முஸ்லிம் வேற் றுமை காரணம் என்று சொல் லமுடியாது. சிலகாலத்திற்கு முன்பு நடைபெற்ற பட்டின சபைத் தேர்தலின் எதிரொலி யே இக்கலகத்திற்கு வித்தாய் இருந்திருக்கிறதுஎனநான்விசா ரித்தவரையில் தெரிய வருகி றது. வீரமுனைக் கிராமத்து மக் கள் அனைவரும் விவசாயிகள்.

இக்கிராமத்தில் நடை பெற்ற பட்டினசபைத் தேர்த லிலிருந்து இங்கு மாணிக்கம் கட்சி, பழனியாண்டிக் கட்சி யென இரு கட்சிகள் உண்டு என்று சொல்லப்படுகிறது; இவ்விருவரும் போட்டியிட்டு திரு மாணிக்கம் வெற்றி பெ ற்று, சம்மாந்துறைப் பட்டின சபையின் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டாராம்.

இக்கிராமத்தின் தலைமைக் காரர் திரு சிவசம்பு என்பவர் இவர் மறு கட்சியைச் சேர்ந்த வர் என்றும் மாணிக்கம் கட்சி யைச் சேர்ந்தவர்களுக்குப் பா தகமாய் நடந்தார் என்றும் சொல்லப்படுகிறது. கலவரம் நடைபெற்ற சமயத்தில் திரு சிவசம்புவைதேடி காரணத்தினால்

(9—ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழை எதிர்நோக்கும் ஆபத்தை தடுப்போம்

தியாகம் புரியவும் இளைஞர்கள்-ஆயத்தமாக வேண்டும்

வாலிப சங்க ஆரம்ப விழாவில் உறுதி

(நமது நிருபர்)

தமிழ் மொழி— தமிழ் நூல்கள்—தமிழ்க் கலைகள் ஆகியவற்றை பரப்பவும்—பாதுகாக்குமுகமாகவும்; சாதி—சமய வேறுபாடுகளை அகற்றி பணி புரியும் புனித நோக்குடன், நாட்டில் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் ஆர்வமிக்க வாலிபர்களை சிறந்த கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து தொண்டு செய்யும் முகமாக மட்டக்களப்பு வாலிபர்கள் ஆதரவின் கீழ் கடந்த வாரம் நகர சபை மண்டபத்தில் ஓர் ஆரம்பக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் மொழி பயின்றோரும், ஆங்கிலம் சற்றேறுமான வாலிபர்கள் ஒன்றாக இணைந்து காரியமாற்றிய சரித்திர சம்பவம் இவ்விழாவெனச் சொல்லலாம்

சுவாமி விபுலானந்தர் சுப்பிரமணிய பாரதியார், சுத்தானந்த பாரதியார் ஆகியோருடைய திருவுருவப் படங்களை அலங்காரமாக சோடித்து கோட்டை முனை ஸ்ரீ சிவானந்த வாசிகசாலையிலிருந்து வாலிபர்கள் ஊர்வலமாக எடுத்து வந்தனர்.


யாழும், மீனும் பொறித்த கொடிகளும், ''செந்தமிழ் வாழ்க''; ''தீந்தமிழே நீ நீடுழி வாழ்க", ''தமிழ்க் கலைகள் வாழ்க", ''தமிழ் செல்வர்கள் வாழ்க'' என்ற சுலோகங்களை தாங்கியவடி வாலிபர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

தெருவெல்லாம் மக்கள் தமிழ் மொழியை வாழ்த்தியும் பட்டாசுகள் சுட்டும் பாராட்டைத் தெரிவித்தனர்.

திரு இரா. பத்மநாதனின் ''சுகங்கள் நிறைந்த எங்கள் தமிழ்வாழ்கவே'' என்ற வாழ்த்துப் பாட்டுடன் விழா ஆரம்பமாகியது.

தலைமை தாங்கிய பண்டித மணி திரு ஏ. பெரியதம்பிப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் ''படித்த வாலிபர்களில் பெரும்பாலோர் தாய்மொழிப் பற்று குறைந்தவர்களாகக் காணப்படுவது வேதனைக்குரிய காட்சியாகும். சுதந்திரமடைந்து விட்ட இலங்கையில் சுதேச மொழிகள் அரசகரும மொழிகளாக என்றோவொரு நாள் வந்துதான் ஆகப்போகின்றன. எனினும் சொந்த மொழிக்காரர்கள் தம் மொழியின் மீது பற்றுதலும், பாசமும் குன்றிய வர்களாக விருப்பது நல்லதல்ல நாட்டில் தமிழ் மொழிப் பற்றுதலும், புதிய தமிழ் நூல்கள் பிறக்கவும் மார்க்கம் அமைப்போராக இளைஞர்கள் காரியமற்ற வேண்டும். இளைஞர்கள் எந்தக் காரியத்தையும் திரயோசித்து—நல்ல திட்டத்தின் கீழ் செயலாற்ற முகவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து அரசினர் ஆசிரிய கல்லூரி விரிவுரையாளர் பண்டித செ. பூபாலபிள்ளை சிலப்பதிகாரம் பற்றிப் பேசினர். சிலப்பதிகாரத்தை பேசுவதோடன்றி தம் வாழ்க்கையில் நிரந்தரமாக அனுஷ்டிப்பவர் அவர். கண்ணகி என்றால் அவரின் சொந்த மகளைப்போல கருதுபவர். இளங்கோ அன்னரின் வழிபாட்டுக் கடவுளுக்கு சமானமானவர். தமிழ் நாட்டின் அறவாழ்வு—அருளுடைமை குடிகொண்ட சீரிய குடும்ப வாழ்க்கை முறையை சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்துக்காட்டினர். சிலப்பதிகாரம் தமிழ் இலக்கிய உலகத்தின் அழியாச் செல்வம். அதைப் பாதுகாக்க—பரப்ப—அதிலுள்ள வாழ்வில் இலக்கணத்தை மக்கள் பண்றத்தில் எடுத்துக்காட்டி தொண்டு செய்ய தமிழ் பக்கள்—விசேஷமாக இளைஞர்கள் முன்வருதல்வேண்டும். காதல் வாழ்க்கை—



திரு ஏ. பெரியதம்பிப்பிள்ளை

கற்பு நெறி—வீரம் இவற்றுக்கு சிலப்பதிகாரம் சிறந்த எடுத்துக்காட்டு. வீழ்ந்து கிடக்கும் தமிழினம் தம் வீர வரலாற்றைத் தெரிந்துகொள்ள சிலம்புச் செல்வம் உறுதுணையாகுமென்று கேட்டுக் கொண்டார்.

செல்வி தெரேஸ் ரூபராணி யோசப் தமிழகப் பெண்களின் வாழ்க்கை முறையை சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டினர். புறநானூறு அகநானூறு ஆகிய வற்றில் வரும் தமிழ்ப் பெண்களை சபை முன் அவர் கொண்டுவந்து நிறுத்திய போதெல்லாம் ''ஐயோ தமிழ் நாடே'' என்று தான் ஆயாசப்பட முடிந்தது.

சபையாக பேசிய திரு எஸ். இராஜதுரை, 'இளைஞர்கள் செய்ய முற்படும் எந்தக் காரியத்திற்கும் இடையூறு இருந்து வருவது சர்வசாதாரணமென்றும் அவற்றினால் நாம் செயல் ஊக்கம் குன்றிய வர்களாகப் போய்விடக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நாட்டிலுள்ள சித்திரக் காரர்கள்—இசைவல்லுநர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், புலவர்கள், கவிஞர்களாகியோரை முன்னுக்குக்கொண்டு வருவதிலும், கைகொடுத்துக் காப்பதிலும் இந்த வாலிப இயக்கம் அயராது உழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இசையரங்கு

இலங்கை வானொலி பிரபல பாடகர் திரு நா. இராசு அவர்கள் தம் இனிய குரலால் இன்னிசை விருந்தளித்தார்.

விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூற முற்பட்ட திரு பூ. சங்கரவேல் பி. எஸ். ஸி. தாங்கள் ஏன் இத்தகைய சங்கமொன்றை ஆரம்பிக்க முற்பட்ட காரணத்தை எடுத்துக் கூறினர்.

செயற்குழு

விழாவில் கலந்து கொண்ட தமிழன்பர்கள் கீழ்க்கண்ட செயற்குழுவையும் தேர்ந்தெடுத்தார்கள். தலைவர் டாக்டர் ஜே. சிவலிங்கம், உபதலைவர் எஸ். இராஜதுரை, இணைச் செயலாளர்கள், பூ. சங்கரவேல் பி. எஸ். ஸி., ஏ. டி. சம்பந்தர், பொருளாளர்கள் அ. குமாரகுரு, திரு சுந்தரலிங்கம்.

வீரமுனையில் நடைபெற்ற...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லீவில்நின்றதாகவும் அவருடையஇடத்தில் சம்மாந்துறை 3-ம் குறிச்சி தலைமைக்காரர் ஜனுப் முகம்மது அலி கடமை பார்த்து வந்ததாகவும் தெரிகிறது.

கடந்த 15-ந் திகதி வீரமுனையில் இரு கட்சிக்குமிடையே ஒடி குட்டிக் கலவரம் கிளம்பியதாம். அதை ஜனுப் முகம்மது அலி அடக்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

மறுதினம் இரண்டு மணியளவில் கலகம் மீண்டும் தளிர்த்தது. இக்கலகத்தில் உபதலைவர் மாணிக்கம் காணப்பட்டாராம். கலகம் உருவாகிய இடத்திற்கு ஜனுப் முகம்மது அலியும் 4-ம் குறிச்சித் தலைமைக்காரர் ஜனுப் அஃமது லெவ்வையும் விரைந்து சென்று மாணிக்கத்தின் நெஞ்சில் கை வைத்து அவரை மறியல்படுத்தினராம்; உடனே முகம்மது அலி மாணிக்கத்தின் ஆதரவாளர்களால் பலமாகத் தாக்கப்பட்டதாகவும் தலையிலும் முதுகிலும் கத்தியால் குத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

இதையறிந்த முஸ்லிம் மக்கள் அங்கு திரண்டுவந்து ஆர்ப்பாட்டம் பண்ணினார்களாம். ஆனால் மாணிக்கம் கோஷ்டியிடம் அணுக முடியவில்லையென்றும் அதற்கு மாணிக்கம் கோஷ்டியினர் துப்பாக்கி சகிதம் காணப்பட்டதே காரணம் என்றும் சொல்லப்படுகிறது. கலவரத்தில் ஈடுபட்டிருந்த பலர் நன்றாகக் குடித்திருந்தார்களாம்.

திடீரென்று துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றது. இதில் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒருவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் காலமானார். மேலும் சுடமுடியாமல்தோட்டாமுடிந்தபோகவே திரு மாணிக்கத்தைக் கூட்டம் தடிகளினாலும் கத்தியாலும் தாக்கத் தலைப்பட்டது. மாணிக்கம் ஸ்தலத்திலேயே மரணமானார்.

இதற்கிடையில் ஆத்திரம் கொண்ட கூட்டம் சுமார் 60 வீடுகளுக்கும் நெற்களஞ்சியங்களுக்கும் தீ வைத்து கிராமத்தையே சுட்டுப் பொசுக்கியது; வெந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்று சில காலிகள் கொள்ளையிலும் திருட்டிலும் ஈடுபட்டனர்.

பயத்தினால் ஊர் மக்கள் காரைதீவு, சொறிக்கல்முனை, மல்வத்தை, சவளக்கடை போன்ற கிராமங்களுக்கு ஓடி விட்டனர். கிராமம் பாழ் விழுந்து கிடக்கிறது.

பாராளுமன்றத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதேன்?

மானமிருந்தால்-தன்மான உணர்ச்சியிருந்தால் தமிழ் மந்திரிகள் பதவிகளை உதறித் தள்ளட்டும்

திரு அமிர்தலிங்கத்தின் அறைகூவல்


(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் ஏப். 22

''இலங்கைப் பாராளுமன்றத்தை இரண்டாம் எலிசபெத் மகாராணியார் திறந்து வைத்த சரித்திரப் பிரசித்திபெற்ற வைபவத்தில் இந்நாட்டின் தேசீய பாஷைகளில் ஒன்றெனக் கூறிக்கொள்ளப்படும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதற்குத் தமிழ் விழாக்களுக்குத் தலைமைதாங்குவோரும் தமிழ் முழக்கம் செய்யும் மந்திரிகளும் என்ன சமாதானம் சொல்லப்போகின்றார்கள். தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டால் ஒரு நிமிட நேரமும் எங்கள் பதவியை வகிக்க விரும்பமாட்டோம்—உடன் ராஜினாமாச் செய்துவிடுவோமெனத் தகடுதத்தம் போடும் தமிழ் மந்திரிகள் இந்நிகழ்ச்சிகளைக் கண்டும் கண்மூடி மௌனிகளாகக் காட்சியளித்தமை வியப்பாக இருக்கின்றது.''

இவ்வாறு கடந்த வாரம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விழாவில் பேசிய திரு ஏ. அமிர்தலிங்கம் பி. ஏ. குறிப்பிட்டார் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''இன்றைய சிங்கள வகுப்புவாதிகள் இந்நாட்டிலிருந்து இன்பத் தமிழ் மொழியை அழித்து ஒழித்துவிடக் சங்கணங் கட்டிக்கொண்டு செயலாற்றி வருவதைக் கடந்த காலச் சம்பவங்கள் தெட்டத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன. இலங்கையின் அரசகரும மொழியில் ஒன்றான தமிழ் இலங்கைப் பாராளுமன்றத்தில் புறக்கணிக்கப்பட்டமை இன்றைய ஆட்சியின [illegible]



திரு ஏ. அமிர்தலிங்கம்

ரின் மொழிக் கொள்கையை எடுத்துச்சாட்டுகின்றது. இந்நிலையில் தமிழ் மக்கள் கண்மூடிகளாக வாழாது விழிப்புடன் தங்கள் மொழியின் எதிர்கால நிலைபற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்'' என்றார்.

''இந்த நாட்டிலுள்ள சிங்களத் தலைவர்கள்-பிரதமர் சொத்தலாவலை உட்பட சிங்களமே அரச பாஷையாகும் என்று சந்தேகத்திற்கிடமில்லாத முறையில் கூறியுள்ளார்கள். இப்படியிருந்தும் தமிழ் புறக்கணிக்கப்பட்டால் பட்டம் பதவிவிட்டு திரு வன்னிய சிங்கம் காட்டும் பாதையில் தோளோடு தோள் நின்று போராடுவோம் என்று டம் மாரமடித்த தமிழ் தலப்பாக்கள் இன்று வாளாதிருப்பதேன். மானமிருந்தால் தன்மான உணர்ச்சியிருந்தால் பதவிகளை உதறிவிட்டு நம்முடன் தாய்பாஷை சாக்க வரட்டும் என்று அறைகூவுகிறேன்'' என்று தொடர்ந்து சவால்விட்டார்.

கூட்டத்திற்கு கோப்பாய் பிரதிநிதி திரு ஸி. வன்னியசிங்[illegible]



டிரேட் மார்க் No. 13333

போலி முடிகள் அதிகரித்துவிட்டதால் எமது உத்தரவாதமுள்ள மயில் மார்க்குகளை கவனித்து வாங்கவும்.

மயில் மார்க் மனிதர் முடிகள்

பெண்களின் அழகை அதிகரித்து முக வசீகரத்தைத் தருகிறது. மயில் மார்க் மனிதர் முடிகள் கைதேர்ந்த தொழிலாளர்களால் ஒவ்வொரு ரோமங்களையும் மிகவும் கவனத்துடன் சேர்க்கப்படுவதால் 60 மாதம் உத்தரவாதமுள்ளது. பாவித்த பிறகும் மாறுதல் ஏற்பட்டால் ரூபாய் வாபஸ்தரப்படும்.

ஏக வினியோகஸ்தர்கள்:

பூமகள் ஸ்டோர்ஸ்,

111, செட்டியார் தெரு, கொழும்பு.

கீழ்க்கண்ட எமது ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

கண்டி டயஸ்டோர்ஸ் — M. M. மன்சூர், கேகாலை
மணிமுத்து ஸ்டோர்ஸ், சோலைக்கல் — K. M. மீரான் உன்னி, பளுகஸ்துறை
ஆனந்தா ஸ்டோர்ஸ், பதுளை — K. W. பெரேரா & சன்ஸ் லிமிட், மாதம்பை
அப்பிகா ஸ்டோர்ஸ், பதுளை — K. R. பெரேரா & சன்ஸ் லிமிட், குளியாப்பிட்டி

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை அழகுபடுத்துவதிலும் அகத்தை

அழகுறச் செய்யும் கல்வி அழகே அழகு

சிறந்த தேசபக்தர்களையும்-கலா வல்லுனர்களையும் ஆக்குவிப்பது ஆசிரியர் கடமை

குழந்தைகளின் உணர்ச்சி உறவுகளை உணர்ந்து போதிக்க வேண்டும்

பொ. நடராசா

"குழந்தைகளின் முகத்தை அழகு படுத்துவதைக் காட்டிலும் அவர்களது மனதை அழகு படுத்துவதுதான் சாலச் சிறந்தது" என அறிஞர் கிளார்ச்சன் கூறியுள்ளார். அவர் கூறியுள்ளமன அழகுகல்வியினால்தான் உண்டாகும். இதே கருத்தைத்தான்;

".....
நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

என்னும் பாடலடிகள் குறிக்கின்றன.

இங்கு இந்தப் பாடலையும், கிளார்ச்சனின் பொன் மொழியையும், பெற்றோரும், ஆசிரியர்களும் அலசிப்பார்களானால் அவர்களது பொறுப்பின் மகத்துவம் நன்கு விளங்கும்.

மன அழகு

மனதில் அழகு தோன்றினால் தான் அறிவு உதயமாகும்; அறிவு உதயமானால் அன்பு தோன்றும். முன்னேற்றமேற்படும். முன்னேற்றத்தின் மூலம் நாடே சுபீட்சமடையும். ஆகவே பெற்றோர்களும், ஆசிரியர்களும் மன அழகு விருத்தியாவதற்கேற்ற சூழ் நிலையை ஏற்படுத்திக் கல்வியைச் சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

பண்டைக் காலத்தவர்களுக்கு இருந்ததைவிட, மன அழகை விருத்தி செய்யக் கூடிய அதிகமான வசதிகள் இக்காலத்தவர்களுக்கு உண்டு; அவர்களின் காலம் அடவியில், ஆற்றோரத்தில், பர்னகசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில், சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக் கடனை முடித்துக் கொண்டு வந்து பாடங்களைச் சொல்லித் தரும் முறை இருந்த காலம். ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். ஆனால் இப்பொழுதோ உலகை வீட்டுக்குள் அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். அச்சுப் பொறியினால் அகில உலகமும் ஆயிரக்கணக்கான அறிவு நூல்களைப் படித்து மகிழும் காலம். பல மொழி நூல்களையும் படித்து அறிவைத் தேடிக் கொள்ளும் வாய்ப்புள்ள காலம். ஆராய்ச்சிமிக்க காலம். மன அழகை அதிகப்படுத்தும் மார்க்கம் அதிகமுள்ள காலம். காலத்திற்கேற்பக் கருத்தும் மாறுபடுதல் போல கல்வித் துறையிலும் மாற்றங்கள் பல.

விளக்க மில்லாமல் பாடத்தை நெட்டுருப் பண்ணி ஒப்புவிக்கும் முறைகள் எல்லாம் இன்று கல்வித் துறையில் இல்லை. சிறுவர்களின் உடல், உளம், ரசஞானம், சன்மார்க்கம் என்பன விருத்தியாகக் கூடிய கல்வி முறை இன்றுள்ளது. இதற்கேற்ப பாடத்திட்டம், நேரசூசி என்பவற்றில் மாற்றங்கள்.

ஏன்?

பாடங்களில் மாற்றம்

மூளையிலுள்ள உயிரணுக்கள் சில விநாடிகளில் சோர்வடைந்து போகக் கூடிய மென்மையானவை. மூளையில் கோடிக் கணக்கான உயிரணுக்கள் இருப்பதால் நெடு நேரம் தொடர்ந்து வேலை செய்ய முடிகிறது. மூளையின் இரத்தோட்டம் களைப்பினால் பாதிக்கப்படுவதை 'கொட்டாவி' தலைவலி, முதலிய அறிகுறிகள் காட்டுகின்றன. சிறுவர்களுக்கு உளச் சோர்வினல், உடல் வளர்ச்சி தடைபடுகிறது. இச் சோர்வை நீக்கும் விதமாக பாடங்களின் தன்மையும், அவைகள் ஒன்றோடொன்று தொடரும் வகையும், வகுப்பு நேரமும் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். காலையில் கடின பாடங்களும், மாலையில் இலகுவான பாடங்களும் அமையக் கூடியதாக நேர சூசி அமைக்க வேண்டும். இரண்டு கடின பாடங்களுக்குப்பின் இலகுவான பாடம் மாறிமாறி வரலாம். வகுப்புகளுக்குத் தக்கதாக நேரம் அமைய வேண்டும்.

மாணவர்களிடம் சிறந்த பற்றுக்களை ஏற்படுத்துவதே ஆசிரியன் கடமையும் கல்வியின் நோக்கமுமாகும். விரும்பத்தக்க பற்றுக்களை மாணவர் மனதில் வளர்ப்பது பள்ளிக் கூடத்தின் வேலையாகும். பாட விஷயங்கள், பள்ளிக்கூடம், அதன் சம்பிரதாயம், சுத்தம் உண்மை, ஒழுக்கம், அழகு, நேர்மை முதலியவற்றில் பற்று ஏற்பட்டால், பிற்கால வாழ்க்கையில் சிறந்த மனிதனைத் துலங்கவும், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவும், வாழ்க்கையில் வெற்றி யேற்படவும் கூடிய வாய்ப்புக்கள் கிட்டும்;

உயர் லட்சியம் உயிர் நிலையம்

சில பாடங்களைக் கற்பிக்கும் போது, பாடங்களுக்குப் புறம்பான விஷயங்களைக் கொண்டு தகுந்த பற்றுக்களை வளர்க்க வேண்டும். தேசங்களின் பரிமாணமும், விஸ்தீரணமும் பூகோளப் பாடங்களாலேயே பாலர்களால் அறிய முடிகிறது. செல்வத்தைப் பெருக்கும், விளை பொருள்களையும், அவைகளின் அளவையும், பூகோளப் பாடங்களின் மூலமாயும், வரை கோட்டுப் படங்கள் மூலமாயும் காண்பிக்க வேண்டும். முக்கிய இடங்களையும், விடுமுறை நாட்களைக் கழிக்கும் இடங்களையும், தொழிற்சாலைகளும் இயற்கைவனப்புமுள்ள இடங்களையும் பல பாடங்களில் மாணவர் மனக் கண் முன் கொண்டு வரலாம். தேசநாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், ஆகியவற்றை சரித்திர பாடங்களிலும், இலக்கிய பாடங்களிலும் மாணவர் மனதில் பதியுமாறு கற்பிக்க வேண்டும். தேச சரித்திரத்தில் உயர்ந்த லட்சியங்கள் மலர்ந்திருக்கும் முறையை விளக்க வேண்டும். நாட்டின் கீர்த்தியைப் பெருக்கிய அறிவாளிகள் சாஸ்திர வல்லுநர்கள், சமுகத் தொண்டர்கள், சமுக சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள் வீரர்கள், தியாகிகள் ஆகியவர்களைப்பற்றிச் சந்தர்ப்பம் நேர்ந்தபோது மாணர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

சிருஷ்டி கர்த்தாக்கள்

"நாளைய தலைவர்கள் இன்றைய மாணவர்களிடையே இருந்து உருவாக வேண்டியவர்கள்; தற்பொழுது மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி சீர்குலையுமானால் நாளைய தலைமையின் தன்மை எத்தகையதாக இருக்கும்" என்று பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு டத்தில் கூறியுள்ள வாசகத்தை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து பார்த்துச் செயலாற்ற வேண்டும். மக்கள் வாழ்வையும், நாட்டின் வாழ்வையும் வளமாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களிடமே இருக்கிறது. நாட்டின் தலைவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், விஞ்ஞானவிற்பன்னர்கள், ஒவியர்கள், பேச்சாளர்கள், சகல கலா வல்லுனர்கள் போன்றோரைச் சிருஷ்டிக்கும் பொறுப்பும் ஆசிரியருடையதே! இதற்கேற்ற கல்வியையே மாணவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து ஊட்ட வேண்டும்.

பயன்படுபவர்களே மதிப்புக்குரியவர்கள்; பிறர் உழைப்பின் பேரில் வாழ்பவர்கள் சமுகத்தின் பகைவர்கள், "பயனுள்ள செயலே தொழுகை" "அறிவுள்ள செயலே உயர்ந்த வணக்கம்" என்பதை மாணவர்கள் அறியச் செய்ய வேண்டும்.

எண்ணுவதற்கும், ஆராய்வதற்கும், பகுத்தறிவு காட்சி, அனுபவம் ஆகியவைகளின் ஒளியை நப்புவதற்கும் குழந்தைகளுக்குப் பயிற்சி தேவை. கருவிகளைக் கையால் பயன்படுத்துதல், பொருட்களை அமைப்பதில் கருத்தைச் செலுத்துதல் ஆகிய துறைகளிலும் பயிற்சி அளிக்கவேண்டும். பயனற்றவைகளை அறிந்து கொள்வதில் சிறுவர்களின் வாழ்வை வீணுக்கக் கூடாது. வேண்டாத செயல்களையும். நிகழாத சம்பவங்களையும், அறிவுக்கும். ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத வரலாறுகளையும் படிப்பதில் ஆண்டுகள் பல வீணாக்கக் கூடாது. போர் நடந்த காலங்களையும், மன்னர்கள் பிறந்து மடிந்த நாட்களையும், வாழ்க்கைக்குப் பிரயோசனப் படாத சம்பவங்களையும் குழந்தைகளின் உள்ளத்தில் நிரப்புவதால் பிரயோசனம் ஒன்றும் ஏற்படாது. வரலாற்றின் தத்துவங்கள், கொள்கைகள், நாடுகள், ஆகியவைகளின் வளர்ச்சி எல்லாவற்றிற்கும் மேலாக விஞ்ஞான வளர்ச்சி ஆகியகைகள் கற்பிக்கப்பட வேண்டும்.

நேர்மையும் தூய்மையும்

பொருள் பற்றிய நேர்மையோடு, உள்ளத் தூய்மையின் இன்றியமையாமையைக் குழந்தைகள் அறிய வேண்டும். குழந்தைகள் வாய்மையின் தாயகமாய், உயரிய எண்ணங்களின் ஊற்றாய் நேர்மையின் பிறப்பிடமாய் அன்பின் உறைவிடமாய்த் திகழ வேண்டும். 'சத்தியத்தைப் பேசுவது, சத்தியத்தை எண்ணுவது, சத்தியத்தைச் செய்வது, இவையே சரியான பாதையின் முதல் படிகள்" என்று மகாத்மா காந்தி கூறியுள்ளதை சிறுவர்களின் மனதில் பதியச் செய்ய வேண்டும். அதற்கேற்ற விதமாகக் கல்வியைக் கொடுக்க வேண்டும்.

ஆசிரியன் தான் கற்றுத் தெளியாததை மாணவர்களுக்குக் கற்பிப்பது கூடாது; அன்றியும் தான் படிப்பிக்கும் பாட விஷயத்தை மட்டும் அறிந்திருத்தலும் போதாது. பயிற்றப்படும் மாணவனின் உளத்தன்மையையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

வெறும் நம்பிக்கைகளையும், செயல்களையும், காட்சியால் தெரிந்த உண்மைகளுக்கு இணையாகக் கருதக் கூடாது. எதையும் ஆராய்ந்து தெளிவதற்குக் குழந்தைகள் கற்க வேண்டும். மாணவர்களே ஆசிரியனிடம் கேள்விகள் கேட்க வேண்டும்; அதனால் விடுப்பூக்கம் தொழிற்படும். ஆராய்ச்சி பெருகும். மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் ஆசிரியர் காய்தல் வெறுத்தலின்றி ஆனந்தத்துடன் பதிலளிக்க வேண்டும்.

உணரவைப்பதே உண்மைக் கல்வி

சட்டங்களால் மக்களை நல்லவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் ஆக்குவது கடினம். தூண்டுதலிலிருந்து அவர்களை அப்பாற்படுத்துவதன் மூலமும் அவர்களை ஊக்கமுள்ளவர்களாக ஆக்க முடியாது. இவற்றில் வெற்றியை வேண்டுமானால் சீர்தூக்கிப் பார்த்து சரி தவறு என்பதை அறியக் கூடிய கல்வியை ஊட்ட வேண்டும். அன்றியும் தனக்குத்தானே அறிந்துகொள்வது தான் தன் கடமை என்பதைக் குழந்தைகள் உணரச் செய்யவேண்டும்.

உண்மையான நம்பிக்கையே எதிர்காலத்தின் நம்பிக்கை. அறிவு வளர்ச்சியும் உளப்பண்பும் வறுமையை வாட்டவல்லன. குற்றத்தைக் கடிய வல்லன. பள்ளிக்கூடமே கோயில் அறிவே ஆண்டவன்! நல்ல கல்வி நேர்மையின் தோழன்! பண்பின் நண்பன். என்பதை மாணவர்கள் உணரும்படி செய்ய வேண்டியது ஆசிரியன் கடன்.

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பண்புதருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறவே படிக்கிறார்கள். ஆசிரியன் இவற்றை யெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். தயவு தாட்சண்யமாகப் பிள்ளைகளுடன் பழக வேண்டும். பயம் படிப்பைத் தடுக்கிறது. அடித்து வெருட்டுவதால் பிள்ளைகளின் புலன் பாடத்தில் செல்லாது. இதனை ஆசிரியன் அவதானித்துப் பணி புரிய வேண்டும். 'முதற் கோணல் முற்றும் கோணல்' என்பது பழமொழி இதனை உணர்ந்து மாணவரைத் தவறான பாதை வழி நடக்க விடக் கூடாது. தவறான ஒன்று மாணவர் மனதில் பதிந்து விட்டால் அதனை மாற்றுவது கடினம்.

(15ம் பக்கம் பார்க்க)

சிறு கதை:

கடன்காரன்

(ஏ. ஸீ. எம். கபீர்)

விடியற்காலம், விடிவெள்ளியும் உதயமாகிவிட்டது. இருளின் அமைதியைக் கலைக்க எங்கெல்லாமோ இருந்து கோழிச் சேவல்கள் மாறிமாறிக் கூவத் தொடங்கின.

வானத்தில் இருந்த பிறை மதி மேலே எழும்பி இருளிலே தன் பால் நிலவைப் பொழிய முயற்சித்துத் தன் முயற்சியில் தோல்வியடைந்து கொண்டிருந்தது. அந்த வெளுக்கும் இருளிலும்—நிலவின் ஒளியிலும் திட்டின்மேல் இருந்த அந்தக் குடிசை மங்கலாகத் தெரிந்து கொண்டிருந்தது. அதன் பக்கத்திலே இருந்த மாமரத்தின் கிளைகள் மெல்லிய காற்றின் அசைப்பால் இலேசாக ஆடி அசைந்துகொண்டிருந்தன. நிலவின் ஒளியை தடுத்து நிறுத்த முடியாமல் சிறு சிறு ஒளிவட்டங்கள் குடிசைக்குள்ளும் விழுந்து பரவியிருந்தது. உக்கி இறந்துபோன மட்டைகளாலான அந்தக் குடிசை பார்ப்பதற்கு அசுசையையும், அலங்கோலமானதுமாய் இருந்தது; ஆனால் அந்த ஏழைக்கு அது தான் சுகபோகங்களை அளிக்கும் மாளிகை.

குடிசைக்குள் உறங்கிக் கொண்டிருந்த மூன்று ஜீவன்களுள் அவன் அப்பொழுதுதான் கண்விழித்தான். நெஞ்சில் உள்ள பாரம் இறங்கிவிடும் என்றுதான் இரா முழுக்கத் தூங்கினான். ஆனால் அவன் கண் விழித்ததுமே அவன் எண்ணப் புண் நெஞ்சை அழுத்தத் தொடங்கிவிட்டது. அவன் வேதனையால் படாத பாடுபட்டான்.

படுத்திருந்த பிரிந்த பாயை சுருட்டி ஒரு மூலையில் வைத்து விட்டு குடி[illegible] எழுந்து வந்தான். உடம்மை உலுப்பி கையை உயர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டான்; அப்பொழுதும் அவனுக்குத் தெளிவு உண்டாகவில்லை. குடிசைக்குப் பக்கத்தில் சற்றுத் தொலைவில் இருந்த சிற்றூரை உற்று நோக்கினான். வற்றின் காரணமாய் ஆற்று நீர் கடலை நோக்கிச் சலசலவென ஓடிக் கொண்டிருந்தது. திடீரென்று அடித்த ஒரு குளிர்காற்று ஜில்லென்று அவன் உடலைத்தொட்டுத் தெளிவை உண்டாக்கியது. சரி .....நேரமாகிவிட்டது. இனிமேல் போவோம் என்று அவன் வாய் அவனை அறியாமலே சொல்லிக் கொண்டது.

தொழிலுக்குரிய அதாவது மீன்பிடித் தொழிலுக்குரிய சாமான்கள் சகிதம் அவன் ஆற்றங்கரையில் இழுத்து வைத்திருக்கும் தோணிக்குச் சென்று சாமான்களை வைத்தான். தோணியை ஆற்றில் தள்ளிவிட்டபடியே காலைத் தூக்கிவைக்க முயன்றான். தன்னையறியாத பயத்தால் அவன் கால்கள் நடுங்கத் தொடங்கி விட்டன. அவ்வளவு காலமும் உரிமையோடு தொழில்செய்து வந்த தோணியை இன்று இன்னொருவன் "உரிமையோடு பறிக்க வரும்போது அவன் நடுங்காமல் இருக்க முடியுமா?

ஆற்றின் சல சலப்போடு அவன் தோணி கடலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. சோகமே உருவாய் விடித்துத் தோணியை—துடுப்பால் வலித்து ஓட்டிக்கொண்டிருந்தான். அவன் மனதிலே குமுறி வெடித்துக் கொண்டிருந்த [illegible] மீண்டும் அதையே அவன் நினைத்து வெதும்பிக் கொண்டிருந்தான்.....

ஹஜ்ஜுப் பெருநாளுக்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் இருந்தன; தன் ஒரே மைந்தனுக்கும் அருமை மனைவிக்கும் திருநாளிலாவது ஒரு புதுப் புடவை வாங்கிக் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தான்.

என்ன செய்வான் ஏழை! இந்தக் கனவு நனவாக அவன் கையில் பணமில்லை. தினம் உழைத்துவரும் இரண்டொரு ரூபாய்கள் அன்றைக்கென்றே கரைந்துவிடும். மச்சம் பிடிப்பவனுக்கு மிச்சம் இல்லை என்பதுபோல்தான் அவன் வாழ்க்கையுமிருந்தது; இம்முறை அவன் தொழிலில் போதிய ஊதியம் கிடைக்கவில்லை. அன்றுகூட உழைத்து வந்த ஒரு ரூபாயை வைத்துக்கொண்டு உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் அவர்கள் மூவருமே பட்டினி கிடந்தனர். அதுவும் அரிசிமுதல் பீடிவரை விலையேறிப்போயிருக்கும் இந்த நாளில் அவனால் எப்படி மிச்சம் பிடிக்க முடியும்? இந்தப் புதிரை அவனால் புரிய முடியாமலே போய்விட்டது.

என்னதான் இருந்தாலும் திருநாளிலாவது நாலு குழந்தைகளோடு சேர்ந்து விளையாடும் தன் குழந்தைக்காவது புதுஉடை தைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தால் கேட்காத ஆட்களிடமெல்லாம் அவன் பத்து ரூபாய் கடன் கேட்டுவிட்டான். எல்லோரும் பஞ்சப்பாட்டு பாடிவிட்டார்

(11—ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சிந்தியாவில் பீறிடும் விடுதலைப் போர்

இடைக்கால ஆட்சி அமைத்து புரட்சி சக்திகளின் ஜெயபேரிகை

கைக்குழந்தைகளுடன் தாய்மார்களும்-குண்டாந் தடிகளோடு பொலீஸாரும் போராட்டத்தில் குதிக்கும் காட்சி

பிரெஞ்சிந்திய தீட்டுக்களான பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனம், போர்த்துக்கேய திட்டான கோவா போன்றவை தாயகத்துடன் இணைய வேண்டும் என்ற போராட்டம் எரிமலைபோல் வெடித்துவிட்டது. பாண்டிச்சேரியின் தீக்கெட்டும் அதன் தீ மூண்டுவிட்டது. சகல கட்சிகளும், ஸ்தாபனங்களும், வர்க்கங்களும், மக்கள் பகுதிகளும் இந்த விடுதலை வெற்றிப் போரில் அணிவகுத்து விட்டார்கள். "கன்ஸவேர்டிவ்" குபேர் கட்சி முதல் கம்யூனிஸ்ட் கட்சிவரை சகலரும் ஒரே முனையில் போர்க்கொடி உயர்த்தி விட்டார்கள். பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்திய மண்ணிலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் வெட்டிச் சாய்க்கப் படுகிறது.

மக்கள் விடுதலைச்சேனை புதுச்சேரியின் பல பாகங்களை விடுவித்துவிட்டது. இடைக்கால ஆட்சி அமைத்து விட்டார்கள் மக்கள். ஏகாதிபத்திய மெகாதக அடக்குமுறை குடைசாய்கிறது.

பாரதம் விடுதலை பெறவேண்டும் என்று இயக்கம் வெடித்த நாள் தொட்டு பிரெஞ்சு இந்தியாவிலும் விடுதலைக் கிளர்ச்சி பொங்கியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியான பிரெஞ்சு ஆதிக்கம் இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று பல்நெடும் காலமாக புதுவை மக்கள் பொங்கி எழுந்திருக்கிறார்கள். ஆனால் இது 1947 ஆகஸ்டில் இந்திய விடுதலை பெற்றதினத்திலிருந்து புதிய ரூபம் எடுத்தது. தொழிலாளி வர்க்கத் தலைமையில் ஆங்காங்கு போராட்டங்கள் இளம்பின. பயங்கர அடக்குமுறைகட்டவிழ்த்து விடப்பட்டது. நூற்றுக்கணக்கான வீடுகள் கொழுத்தப்பட்டன. கிராமங்கள் வேட்டையாடப்பட்டன. தலைவர்களும் ஊழியர்களும் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். என்றாலும் மக்கள்கிளர்ச்சி வலுத்தது. இந்திய சர்க்காருடன் பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வருவதாக பிரெஞ்சு ஆட்சி அறிக்கைவிட்டது. இதன் மூலம் தேசிய சக்திகளை ஏகாதிபத்தியம் பிளவுபடுத்தியது. தாயகத்துடன் இணையும் கோரிக்கையை கடத்துவதற்கான சதி செய்தது.

ஏகாதிபத்தியத்தின் சதியை மக்கள் உணரத் தொடங்கினர். மீண்டும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். பிரெஞ்சு இந்தியாவிலுள்ள சட்டசபையும், கம்யூன்களும் நகர ஸ்தாபனங்களும் இணைப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றின. பிரெஞ்சு ஆட்சிக்கு பந்தம் பிடித்த குபேர் கட்சியும் இணைப்புக் கோஷத்தை முன் வைத்தது. மீண்டும் பிரெஞ்சு தேசாதிபதி உறுதியளித்தார். மீண்டும் துரோகம் செய்யப்பட்டது.

புரட்சி வெடித்தது

ஏமாற்றப்பட்ட மக்கள் எறுபோல் எழுந்தனர். குபேர் கட்சியும், சட்டசபை தலைவர்களும், கம்யூனிஸ்ட்—காங்கிரஸ் கட்சிகளும், வாலிபர் முன்னணிகள், தொழிற்சங்க விவசாய சங்கங்கள் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் அனைத்தும் கிளர்ச்சியில் ஈடுபடுவதென்று தீர்மானித்தன. அதற்கிணங்க சென்ற சில வாரங்களாக பெருங்கிளர்ச்சி புதுவை பூராவும் வெடித்துள்ளது ஆயிரமாயிரம் தொண்டர்கள் விடுதலைக் கொடி ஏந்தி சத்தியாக்கிரகத்திலும், போராட்டத்திலும் குதித்துள்ளார்கள். பொலீஸ் படையும் விடுதலை வீரர் பக்கம் ஆங்காங்கு சேர்ந்துள்ளது. கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள் கொடி ஏந்திக் களம்பாயும் காட்சி மக்கள் பெருவெள்ளத்திற்கு பெரு எழுச்சி ஊட்டுகிறது. இதோடு பல நூறு தொண்டர்கள் கைது! சிறைக்குள்ளே அடி! சித்திரவதை! பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் இறுதிக்கால வெறியாட்டம் உச்சத்தை எட்டியுள்ளது.

என்றாலும் "பிரெஞ்சு ஏகாதிபத்தியமே வெளியேறுக" "தாயகத்துடன் இணைவதை தடை செய்ய நீயார்" என்று ஏகாதிபத்தியக் குண்டர்களுடன் நேரடியான போராட்டம் புதுவையின் கிராமங்கள் தோறும், வீதிகள் தோறும் நடக்கிறது.

போராட்டத்தில் பொலீஸார்

புதுச்சேரி வட்டாரத்திலுள்ள கள்ளப்பியோ என்ற ஊரில் பொதுமக்கள் இந்திய தேசியக் கொடியைப் பறக்கவிட்டார்கள். அங்கு நடந்த கூட்டத்தைக் கலைப்பதற்காக பிரெஞ்சு பொலீஸ் படையொன்று அங்கு சென்றது.

இந்தியாவுடன் சேருவதென்று முடிவு செய்துவிட்டதால் பிரெஞ்சுப் பொலீசாருக்கு தம்மீது அதிகாரமில்லையெனக் கூட்டத்தினர் தெரிவித்தார்கள்.

பொலீஸ்காரர்களும் தம்முடன் சேர வேண்டுமென பொது மக்கள் கேட்டுக் கொண்டார்கள். இதன் மேல் பொலீஸ் கோஷ்டியின் தலைவரும், பொலீஸ்காரர்களும் பொதுமக்களோடு சேர்ந்து ஜெய்ஹிந்த்! என கோஷமிட்டார்கள்.

காரைக்கால் பகுதியில் அநேகமாக எல்லா வீடுகளிலும் இந்திய யூனியன் கொடிகள் கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தன.

இடைக்கால ஆட்சி

புதுச்சேரிக்கு மேற்கே 15 மைல் தொலைவிலுள்ள திருபுவனம் பகுதியில் 46 கிராமங்கள் இம்மாதம் 6-ந் தேதியன்று பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பிரகடனம் செய்தன. அந்த கிராமங்களை ஆட்சி புரிய இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.

அந்த கிராம வாசிகள் எந்தத் தலைவரின் உதவியும் இல்லாமல் தாங்களாகவே விடுதலை பிரகடனம் செய்தார்கள். இதர பிரெஞ்சு இந்தியப் பகுதிகளையும் மீட்பது இந்த இடைக்கால அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக அறிவிக்கப்பட்டது.

இடைக்கால அரசாங்கத்தின் நோக்கம்பற்றி அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியதாவது:—

மீட்கப்பட்ட கிராமங்கள் அரசாட்சியை நடத்துவதுடன் விடுதலை ஆகாமல் இருக்கும் இதர பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் விடுதலைப் போராட்டத்தை நடத்துவதும் எங்கள் நோக்கமாகும். புதுச்சேரி விடுதலை போராட்டத்துக்காக தொண்டர் படையைத் திரட்ட இடைக்கால அரசாங்கத்துக்கு பூரண அதிகாரம் இருக்கிறது.

விடுதலை பெற்ற பகுதியின் பரப்பு 20 சதுர மைல். 100 பொலீஸ்காரர்களைக் கொண்ட பொலீஸ் படை ஒன்று அமைக்கப்பட்டது. சீக்கிரமே அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும். எதிர்கால அரசாங்க அமைப்பு பற்றி அந்த அரசியல் நிர்ணயசபை தீர்மானம் செய்யும்.

இந்த அ. நி. சபைக்கான பிரதிநிதிகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கும்.

கிராமப் பஞ்சாயத்துகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும்.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மேற்படி இடைக்கால அரசாங்க பிரதிநிதி பேசுகையில் அந்த கிராமங்களை இந்திய யூனியனிலிருந்து பிரிக்கும் வேலியை அகற்றும்படி கோரப்படும் என்றார். இந்தியாவுடன் தங்கு தடையற்ற வர்த்தகமும், மக்கள் போக்குவரத்தும் நடைபெற வேண்டுமென்றார்.

நெட்டப்பாக்கம் பகுதியில் பிரெஞ்சிந்திய மந்திரி குபேரும் இதரரும் மக்கள் போராட்டத்தை நடத்தியதைப் பார்த்த இந்த கிராமவாசிகளுக்கு உற்சாகம் பிறந்தது.

திருபுவனம் பகுதியில் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று மக்களை விடுதலை போராட்டத்தில் சேரும்படி அழைத்தார்கள்.

ஒரு தினத்தில் 22 கிராமங்கள் விடுதலை

பிரெஞ்சிந்திய சுதந்திர போராட்டத்தில் இதுவரை ஏற்பட்டிராத அற்புத நிகழ்ச்சி நடந்தது. மண்ணடிப்பேட்டை என்ற பிரெஞ்சிந்திய பகுதியில் உள்ள 22 கிராமங்களும் எந்த தலைவர் அல்லது எந்தக் கட்சியின் உதவியையும் எதிர் பாராமல் கூட்டாக சுதந்திர பிரகடனம் செய்தன.

மேற்படி 22 கிராமங்களிலும் சுதந்திர விழா கொண்டாடப்பட்டது. எங்கு பார்த்தாலும் இந்திய கொடிகள் பறந்தவண்ணம் இருந்தன. எல்லா கிராமங்களிலும் ஊர்வலங்கள் நடைபெற்றன.

மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டு ஊர்வலம்சென்ற போது ஏராளமான பொலீஸார் ஒட்டம் பிடித்தனர். மீதி பொலீஸ்காரர்கள் தைரியமுடன் முன்வந்து ஊர்வலத்தில் சேர்ந்துகொண்டு சுதந்திர கோஷங்களைப் போட்டனர்.

கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள்

பிரெஞ்சு அரசாங்கத்தின் தடை உத்தரவையும் மீறி பெண்கள் தங்கள் குழந்தைகளைக் கையில் ஏந்தி, இந்திய தேசீயக் கொடியைப் பிடித்துக்கொண்டு ஊர்வலமாக வந்தனர். இவர்கள் அனைவரையும் பொலீஸார் கைதுசெய்தனர்.

புதுச்சேரியிலும் பிரெஞ்சு அரசாங்கத்தின தடையை மீறும் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகியது.

ஆறு பெண்கள் தங்கள் குழந்தைகளை ஏந்திக்கொண்டு ஊர்வலத்தின்முன் சென்றனர். இவர்களைத் தொடர்ந்து 30 தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்றனர். இந்தியாவுடன் இணைப்பை ஆதரித்தும் பிரெஞ்சு அரசாங்கத்தை எதிர்த்தும் இவர்கள் கோஷமிட்டுச் சென்றனர். ஊர்வலம் செல்லச் செல்ல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் சென்றுகொண்டிருந்த சமயம் திடீரென பொலீஸார் வந்து அனைவரையும் கைதுசெய்து பொலீஸ் லாரியில் அழைத்துச் சென்றனர்.

"சலே புதுச்சேரி"

"புதுச்சேரி புறப்படுங்கள்" என்ற புதிய போர்க்கோஷத்தோடு புதுவையின் சகல பகுதிகளிலுமிருந்து மக்கள் படைகள் கிளம்ப ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றன. இறுதி வெற்றி கிட்டும்வரை போராட்டத்தை நடத்துவதென்று சர்வ கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

புதுவை மக்களின போராட்டத்தை ஆதரித்து பாரதத் தாயகத்தில் பெரும் ஆதரவு இயக்கம் வளர்ந்து வருகிறது. பாரதப் பிரதமர் நேரு தொட்டு பொதுமக்கள்வரை சகலரும் கூட்டங்கள் கூட்டி பிரமாண்டமான இயக்கம் நடத்துகின்றனர்.

புதுவை மக்கள் புரட்சி வெற்றி கொட்டும். ஏகாதிபத்தியம் கருவறுக்கப்பட்டு வீழ்த்தப்படும் என்பது நிச்சயமாகிவிட்டது.

கடன்காரன்

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

கள். பாவம்; நண்பர்களும், சுற்றத்தார்களும்கூட இல்லை யென்ற பல்லவியையே பாடி விட்டனர். கடைசியாக கரீம் தான் நம்பிவாழும் முதலாளியிடமும் சென்றான். அவர்தான் அவன் உழைக்கக்கொண்டுபோகும் தோணிக்குச் சொந்தக்காரர். அவரிடம் சொற்ப தொகையைக் கொடுத்து அந்தத் தோணியைக் குத்தகைக்கு வாங்கியிருந்தான்: அவன் ஏழ்மை நிலை அதை உரிமையாக வாங்கிக் கொள்ளக்கூட வழியில்லாமல் ஆக்கிவிட்டது.

முதலாளி வீட்டின் முன் விராந்தாவில் கணக்குப் புத்தகங்களையெல்லாம் புரட்டிக் கொண்டிருந்தார், அவர் ஏதோ வாய்க்குள் சொல்லி பொருமிக் கொண்டிருந்தார்:

மரியாதையான முறையில் தன் நிலைமையை விளக்கிப் பத்து ரூபாய் கடன் கேட்டான் அவன். அவ்வளவு காலமும் அவன் மட்டில் அகிம்சா மூர்த்தியாக நடந்து கொண்டவர்: இன்று முதலாளி வர்க்கத்தின் சுபாவத்தையே அவனிடம் காட்டத் தொடங்கிவிட்டார்

"பணம், பணம், பணமென்றால் இங்கென்ன காய்த்தா சொரிகிறது!" "இல்லை அப்படி ஒன்றும் சொல்லப்படாது, பிள்ளைக்குப் பெருநாளுக்கு உடுப்பு வாங்கவேண்டும் சாமி" "இப்பொழுது என் கையில் ஒரு சதமும் இல்லை" என்றார் முதலாளி. "ஆண்டவன் உதவி செய்தால் கூடிய கெதியில் உங்கள் கடனெல்லாம் திருப்பித் தந்துவிடுவேன்" என்று கெஞ்சினான் கரீம்.

"ஆண்டவனுவது உதவி செய்வதாவது. ம்.....பிள்ளைக்கு உடுப்பு வாங்கப் பணம்: பெண்டாட்டிக்குச் சீலை வாங்கப்பணம்! இத்தனைக்கும் நான் பணம்தரவேண்டும் என்ன? அப்படித்தானே. கடன் கணக்கில் இப்பொழுதே நானூறு ரூபாய்க்கு மேல் இருக்கிறது. மேலும் மேலும் பணமென்றால் எங்கே போவது பணத்துக்கு ....." அவன் கெஞ்சினான். மன்றாடினான். முதலாளி ஒன்றுக்கும் விட்டுக்கொடுக்காமல் கோபத்தின் உச்சத்துக்கு ஏறி நாலைக்கே கடன் முழுவதையும் கொடுக்காவிட்டால் தோணியைப் பறிமுதல் செய்வேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

வாடிய முகத்துடன் வீடு திரும்பிய அவன் தனக்கு ஏற்பட்ட அவமானத்தால் மனைவி சமைத்து வைத்திருந்த மர வெள்ளிக்கிழங்கைக்கூட உண்ணமல் தூங்கிவிட்டான்: சுற்றத்தார்களாலும், நண்பர்களாலும், ஏன் அவன் விரும்பி வாழ்ந்த முதலாளியாலும் கைவிடப்பட்ட அவன் குமுறி அடிக்கும் ஆழிக்கடலை நம்பிப் போய்க்கொண்டிருந்தான் .....

★

பகல் மணி சுமார் இரண்டுக்கு மேல் ஆகிவிட்டது: சக மீன்பிடிகாரர்கள் ஒருவரும் அன்று வரவில்லை: அவனுக்கு அன்று நல்ல வேட்டைதான். மீன்பிடித்துப் பிடித்து அவன் கைகளெல்லாம் கடுத்துவிட்டன. உடலிலும் சோர்வு கண்டுவிட்டது. அவன் அவ்வளவு நேரமும் ஒருபோதும் கடலில் மீன்பிடித்தது கிடையாது. தண்ணீர் தாகமெடுத்தது. நாவறண்டு விட்டது. அவன் அப்பொழுதுதான் உணர்ந்தான்: தான் நேற்று முதல் இன்றுவரை உணவு உண்ணமல் இருப்பதை.

கூடுதலாய் மீன்பிடித்த சந்தோஷமும், மனைவிக்கும் மகனுக்கும் புது உடை வாங்கலாம் என்ற மகிழ்ச்சியும்அவனை என்றுமில்லாத ஆனந்தத்துக்குள்ளாக்கி ஒருவித உற்சாகத்தை ஊட்டியது.

நாற்பது பாகம் ஆழத்தில் தோணியை நிறுத்தப் போட்டிருந்த நங்கூரத்தின் கயிற்றைப் பிடித்து அவன் இழுக்கத்தொடங்கினான். ஏனோ அவன் கண்கள் சுழன்றன. வயிறு நெருப்பாய் எரிந்தது: கால்கள் தடுமாறின, கைகள் நடுங்கின. அவ்வளவும் ஏன்? அவன் உடம்பை என்னன்னமோ செய்தது, மறுகணம் ஐயோ அவன்.....

மறுநாள் காலை பெருநாள். முதலாளி அகமதுப் பிள்ளை குளிப்பதற்கு ஆற்றங்கரைக்கு வந்தார். யாரோ ஒருவன் அவரிடம் சொன்னான் "நேற்று மீன்பிடிக்கப்போன கரீம் இன்னும் வீட்டுக்கு வரவில்லையாம்" என்று அவ்வளவுதான்.....

வங்காளக் கடலின் எங்கோ ஒரு மூலையில் கற்பாறையின் மேல் அலையால் அலசி அடிக்கப்படும் கரீமின் பிணத்தைபோல முதலாளி பக்கத்தில் இருந்த சீலை தோய்க்கும் கல்லில் மயங்கி விழுந்து கிடந்தார்! கரீம் கொண்டுபோன வள்ளமும் ஒருநாளும் ஊருக்கு திரும்ப வில்லை.

கெற்பக் கோள் நிவாரணி

ஸ்ரீமான் சென்ற் மேரி டாக்டர் ஐயா அவர்களுக்கு எனது நமஸ்காரம். எனது மனைவி 1946ம் ஆண்டில் ஒரு ஆண் குழந்தையும், 1951ம் ஆண்டில் ஒரு பெண் குழந்தையும் பெற்றெடுத்தாள். கடவுள் கிருபையால் இக் குழந்தைகள் இரண்டும் நற்சுக ஷேமமாக ஜீவனம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

1951 முதல் 1953ம் ஆண்டு ஏப்ரல் 4ந் தேதி வரை எனது மனைவிக்கு கெற்பம் கூடி 3 மாதம், 7 மாதம் வரை கெற்பம் நின்று சிதைந்து, சூதக உபத்திரவத்தோடு ஜீவனம் செய்து குணமடையவில்லை இதன்பின் 1953 ஏப்ரல் 4ந்தேதி தங்கள் சென்ற் மேரி வைத்தியசாலையிலிருந்து **கெற்பக் கோள் நிவாரணி** என்ற மருந்தை வாங்கி எனது மனைவிக்குக் கொடுத்தேன். இரண்டே மாதத்தில் கெற்ப ரோகங்கள் நீங்கி, 1954 மார்ச் 16ந் தேதி பின்னிரவு மணி 4—நி 3க்கு ஓர் ஆண் குழந்தை ஈன்றெடுத்தாள். தேவர்கள் கிருபையாலும், தங்களது மருந்தாலும் தாயும் குழந்தையும் நற்சுக ஷேமமாக இருக்கின்றார்கள். தங்களது அன்பும், எங்கள் அன்பும் நீடுழி காலமும் இருக்க வேண்டுமென கடவுளை மன்றாடுகிறதுடன், என் மனமார்ந்த நன்றியையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன், வணக்கம்.

அன்புள்ள,

பி. ஏ. சுப்பையா,

தலைவர் தோட்டக் கமிட்டி

வைகும்பர, பசர—சிலோன்

எங்கள் மருந்துகளைப் பாவித்துப் பயனடைந்தவர்கள் எழுதிய எத்தனையோ கடிதங்களில் ஒரு கடிதமும் ஒன்று.

புட்டி ஒன்று விலை ரூபா 7-00

சென்ற் மேரி வைத்தியசாலை,

201, செட்டியார் தெரு, கொழும்பு—11:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் அடிச்சுவட்டில் வந்த...

(5—ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களில் நாம் பெரிதும் காண லாம் அவ்வளவு பெருமைக்கு இலக்கான பெண் பாரத நாட்டிலே பேசாத சிற்பமாக, ஆடாத சிலையாக காட்சியளித்தாள். அன்னம் அவித்துப் படைக்கப் பிறந்தவள். அவளுக்கிருந்த உரிமைகள் அனேகத்தையும் ஆணுக்கென தனிச் சட்டம் இயற்றினோர் பறிமுதல் செய்தனர். அன்று தமிழகத்தின் கொற்றம் மறைந்தது. குடை நிழல் மறைந்தது. அடிமைத்தனம் தலைதூக்கியது. போர்முகத்தில் தன் கணவன் இறந்தான் எனும் கொடிய செய்தி கேட்டதும் நிலை கலங்கிவிடாது செருமுகத்துக்கு தன் செல்வக் குமாரனை அனுப்பி வைத்த தமிழச்சி, அந்த மகன் படைமுகத்தில் வேலை மார்பிலே ஏந்தி மாண்டான் என்ற செய்தி யறிந்து அவனுக்கு பாலூட்டிய மார்பகத்தை அறுத்து வீசிய தமிழச்சி—ஆளும் மன்னன் நீதி தவறினான் எனபதை நிரூபித்து நீதியை நிலைநாட்டிய கண்ணகி வழித் தோன்றல்களின் வாய்களுக்கு பூட்டு, கைகளுக்கு விலங்கு. இந்நிலையை

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்"

எனக் குமுறி எழுந்து,

ஏட்டையும் பெண்கள்
தொடுவது நீமை யென்
றெண்ணி யிருந்தவர்
மாண்டு விட்டார்
விட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டிவைப்போ மென்ற
வித்தைமனிதர் தலைகவிழ்ந்தார்

***

பட்டங்க ளாள்வதுஞ்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த
வந்தோம்
எட்டு மறிவினி லானுக்கெங்கே
பெண்
இளைப்பில்லை காணென்று
கும்மியடி

என்கிறார் பாரதி.

பெண்ணுக்கு பேச்சுரிமை வேண்டாம் என்று சொல்லும் நாட்டில் மண்ணடிமை ஒருநாளும் நீரப்போவதில்லை. அவர்களுடைய உரிமையை மறுப்பதில் நமக்கு பெருமை இருக்கிறதா? புகழை சம்பாதித்துக் கொடுக்கக் கூடிய தகைமை சான்ற மனிவியை அடையாதவனுக்கு எதிரிகள் முன்னிலையில் சிங்கத்தைப் போன்ற நடையிருக்காது என்று,

"புகழ் புரிந்தில்லிலோர் இல்லை
இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை"

குறளிலே வள்ளுவர் கூறியிருக்கிறார். இந்தக் கருத்தை எவ்வளவு அழகாக, ஆவேசமாக பாரதிதாசன் வெளிப்படுத்துகிறார் பாருங்கள்,

பெண்ணுக்கு பேச்சுரிமை
வேண்டாம் என்கின்றீரோ
மண்ணுக்கும் கேடாய்
மடிந்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை நீங்கிடும்
பேசுந் திருநாட்டு
மண்ணடிமை நீர்ந்து வருதல்
முயற் கொம்பே.....

***

கோதையர் காதல் மணம்
கொள்வது சீரோ
குழந்தைக்கு மணஞ் செய்து
கொள்வது சீரோ

***

மாதர் தம் உரிமை மறுப்பது
மாண்பா?
மாதர் முன் னேற்றத்தால்
மகிழ்வது மாண்பா?

***

ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே

என்று பாரதியார் சொல்கிறார் பாரதிதாசன்,

கண்களும் ஒளியும் போலக்
கனிமலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடுதன்னில்
நண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தார் ஆனர் என்ற
பண் வந்த காதிற் பாயப்
பருகு நான் எந்த நாளோ

அதுமட்டுமல்ல... ... ...
இந்த வையம் அறிவில் உயர்ந்து
தழைக்க ஆணும் பெண்ணும்
நிகரென விளங்க வேண்டுமென்கிறார்.

ஆணும் பெண்ணும்
நிகரென கொள்வதால்
அதிகமோங் இவ்வையம்
தழைக்குமாம்.....

காதல்பற்றி சொல்லவந்த பாரதியார்:

காட்டிலுன்ன பறவைகள்போல்
வாழ்வோமப்பா
காதலிங்கே யுண்டாயிற்
கவலையில்லை.....
காதலினும் மானிடர்க்கு
கலவியுண்டாம்
கலவியினுல் மானிடர்க்கு
கவலை நீரும்

என மொழிகிறார்.

காதல் அடைதல் உலகத்தின் இயற்கை—பறப்பன முதல், ஊர்வன வரை காதல் புரிகின்றன; களிக்கின்றன அதாவது,

காதல் அடைகல்
உலகியற்கை!—அது
கட்டில் அகப்படும்
தன்மையதோ?—அடி

***

காதலிருவர்களும்—தம்
கருத் தொருமித்த பின்
வாதுகள் வம்புகள் ஏன்?—இதில்
மற்றவர்க்கென்ன உண்டு?

என்று உலகத்தவரிடம் பாரதிதாசன் விடை கேட்கிறார்.

இவ்வண்ணம் பாரதியாரோடு ஒன்றுபட்டு, அவர் சென்ற பாதையிலே கொஞ்சம்கூட விலகாமல் விட்டு ஒதுங்காமல் பாரதியாரின் ஒரே ஷேன் என்னும் பெயருக்கு நிலைக்களனாக வாழ்ந்து கொண்டிருப்பவர் பாரதிதாசன். பாரதிதாசனுடைய கடவுள் பாட்டுக்களை வைத்துக்கொண்டு சிலர் அவர்மீது காய்கிறார்கள். பாரதியார் மூடக் கடவுள்க் கொள்கைகளைக் கண்டித்ததைவிட பாரதிதாசன் அதிகமாக ஒன்றும் பாடிவிடவில்லை

நெஞ்சு பொறுக்குதில்லையே
—இந்
நிலைகெட்ட மாந்தரை
நினைந்துவிட்டால்
ஐந்து தலைப்பாம்பென்பான்
—அப்பன்
ஆறுதலை யென்று மகன்
சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாளிருவரும்
பகைத்திருப்பார்
செத்த பிறகு சிவலோகம்
வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றெண்ணி
யிருப்பார்
பித்த மனிதரவர் சொலும்
சாத்திரம்
பேயுரையா மென்றிங் கூறெடா.

இவை பாரதியார் பாடியவை கவிதைகள்தான். பாரதிதாசன் பார்ப்பனத் துவேஷி என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறார். பாரதியார்,

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே" என்று சொன்னதைவிட பாரதிதாசன் அதிகமாக ஒன்றும் சொல்லிவிடவில்லையே

பாரதியாரைப் போல பாரதிதாசனும் பாடாத பொருளே இல்லை. இயற்கையின் மனோரம்மிய காட்சிகளை, சல சலவென தவழ்ந்துவரும் நீரோடைகளை, பூரண நிலவை, தாமரைப் பொய்கையை, தாவும் புள்ளிமானை, கூவும் குயிலை, ஆடும் மயிலை எல்லாம் பாரதிதாசன் பாடியுள்ளார். இயற்கையைப் பாடியவர்கள் தான் கவிஞர்கள் எனின் பாரதிதாசன் அதற்கும் விதிவிலக்கானவர். பாரதிதாசன் அலையெறியும் விரிகடலை பாடுகிறானென்றால், கடலின் ஆழத்தைப் பாடுகிறார். குமுறியெழும் கோர அலைகளை பாடுகிறார். அவற்றின் மோதலினால் கரையும் கரையைப் பாடுகிறார். கடலின் அடித்தளத்தில் விழையும் முத்துக்களை, பவளத்தைப்பாடுகிறார். பாரதிதாசனுக்கும் ஏனைய கவிஞர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். மேனி மினுக்கை மட்டும் பாடாதவர், பாடமுனையாதவர் அவர் அவருடைய பாட்டை எத்தனை தடவை வேண்டுமானாலும் படிக்கலாம். ஒவ்வொருதடவை படிக்கும் போது புதியவேகமும், ருசியும் அவற்றில் ஒடுவதை நாம் உணரலாம்.

அறிஞர். சி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கூறுவது போல "கவிஞர் பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். கதைக்காக ஒரு முறை, கலைக்காக ஒரு முறை, கவிக்காக ஒரு முறை, கருத்திற்காக ஒரு முறை, இன்பத்திற்காக ஒரு முறை, எழிலுக்காக ஒரு முறை, கொள்கைக்காக ஒரு முறை, குறிப்பிற்காக ஒரு முறை, படித்தேன். இவ்வொரு முறையிலும் ஒவ்வொரு கவிதையும், ஒவ்வொருமுறை படித்தேனை வேறினித்தது" என்பது மிகைப் படக்கூறும் மொழியல்ல.

பாரதியின் பெயரை பத்தரை மாற்றுத் தங்கமாக- பட்டம் வெட்டிய வைரக்கல்லாக பாதுகாத்து வைத்திருக்கும் ஒரே கவிஞர் பாரதிதாசன்.

வீரமறத் தமிழன்; நெஞ்சில்
விடுதலைக் கொள்கை யாளன்;
பாரதியைக் காத்த புதுமைப்
பாவலன்; அன்பில் பழுத்தோன்
நேரமெலாம் தமிழர் ஆட்சி
நிலைபெற உழைப்போன், உலகில்
போரிலுன்;.....

என "பாரதியைக் காத்த புதுமைப் பாவலன்" என்று பாரதிதாசனை கவிகம்பதாசனின் வாய் மொழன்றிருக்குமா?

கம்பனையும், காளிதாசனையும் ஷேக்ஸ்பியரையும் ஷெல்லியையும் போற்றும் வாய்கள் பாரதிதாசன் பாராட்டத் தவறுவது ஏன்? தாயகத்திலே பிறந்த தகைமை சான்றவர்களை ஈனப்படுத்துவதிலே இன்பம் காணும் தமிழர் உள்ளங்கள் பாரதியாருடனேயே தாங்கள் இழைத்த கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

தமிழிலுள்ள தலைசிறந்த கவிகளை உயிரோடு போற்றுங்கள். தியாகத்தின் உருவங்களை, வீரத்தின் வெற்றிக் காளைகளை அவர்கள் காலத்திலேயே பாராட்டுங்கள். சிந்தனைப் பொலிவும், சீர் திருந்த அறிஞர் பெருமக்களை ஆதரியுங்கள். அச்சாண் மண்டபத்தில் கொலுவீற்றிருந்து அதல பாதாளத்தில் அள்ளி யெறியப் பட்ட தமிழனே கண்ணை விழிபட்ட தமிழனே கண்ணை விழி கடமையைச் செய். தாயகத்தின் துயர் தீர். தமிழ், தமிழன், தமிழ் நாட்டின் பெயரை நிலைநாட்டு.

நந்தவன அமைப்புக் கலையைத் தமிழர்கள் மறந்துவிடவில்லை

கல்லோயா பள்ளத்தாக்கின் தலைநகரமாகிய அம்பாரையில் நடைபெற்ற பூந்தோட்டப் போட்டியில் ஒரு தமிழர் பரிசு பெற்றார் என்பது பழந் தமிழ் மக்களின் நந்தவன அமைப்புக் கலை இன்னும் அவர்கள்பால் இலங்கி வருகிறதென்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது.

கல்லோயாப் பள்ளத்தாக்கில் கடந்த மாதம் முதன் முறையாக ஒரு பூந்தோட்டப் போட்டி நடத்தப்பட்டது. சுமார் 21 பேர் இப்போட்டியில் கலந்து கொண்டனர்; இப்போட்டி காரணமாக வன விலங்குகள் உலாவித் திரிந்த இந்தக் காட்டுப் பிரதேசம் இப்போது விதம் விதமான அழகிய வண்ணப் பூந்தோட்டங்களாகக் காட்சியளிக்கின்றது.

பேராதனைப் பூந்தோட்ட அதிபராயிருந்து ஓய்வெடுத்துக் கொண்டுள்ள திரு முதலியார் அலக்ஸ் சில்வா, கல்லோயா அபிவிருத்தி சபையின் விவசாயப் பகுதி அதிபர் திரு வி. குணரத்தினு ஆகிய இருவரும் மத்தியஸ்தர்களாக இருந்து பரிசுக்குரிய பூந்தோட்டத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

முதற் பரிசுக்குரிய மிகவும் திறமையான பூந்தோட்டமென திரு எஸ். என். கந்தையாவினுடைய பூந்தோட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. திரு எஸ். என்



திரு. எஸ். என் கந்தையா

ஆண்டு முதல் கல்லோயா அபிவிருத்தி சபையின் பிரதம லிகிதராகக் கடமையாற்றி வருகிறார். நிறைக்குமாகாணம் முழுவதிலுமே இவர் அமைத்துள்ள பூந்தோட்டம் போல் பிறிதொன்றில்லை யென்பது குறிப்

சுதந்திரன் குறுக்கெழுத்துப்போட்டி 2.

4-ம் பக்கத் தொடர்ச்சி

5 எல்லாக் கட்டணமும் இலங்கைப் போஸ்டல் ஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர்மூலம் சுதந்திரன், என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். போஸ்டல் ஆடர்கள் "குரோஸ்" செய்யப்படுதல் அவசியம். சுதந்திரன் போட்டி வவுச்சர்கள் சுதந்திரன் காரியாலயத்தில் கிடைக்கும். மணி ஆடர்கள், தபால் பில்லைகள், செக்குகள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6 தபால் மூலம் அனுப்பப்படும் எல்லா விடைகளும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி, 194 ஏ, தட்டா தெரு, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கே அனுப்பப்பட வேண்டும். விடைகளை சுதந்திரன் காரியாலயத்தில் நேரில் கொண்டுவந்து சேர்ப்பிக்க விரும்புபவர்கள் அப்படிச் செய்யலாம். உரிய பிரவேசக் கட்டணத்தை காரியாலயத்தில் செலுத்தி அதற்குரிய போட்டி வவுச்சரைப் பெற்று, அதை விடைக் கூப்பன்களுடன் இணைத்து காரியாலயத்தில் இதற்கென வைத்திருக்கும் கூப்பன் பெட்டியில் போடவேண்டும். காரியாலயத்தில் வேலைசெய்யும் எந்த சிப்பந்திகளிடமும் விடைகளைக் கையளிக்கலாகாது. கையிழையாகத் தவறிவிடும் அல்லது காணாமற் போய்விடும் விடைகளுக்கு போட்டிக் காரியாலயத்தார் பொறுப்பேற்க முடியாது. முடிவு தேதிக்குமுன் விடைகள் கிடைக்கவேண்டும். விடைகளைத் தபாலில் சேர்த்த அத்தாட்சி, தபால் உரிய காலத்தில் அதாவது முடிவு தேதிக்கு முன் வினியோகம் செய்யப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7 போட்டி ஆசிரியரின் விடைக்கு சரியான விடை அல்லது குறைந்தபட்சம் பிழைகளோடு கூடிய விடை அனுப்பியவருக்கு முதற் பரிசும், முதற் பரிசுபெறும் விடைக்கு அடுத்தபடியாயுள்ள விடை அனுப்பியவருக்கு இரண்டாவது பரிசும் வழங்கப்படும். பரிசுக்குரியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோராயிருப்பின் அவர்களிடையே பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒருவர் ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெறமுடியாது.

(அ) உரிய கட்டணங்கள் அவ்வளவும் செலுத்தியார் ஒருவர் அதிகப்படியான விடைகள் அனுப்புகிறாரோ அவருக்கு 100 விசேஷப் பரிசாக வழங்கப்படும். ஒரே பெயரில் ஒரு கவரினுள் ஒரேசமயத்தில் அதிகப்படியான விடைகளை உரிய கட்டணத்துடன் அனுப்புபவரே இப்பரிசுக்கு உரியவராவார். வெவ்வேறு கவருக்குள் வெவ்வேறு காலங்களில் அனுப்பப்படும் விடைகள் இப் பரிசுக்கு உரிமையுடையவையாகா. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே தொகையான விடைகள் அனுப்பினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். 7ம் விதியில் காட்டப்பட்ட குறிப்புக்கு மாறுக முதல் அல்லது இரண்டாவது பரிசு பெறும் நபரும் இந்த விசேஷ பரிசைப் பெற உரிமையுடையவராவார்.

8 இங்கு தரப்பட்டிருக்கும் போட்டி விதிகளுக்கு உட்படாத எந்த ஒரு கூப்பனும் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதியற்றதாகவே கணிக்கப்படும். இத்தகைய தகுதியற்ற கூப்பன்களோடு அனுப்பப்படும் கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

9 இப்போட்டி சம்பந்தமாக லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியாரின் தீர்ப்பே முடிவானதும் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்துவதுமாகும்.

10 இப்போட்டி விதிகள் இப்போட்டியை நடத்தும் லிலோன் நியூஸ் பேப்பர்ஸ்லிமிட்டட் கம்பனியாருக்கும் போட்டியில்கலந்துகொள்ளும் ஒவ்வொருவருக்குமிடையே தனித் தனி ஒப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த ஒப்பந்தம் கொழும்பிலே செய்யப்பட்டதாகவும் கொழும்பிலேயே முற்றுக நிறைவேற்றப்படுவதாகவும் கருதப்பட வேண்டும்.

11 சம்பந்தப்பட்ட போட்டியில் பரிசு பெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுள் தங்கள் கோரிக்கைகளை ரூ 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால்மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தோடு, போஸ்டல் ஆடர், மணி ஆடர், அல்லது போட்டி வவுச்சர் இலக்கத்தையும், விடைகளைத் தபாலில் அல்லது நேரில் சேர்த்த தேதியையும் எழுதி அனுப்ப வேண்டும். தகுதியும் உரிமையும் நிரூபிக்கப்படாதபட்சத்தில் பிரஸ்தாப பிணைப் பணத்தை அவர்கள் இழந்துவிடுவார்கள்.

12 இப்போட்டி சம்பந்தமாக வேறு எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும், நேர்முகமான பேட்டியும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியில் வேலை பார்க்கும் சிப்பந்திகளும் அவருடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

தினமணி

கதிர்

சித்திரை மலர்

நேர்த்தியான ஆர்ட் காகிதத்தில் மூவர்ணப் பட அட்டையுடனும், விசேஷ வர்ணப்பட புகைப்பட அனுபந்தங்களுடனும்

100 பக்கங்கள்: விலை 30 சதம்.

கிடைக்குமிடம்:

மோகன் அன் கம்பெனி லிமிட்டெட்.

151, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனக்குரல்

சுதந்திரன் வாழ்க!

ஐயா.

14-4-54ல் "டைம்ஸ்" பத்திரிகையை வரித்தேன். முதற் கண்ட விஷயம் "சேர் ஒலிவர் குணதிலகா K. G. M. G. அவர்கள் சோல்பரி பிரபுவுக்குப் பதிலாக கவர்னர் ஜெனரலாக கடமையாற்றுவார்" என்ற செய்தி. உடனே 28-3-54ல் சுதந்திரன் வெளியிட்ட "அடுத்த கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர்!" என்ற தலையங்கந்தான் என் முன் ஓடி வந்தது.

"என்ன ஆச்சரியம்! மூன்று மாதங்களுக்கு முதலல்லவா இவ்விடயத்தைக் கூறி விட்டது சுதந்திரன்" என்ற பாராட்டு உரைகள்தான் என் நாவை வந்து சேர்ந்தன.

வாழ்க சுதந்திரன்!!

இங்ஙனம்

எஸ். தாமோதரன்

கல்முனை,
16—4—54

'சுதந்திரன்' தமிழனின் பத்திரிகை

ஐயா,

தங்களுடைய சுதந்திரனைப் படிக்கும் பல ஆயிரம் அபிமானிகளில் நானும் ஒருவர். இந்தச் சுதந்திர நாட்டில், எவருக்கும் பயப்படாது பணத்துக்கோ முகத்துக்கோ அஞ்சாது, உள்ளதை உள்ளபடி சுதந்திரத்தோடு எழுதும் ஒரே பத்திரிகை 'சுதந்திரன்தான் தமிழ்ப் பத்திரிகையென்ற அளவில் தமிழ்த் தாயாருக்கு வரவிருக்கும் ஆபத்துக்களை உடனுக்குடன்..... ஏன் உடனுக்குமுதல் கூட எழுதி எழுதி எச்சரிக்கை செய்து அவ்வப்போது (அன்னூர் புதல்வர்கள்), தமிழ் மக்களுக்கும் நேரும் சீரும் வழிகளை எடுத்துக் காட்டுவதும் தங்களின் ஒரே பத்திரிகை. அன்னியோரின் செபடி வித்தைகளில் மதிமயங்கி விடாது தமிழ்த் தலைவர்களுக்கு தருணத்தில் தகுந்த குட்டும் ஒரு பெரிய சேவையை தமிழ் மக்கள் என்றுமே மக்கழ் முடியாது. இவையும், "அடுத்த கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர்!" என்ற இரகசிய விஷயங்களை மற்றைப் பத்திரிகைகளுக்கு முதலே அறிந்து தமிழர்க்கு அம்பலப்படுத்தும் கெட்டித்தனமும் 'சுதந்திரனை வாயார வாழ்த்தச் செய்து விட்டது. தங்களுக்கும் நேயர்களுக்கும் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

எம். எஸ். எம். அலியார்

காத்தான்குடி 18-4-54

தமிழன் பெருமை இதுதானா?

இரண்டாவது எலிஸபெத் மகாராணியாரின் இலங்கை விஜயத்தினபோது மக்கள் மத்தியில் குறிப்பிட வேண்டிய நிகழ்ச்சி, இம்மாதம் 12ம் திகதி இலங்கை பாராளுமன்ற அங்குரார்ப்பண வைபவத்தினபோது நிகழ்ந்திய நன்றியுரை. இதில் இருந்து இந்த நாட்டில் தமிழ் இனம் உண்டா இல்லையா? என்ற பீதியே எழும்பியுள்ளது. யூ. என். பி. அரசாங்கம் அடுத்தடுத்து படுகுழி தேண்டுகிறார்கள தமிழ் இனத்திற்கு. நாம் என்றும் அடிமைகளா! தமிழன் என்றால் தரணியெலாம் புகழ். ஆனால் இலங்கையில்.....?

வாய்வீரம் பேசும் நமது இனத்தைச் சேர்ந்த இரு முழு மந்திரிகள் இருக்கிறார்களே. அவர்களின் நிலை அப்பொழுது என்னவாயிற்று?

தமிழ் பாஷைக்கு—தமிழினத்துக்கு அரசாங்கம் தீமையிழைக்குமாயின் நான் எனது நண்பர் ஆர். வன்னியசிங்கம் செல்லும் பாதையில்தான் நின்று தோளோடு தோள் போரிடுவேன் என்று கூறினார் சேர் கந்தையா வைத்திய நாதன் கோப்பாயில் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டத்தில். அதே கூந்தை இன்று நிறை வேறாத ஆயத்தமாய் இருக்கின்றாரா என்று அறைகூவி கேட்கின்றோம்.

தபால் தகவல் அமைச்சர் திரு. சு. நடேசன் மகாராணியை தரிசிக்க இருந்த ஆர்வம்போல அன்று தமிழில் பேசி தமிழனின் தன் மானத்தைக் காப்பாற்ற ஆர்வம் கொண்டிருக்கப்படாதா?

அன்று 12ம் திகதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு எதிரில் பேசுவதற்குமுன் மந்திரிசபையில் அனுமதி கோரவில்லை என்று கொண்டிச் சமாதானத்திற்கு அணை கோருகிறார். என்ன பெருமை பார்த்தீர்களா? அதற்கு ஒரு அறிக்கை தயாரிக்கிறார் சேர் ஜோன். மக்களை என்றும் ஏமாற்றப் பார்க்கிறார்களே!

நாம் வாழவேண்டுமா? நம் இனம் வாழவேண்டுமா? தமிழ் மொழி வளரவேண்டுமா? ஆம் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இவர்கள் போன்ற நாச காரரை தோலுத்து தன்நம்பிக்கை வைத்து தனிராஜ்யம் கோரவேண்டும். கோரலில்தான் நாம் சுபீட்சமாய் இலங்கையில் வாழமுடியும் இல்லையேல் சேர் வீரர் நீர்கிய வந்த பாக்கு நீரிணையை தேடிவிழ வேண்டியதுதான்.

வாழ்க தமிழ் இனம்! வெல்க தமிழ் பாஷை!!

ஓர் தமிழன்

சாந்தி வழி

[6—ம்பக்கத் தொடர்ச்சி]

லிருந்த விடுபட்டு அதை வெற்றி கண்டு அதற்கு அப்பாற்பட்டதும், விருப்புவெறுப்பற்றதும் ஆகிய சமத்துவ நிலையில் நிரந்தர சாந்தியுடன் வாழச் சமயநெறியே உதவி புரியும்.

வினா: 3

இறைவன் ஒருவன் உண்டு எனபதை எல்லோரும் ஏன் உணர முடிவதில்லை.

செல்வி கு. அன்னபூரணம்,
மானிப்பாய்

விடை:

உலகப் பொருள்களால் ஏற்படும் சுகதுக்க அனுபவங்களை மட்டும் பெற முயன்று அதிலேயே முழு மனதையும் செலுத்திக் கொண்டிருப்பதனால் எல்லோரும் இறைவனை உணர முடிவதில்லை. சதா மாறிக் கொண்டிருக்கும் அவைகளின் தன்மையை உணர்ந்து அவற்றின்மேல் கொண்ட பற்றை நீத்து மன அமைதி பெற்ற நிலையில் இறைவன் தானாக வெளிப்படுகிறான்.

நிலைக் கண்ணாடியின் முன்னாலேயே நின்று கொண்டிருந்தாலும் அதனமேல் அழுக்குப் படிந்திருந்தால் நமது உருவம் அதில் தெரியாது. அழுக்கைச் சுத்தமாகத் துடைத்த போது வேறு எவ்வித முயற்சியுமின்றி நமது உருவம் தானாகவே தோன்றுவது போல.

வினா: 4

காதல் துறையில் தோல்வியடைந்துள்ள என் மனம் வாழ்விலேயே வெறுப்படைந்திருக்கிறது. என் மனம் சாந்தி பெற ஒரு வழி காட்ட மாட்டீர்களா?

எம். எம். முகிதீன், கொழும்பு

விடை:

காதல் துறையில் தோல்வியடைந்த மனம் வாழ்வில் வெறுப்புறுவது சகஜமே. ஆயினும் இத்தோல்வியை வேறொரு துறையில் வெற்றிகாணுவதற்குரிய சாதனையின் படியாக மாற்றியமைத்துக் கொள்வதே சிறந்த வழி. வாழ்வில் வெறுப்படைந்த மனம் தற்கொலை கூடச் செய்து கொள்ள எண்ணும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை சமீப காலத்தில் கூட நாம் கண்டோமே. பாரதியார் 'காதல் போயிற் சாதல்' என்று பாடியிருக்கிறார். ஆயினும் அதற்கு நான் ஒரு புதுப் பொருள் காண விரும்புகிறேன். அதாவது காதல் தோல்வியுறில் அக்காதலை மற்றொருவர் மேல் மாற்றுவது இயலாததாகையால், அக்காதல் வாழ்க்கைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்து அதைச் சாகடித்துவிட்டு, வேறு புதிய தொரு துறையில் முழுமனத்துடன் ஈடுபட்டு பொது நலத் தொண்டில் காதல் கொண்டவராகவோ, இறை வழிபாட்டில் காதல் கொண்டவராகவோ, கலையாராய்ச்சியில் காதல் கொண்டவராகவோ ஆவது தமக்கும் பிறருக்கும் பயன் தரும் வாழ்க்கையாக அமையும். இத்தகைய காதல்களில் ஒருபோதும் தோல்வியுற சந்தர்ப்பம் ஏற்படாது. இதை விட்டு விட்டு நீங்கள் அடைந்த தோல்வியையே பிரதானமாகக் கருதி மனம் வெறுத்து சாகத் துணிந்தால் உங்களுக்கோ பிறருக்கோ எதுவித பயனும் விளைத்தவர் ஆகமாட்டீர்கள்.

தைத்திங்கள் முதல் நாளை ஏற்பவர்கள் நட்சத்திரத்தை ஏற்க வேண்டியவர்களே

[பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமிழ் மறைக் கழகத் தலைவர்]

(முற்றொடர்)

சென்ற இதழிலே தமிழகப் பேரறிஞர் சிலர் வைகாசி அனுடத்தை ஆதரிப்பதற்குக் கூறிய வாறை எடுத்துக் காட்டினேம். தமிழ் கூறு நல்லுலகம் 1935ஆம் ஆண்டிற்போல இப்பொழுதும் பெரும்பாலும் இந்த நாளை ஏற்றுக்கொண்டது என்பதைக் காட்டுதற்காக இவ்வறிஞர் சிலர் பேரறிஞர் தம் கூற்றுக்களை ஈண்டுத் தருகிறோம். தமிழ் நாட்டைப் பற்றிக் கூறுதற்குத் தமிழகத் தாராகிய இந்தப் பேரறிஞர்கள் பலருக்கும் உரிமை உண்டு; இவர்கள் உணமை நிலைமையை மறைத்துக் கூறமாட்டார்கள் என்பதை அன்பர் விசுவநாதமும் பிறரும் ஏற்றுக்கொள்வார் என்றும், இவர்களைத் தமிழ்ப் பகைவர்களாக ஒருவரும் கருதமாட்டார் என்றும நம்புகிறோம்.

தமிழினத்தின் ஒற்றுமையையும் ஆக்கத்தையும், நல்வாழ்வையும் குறிக்கோளாகக் கொண்டு கடமையாற்றும் சங்கங்களும் கட்சிகளும் மாநிலமன்றித் தமிழ் மக்களின் தலைவர்களும் தம்மிடையேயுள்ள வேறுபாடுகளைப் **பொருட்படுத்தாமல், எவ்வித மாறுபாடுமின்றி ஒன்றுபட்டுப் போற்றவேண்டிய நாள் திருவள்ளுவர் திருநாள்** எனபதை உணமைத தமிழன் எவனும் மறுக்கமாட்டான்.

திருக்குறளையும் திருவள்ளுவரையும் மதிக்கிறோம்; போற்றுகிறோம் என்று கூறுகிறவர்கள் திருவள்ளுவர் திருநாளைத் தமிழினத்தின் தனித் திருநாளாக யாவரையும் கொண்டாடச் செய்யவேண்டியது தம் கடமை என்பதை உணர்தல் வேண்டும்; உணர்ந்து முயற்சிக்கவேண்டும் தமிழ்ப் பகைவர்கள் என்றும், தமிழ் நண்பர்கள் என்றும் தமிழினத்தைப் பிரிக்காது "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும்" சான்றோராகவும் வாழ முயலவேண்டும்.

நட்சத்திரம், கிராமம், சுரம் முதலியவற்றின் பெயர்கள் வட மொழியில் இருப்பதால் அவற்றை விட்டுவிட வேண்டுமென்று கூறுதல் பகுத்தறிவுடையவர் பண்பாகாது. இது தமிழினத்திற்குச் செய்யும் தொண்டுமாகாது. சூரியன் மகர இராசியுள், அஃதாவது உத்தராட நட்சத்திரத்தின் பின் முக்காலில் புகும் நாளாகிய தைத் திங்கள் முதல் நாளைப் போற்ற முற்பட்டவர்கள் நட்சத்திரம் வேண்டாம்" என்று கூறுவது "என் தாய் மலடி என்று கூறுவதை ஒத்ததொரு மூர்க்கப்பாடு எனபதை யாவரும் இலகுவில் அறிந்துகொள்ளலாம். இதை அறிய முடியாதவர்களும், அறிந்தும் அறியாதவர்கள்போற் பேசுபவர்களும் தமிழினத்தின் பெருமையை உணராதவர்களாவர்; பழந் தமிழ் மக்களின் கருத்துக்களை அறியாதவர்களாவர். இவர்களைத்தான் பகுத்தறிவற்றவர்கள் என்று கூறல் வேண்டும்.

அறியாமையினாலும், மாறுபாட்டினாலும், சுயநலத்தினாலும் தமிழ் நாட்டிலே நிலைத்துள்ளனவும், தமிழ் மரபுக்கும், தமிழினத்தின் கொள்கைக்கும், தமிழர் பண்பாட்டுக்கும் மாறுனவையுமான கொள்கைகளை நீக்கவேண்டியது தமிழினத்தை உயர்த்தி நல்வாழ்வு வாழச் செய்ய முயல்வோர் தம் கடமையேயாகும். நெல்லுடன் உள்ள புல்லைக் களைதலை யாவரும் போற்றுவர். புல்லைக் களையும் போது நெல்லையுமே புல்லென மயங்கி முழுதையும் அழித்துப் பசுங் கழனியைப் பாழாக்கிப் பாலைவனமாக்குதல் மனிதத் தன்மையாகாது; பகுத்தறிவின் செயலாகாது.

ஆகவே நட்சத்திரம் என்று கேட்டவுடன் வெறுப்புக் கொள்ளாது பழந்தமிழ் மக்களின் கொள்கைகளை உள்ளபடி அறிந்து நம்மினத்தின் வாழ்வை உயர்த்துதற்கு யாவரையும் ஒன்றுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

வைகாசி அனுடத்தையே வள்ளுவர் திருநாளாகத் "தமிழ் என் தாய் மொழி" என்று கூறும் ஒவ்வொருவரும் கொண்டாட வேண்டும். இந்நாளையே "தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழ் நாடுகளுக்கும் தொண்டாற்றுகிறோம்; புது வாழ்வுதவுகிறோம்; என்று கூறும் தொண்டர்களும் தலைவர்களும் யாவரையும் ஒரு முகமாகக் கொண்டாடச் செய்ய வேண்டுமென்பதைச் சிறிது விரிவாக விளக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் எமது உரை சிறிது நீண்டு செல்வினும அதற்காப்பொருட் படுத்தாது, தொடர்ந்து இரண்டு மூன்று இதழ்களிலே இதனை வெளியிடுமாறு சுதந்திரன் ஆசிரியரைக் கேட்டுக் கொள்கிறோம். **இதனையோ இதற்கிலை பகுதிகளையோ எடுத்துத் தமது பத்திரிகைகளில் வெளியிட்டுத் தமிழ் நாட்டு மக்களுக்கும் உண்மைமை உணர்த்து மாறு தமிழ் நாட்டுப் பத்திராசிரியர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.**

இனித் தமிழ்நாட்டறிஞர்களின் கூற்றுக்களைக் கீழே காண்க. டாக்டர் மு. வரதராசன் அவர்கள் கூற்று எமது நோக்கத்தை நன்கு புலப்படுத்துகிறதாகையால் அதனை முதலிற்தருகிறோம். உணரும் உள்ளம் உயர்ந்த உள்ளம் தமிழ் உள்ளம் உடையவர்கள் யாவரும் இந்தக்கூற்றைப் போற்றி ஒன்றுபட்டுழைக்க முன் வருவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

(தொடரும்)

சுதந்திரனின்றேல் சுபீட்சமில்லை

மகத்தான இரண்டாவது வாரம்

முருகன் டாக்கீஸ் (கொழும்பு)

தினசரி மாலை 6, இரவு 9—30 மணிக்கும்,

சனி, ஞாயிறு பிற்பகல் 2, மாலை 6, இரவு 9—30 மணிக்கும்

ஞாயிறு காலை 10 மணிக்கும் காட்சிகள்.

ஆயிரக் கணக்கான ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் திரையிடப்பட்டுள்ளது.



மாமியார்

மாமியார்கள், மாமியாராகப்போகிறவர்கள், மருமகளாகப் போகிறவர்கள் எல்லோரும் பார்க்கவேண்டிய படம்.

நடிகர்கள்:

மனோகர், வரலட்சுமி, கிரிஜா,

சிவபாக்கியம், ரேலங்கி, பந்துலு.

திரைக்கதை: "சம்சாரம்" புகழ் சதாசிவப்பிரம்மம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாடுமேய்த்த மாது மண்வெறியரை சமர் செய்து சாடினாள்

படைதிரட்டி பார் அதிரப் போரிட்ட வீரரமணி ஜோன்

சூற்றில் தீயில் கொழுத்தப்பட்டு மடிந்தாள்

[எம். எஸ். சீனிவாசன்]

பிரான்ஸ் நாடு தன்வாழ்நாளில் பல வீரர்களைக் கண்டிருந்தாலும் ஜோனைப்போல் ஓர் வீரப பெண்ணை கண்டிருக்க முடியாது. பிரான்ஸின் இடர்கை வனப்பு மிகுந்த இடமான "தாம் ரெமி" எனும் கிராமத்தில் வசித்து வந்த மக்கட்கு ஒருகாலத்தில் 'மூர் தார்க் என்பவன் தலைமை வகித்து வந்தான், அவனுக்கும் 'இஸ்பெல்லா, என்னும் உத்தம மனைவிக்கும் கி. பி 1411ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் திகதி இரண்டாவது குழந்தையாகப் பிறந்தாள் உத்தமி ஜோன்.

அவர்கள் வாழ்ந்து வந்த அந்த சிறிய கிராமத்தில் பாடசாலை இல்லாதால் அவள் தந்தை அவளை படிக்க வேறு இடத்துக்கு அனுப்பவில்லை. எனவே கல்வி யறிவில்லாதவளாகவே வாழ்ந்து வந்தாள். ஆனலும் அடக்க ஒடுக்க முள்ள பெண்ணாகவே வளர்ந்து பெரியவர்களின் பாராட்டுதலையும் பெற்றுவந்தாள். ஜோனின் சிற்றப்பன ஜோனுக்கு பிரான்ஸ் நாட்டின் வீரவரலாறுகளை கதைபோல் கூறிக்கொண்டு வந்தான். அதையவள் ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டுவந்தாள். அத்துடன் மந்தைமேய்க்கும் தங்கள் தொழிலையும் செய்து வந்தாள், மேலுமவள் சிற்றப்பன் பிரான்ஸ் நாட்டிற்கு பிரிட்டிஷார் செய்த அக்கிரமங்களையும் நூற்றாண்டு யுத்தங்களின் வெற்றி தோல்விகளையும் கூறியதோடு உண்மையான தாய் நாட்டுப் பற்றையும் அவள் மனதில் பதிய வைத்துக் கொண்டும் வந்தான். அது நாளடைவில் அவள் நெஞ்சில் நன்றாக வேலை செய்யத் தொடங்கியது. ஆதலால் அவள் உண்மையான தாய் நாட்டுப் பற்றுடைய வரிஞள். ஆனல் அவள் அதை எல்லாம் வெளியில் காட்டிக்கொள்ள வில்லை, ஒரு பக்தியுள்ள மாதைப்போல் நடந்து கொண்டாள்.

இன்னேரம் நாட்டில் பிரிட்டிஷாருக்கும் பிரான்ஸ்படைகளுக்கும் கடும்போர் மூண்டது, இதில் தோல்விக்கு மேல் தோல்வியே பிரான்ஸ் படைகளுக்கு கிடைத்தது, இதைக் கேட்ட ஜோனுக்கு நிமிடத்துக்கு நிமிடம் தானும் அந்தப் போரில் கலந்து வெற்றியீட்டி பிறந்த நாட்டை மீட்க வேண்டுமென்ற பேரவா ஏறிக்கொண்டே வந்தது, ஆனல் நான் பெண்ணுச்சே, என்ற எண்ணம் தோன்றி ஏதோ பிதற்றியது அவள் மனதில் தாய்நாட்டுப் பற்றுக்கும் பெண்மைக்கும் பெரும போர் மூண்டது அவள் மனதில், இறுதியில் தாய் நாட்டுப் பற்றே வென்றது, எனவே தன் எண்ணம் நிறைவேற ஓர் தந்திரோபாயம் செய்தாள், மன்னன் சார்ல்ஸிடம் சென்ற என்னிடம் தேவ மாதாக்கள் எதிரில் தோன்றி போரில் கலந்து வெற்றியடைந்து நாட்டை மீட்கும்படி கூறிச் சென்றனர் எனக் கூறினுள் சற்றும் தயங்காது ஜோன். எனவே அவனிடம் படை பெற்று அப்படைக்கு அவளே தலைமை தாங்கி, வெண்புரவி மீதேறிப் படைக் களத்துக்குச் சென்ருள் வீர மங்கை ஜோன். தேவர்களால் அனுப்பப்பட்ட நான் என்றும் பிரான்ஸ் நாட்டைவிட்டு இப் பொழுதே வெளியேறிவிடுங்கள் எனவும் மிரட்டினுள். ஆண்மை மிக்க ஆங்கில வீரர்களில் சிலர் பயந்தே போனர்கள். எஞ்சிய பேரை யுத்தம் செய்து வென்ருள் ஜோன். "ஓர்லெயான்" நகரை கைப்பற்றியவுடன் பிரான்ஸ் நாட்டுக்கு சார்ல்ஸ் மன்னனிடம் சென்ருள். அன்று ஆங்கில வர்க்கமே ஆடி அசைந்தது ஜோன் என்ருல்.

சார்ல்ஸ் மன்னன் நாட்டுப் பற்று பொதுநல சேவை சிறிதுமில்லாதவன், விளையாடுவதிலும் வேட்டையாடுவதிலும் வீணே நேரத்தைக் கழிப்பவன். யுத்தத்தைப்பற்றி சிறிதும் கவலை இல்லாதவனுக வாழ்ந்துவந்தான். இச்சமயம் "மார்ன்" என்னுமிடத்தில் மீண்டும் யுத்தம் மூண்டது. அந்து பிரிட்டிஷாரை எதிர்க்க மன்னனின் அனுமதி பெற்று படைகளுடன் சென்ருள் ஜோன். தோல்வியே கண்டறியாத வீரப் பெண் வஞ்சக நெஞ்சம் படைத்த பிரிட்டிஷாரிடம்தோற்றுஅவர்கள் கையானுள். ஆனல் ஜோனையும் அவள் வீரதையும் அறிந்த கேட்ட, அத்தனை நாடும் மக்களும் இரத்தக்கண்ணீர் வடித்தனர்.

பின் அவளுக்கு தீர்ப்புக் கூற தேச சபை கூடியது. முன்ராணுவ நீதிமன்றம் போப்பாண்டவரின் நீதிமன்றமே அதில் நீதிபதியும் போப்பாண்டவரே. கி. பி. 1433ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி "ரூவன்" நகரதின் சந்தை கூடுமிடதில் நிறுத்தி நெருப்பால் எரிக்கும்படி தீர்ப்புக் கூறினன். "பியேர் கொஷோன்" என்னும பாதிரி. அந்த நாளும் வந்தது. சுத்த வீராங்கனை ஜோனையும் தீயிலிட்டு எரித்தனர் பிரிட்டிஷார். எனவே வருங்கால தாய்மார்களே, தமக்கைகளே தங்கைகளே ஜோனின் வீரப் உங்கள் மனதிலும் உடலிலும் ஒடிக்கொண்டிருக்கிறது. அதை தூண்டி துணைபுரிய இதோ தம்பிமார்கள் முன்வந்து விட்டோம் ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி சமமாக நின்று நமது பிறந்த பொன்னாட்டுக்கும் பேசும் தாய்மொழி, தேனினும் இனிய, தெவிட்டாத இன்மொழியான தமிழ் மொழிக்கும் என்ன நேரினும் எதிர்த்து நிற்போம். வெற்றி நமதே!

—

"ஒன்றேகுலம்"

நமது நாடும் மொழியும் இழிநிலையடைய இருந்த காரணம் சாதி வகையால் உயர்வு தாழ்வு கற்பித்து-வகுத்து உடன் பிறப்பினரை ஒதுக்குவதேயாகும். ஆகவே சாதியொழிய வேண்டும். மக்கட்டன்மை நிரம்பப்பெற்றோர் எச்சாதியினராயினும் அவர்களே மக்களென்று மதிக்கப்பெற வேண்டும். மற்றவர் கயவரென்று ஒதுக்கப்பட வேண்டும். அன்றி பிறப்பினுல் உயர்வுதாழ்வுகற்பித்தல் பேதமையாகு மென்றெண்ணிய வள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்ருர்

விடுதலை வேட்கையுண்டாக இன்றுங்கூட நம்காதில்ஒலித்துக் கொண்டுநிற்கும் பாரதியார் முரசறைகிறு ; முரசறைந்தவர் "ஊருக்கு நல்லது சொல்வேன் - எனது, தன்மை தெரிந்தது சொல்வேன்" என்று கூறியபின சாதிப் பேயைத் தொலைக்கத் தன் சொந்தவரலாற்றைநினைத்துக் கூறுகிறார்.

" வெள்ளை நிறத்தொரு பூனை- எங்கள்
எங்கள் வீட்டில் வளர்வது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை-
அவை பேருக்கொரு நிறமாகும்;
சாம்பல் நிறமொரு குட்டி-
கருஞ்
சாத்து நிறமொரு குட்டி;
பாம்பு நிறமொரு குட்டி-
வெள்ளைப்
பாலின் நிற மொரு குட்டி;
எந்த நிற மிருந்தாலும்- அவை
யாவும் ஒரே தாய்மன் றே?
இந்த நிறஞ் நிதென்றும்-இஃது
ஏற்ற மென்றும் சொல்ல லாரு
மோர்? "

என்று வளர்த்த ஒரே பூனை வெவ் வேறு வகையான நிறங்களுடன் நான்கு குட்டிகள் போட்டால் அக்குட்டிகளுள் உயர்வு தாழ்வு பாராட்டல் மடமையற்றவர் செயலெனக் கூறியவர்,

" வண்ணங்கள் வேற்றுமைப் பட்டன்
அதில்
மானிடர் வேற்றுமை யில்லை,"

என்று நிறங்கருதி மக்களைப் பிரித்தல் நேர்மை யல்ல என்று உறுதியாகக் கூறி விட்டார். மக்கள் சாதி வேறுபாடு கருதாமல் வாழும் வழியே பெருந்தகை உள்ளுவா காட்டிய வழியாகும்.

நா. மு. சுமாரசிங்கம்;
கொழும்பு.

உழவுத் தொழிலின் சிறப்பு

பண்டைக் காலத்தில் மக்களின் நாகரீக வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஊன்றுகோலாக இருந்தது உழவுத்தொழிலே. அதே உழவுத் தொழில் அன்று தொட்டு இன்று வரை எல்லா மக்கட்கும் ஜீவநாடியாக இருந்து வருகின்றது. உலகில் உணவின்றி ஒருவரும் உயிர் வாழ முடியாது. ஆகவே பட்டின வாசிதொடக்கம் பாமர மக்கள் வரை உழவுத் தொழிலையே தங்கள் சாப்பாட்டிற்கு எதிர்பார்க்க வேண்டும்.

நாம் எவ்வித தொழிலைச் செய்தாலும், வியர்வை சிந்தி உழைத்தாலும் அவை எதற்கு? நம் எண்ணாண் வயிற்றின் உணவிற் காகத்தான். கிராம மக்கள் உழவுத் தொழிலைச் செய்யா விட்டால், நகரமக்கள்எவ்விதமானதொழிலைச் செய்தும் பிரயோசன மென்ன? ஆகவே உழவுத் தொழில் ஓர் சிறந்த தொழில் என்பது மறுக்க முடியாத உண்மையாகின்றது. திருவள்ளுவப் பெருந்தகையார் "உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர்" என்று எவ்வளவு அழகாக உழவுத் தொழிலை சிறப்பித்துக் கூறியிருக்கின்ருர்.

உழவுத் தொழில் ஓர் சுதந்திரமான தொழில், அரசாங்கத்திற்கு கீழ்ப் பட்டதோ இல்லை, ஒருவருக்கு ஒருவர் அடங்கி நடக்கத் தேவையில்லை, தனக்கு விருப்பமானல் போய் வேலையைச் செய்து ஏற்ற கூலியைப் பெற்று சந்தோசமுடன் வாழ்பவனே விவசாயி.

அக்காலத்தில் உழவுத் தொழில் செய்வது மிகவும் கஷ்டமும், செலவு அதிகமுமாயிருந்தது, ஆனல் இப்போ இயந்திரங்கள் நொச்சிமுனை எல்லாம் விஞ்ஞானம் முற்ற முற்ற மடமடக்களப்பு.

புரிதீசல்கள் போன்று வெளியாகிக் கொண்டு வருகின்றது. அன்றியும் வேலையையும் துரிதமுடன் முடிப்பதற்கு ஏற்ற தாய் அமைந்தும் உள்ளது.


உழவுத் தொழிலினல் ஒரு நாட்டின் முன்னேற்றமும் மக்களும் சந்தோசமாய் வாழ்வதற்தும் உதவியாய் இருக்கின்றது, ஓர் நாடு உழவுத் தொழிலின் உதவியால் முன்னேறினல் மக்களும் முன்னேறுவார்கள், அதன் பயனுக அரசனும் சந்தோசமாக குடிகளுடன் கஷ்டம் இல்லாமல் வாழ்வதற்கு முடியும் என, ஒளவைப் பிராட்டி.

" வரப்புயர நீருயரும்; நீருய
நெல்லுயரும்;
நெல்லுயரக் குடியுயரும்; குடி
யுயரக் கோனுயரும்;
கோனுயரக் கோன் உயர்வான்"


என்று அழகாகக் கூறியிருக்கின்ருர் என்பது வெள்ளிடமலை, ஆனல் நாம்பார்த்த சினிமாப் படத்தில் இதைக் காணுதது மிகவும் துக்கம்தான்.

இக்காலத்தில் ஜனத்தொகை கூடிக் கொண்டு வரவர, மக்களும் நாகரீகம் அடைந்து விட்டார்கள், நாகரீகம் அடைந்த மக்கள் தாங்கள் உத்தியோகம் பார்ப்பது மிக இலேசான வழி என்று உழவுத் தொழிலை முன்னேற்றுவதாகத் தென்பட வில்லை. ஆகவே நாம் எப்படியாயினும் நமது மூதாதையர் கடைப்பிடித்து வாழ்ந்துவந்த நமத் தொழில் இன்றும் பிரயோசனமாக இருப்பதால் நாம் உழவுத் தொழிலை முன்னேற்ற வழி செய்தல் வேண்டும்.

இ. பாக்கியராசா



ஒருசில வினுடிகளுக்குள் ஒரு கப் நெஸ்டோமோல்டை தயாரித்துவிடலாம். பரிசுத்த பாலும்-தானியச் சத்தும் கலந்த இதை நீங்கள் அபாரமாக அனுபவிப்பீர்கள். அதன் செழிப்பும், இன்சுவைப்பும் ஒருபுறமிருக்க, விட்டமின் பி-1 ஆல் உரமேறிய இது சோர்வை போக்கி, தளர்ச்சியை துடைத்து பலத்தை கூட்டி புத்துணர்ச்சி தருவதுடன் நிம்மதியான தூக்கத்தையும் கொடுக்கிறது.



உங்களுக்கு இலவசமாக சாம்பிள் நெஸ்டோமோல்ட் பாக்கற் வேண்டுமானல் 25 சதத்திற்குரிய தபால் முத்திரையுடன் உங்கள் பெயரையும்மேல்விலாசத்தையும்நெஸ்ல்ஸ் [Dept.S.] தபால் பெட்டி நிர். 189, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புக.

நெஸ்டோமோல்ட்



தனியாட்களின் பாவிப்புக் கார்களுக்கும் மற்றும் லோட்டார் வாகனங்களும் மூலம் என்ஜின்கள் பூட்டப்படுகிறது. எவ்வளவு வேகமாக ஓடினலும் எஞ்ஜினின் சப்தம் குறைவாக வைக்கப்படுகிறது. இதுபோன்று பல ஆயிரம் வாகனங்களை பிரிட்டன் உற்பத்தி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சமூக சீர்திருத்த ஸ்தாபனம்

எந்த அரசியல் கட்சியுடனும் அதற்கு சம்பந்தம் கிடையாது

தலைமை நிலையப் பொறுப்பாளர் அறிக்கை

"இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் தொடர்பு கொள்ளவில்லை. இனியும் அவ்வாறே இயங்கிவரும் என்று நம்புகிறேன். நமது இயக்கம் தாய் நாட்டில் கூட கம்யூனிஸ்ட் கட்சியுடன கலந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. பலவகையில் இரண்டு இயக்கங்களும் முரண்பட்டே இயங்கி வருகின்றன. இந்த நிலையில் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் முடிச்சுப் போடுவது நமது சமூக சீர்திருத்தப் பணியைக்கண்டு கலக்கமுறும் சில பழைமை விரும்பிகளின் தூண்டுதலாகவே இருக்குமெனக் கருதுகிறேன்" இவ்வாறு இலங்கை திராவிட முன்னேற்றக் கழக தலைமை நிலையப் பொறுப்பாளர் திரு இரா. அதி. மணி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழக நிலையங்களை பொலீசார் சோதனை செய்தும் நிர்வாகிகளை விசாரணை செய்தும் வருவதாக அறிகிறோம். சில பல கேள்விகள் தி. மு. க. நிர்வாகிகளிடமும் கேட்கப்படுகின்றனவாம். அத்தோடு நிலையங்களிலுள்ள சில பத்திரிகைகள் பிரசுரங்கள் முதலியனவும் பொலீசாரால் எடுத்துச் செல்லப்படுவதாகவும் கிளைக் கழகங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன. பத்திரிகைச் செய்திகளும் அவ்வண்ணம் கூறுகின்றன.

இயக்கம் இப்படியாகப் பொலீசாரின் கண்காணிப்புக்குட்பட்டமைக்கு உண்மையான காரணம் என்ன என்பது நமக்குத் தெளிவாகவில்லை. பத்திரிகைகளில் வெளியான செய்திகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து கீழ்க்காணும் காரணங்கள் புலனாகின்றன.

(1) இலங்கை தி மு. க இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டிருக்கிறதென்ற தவறான எண்ணம்

(2) தமிழ் உணர்ச்சியினாலும் தமிழ் வளர்ச்சியினாலும் இயக்கத்தின் ஆர்வமும் ஈடுபாடும் கண்டு ஆட்சியாளரின் கவலை.

தமிழ் உணர்ச்சியிலும் வளர்ச்சியிலும் கழகத்திற்கு ஈடுபாடு உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இதர மொழிகளின் மீது கொண்ட வெறுப்பினாலோ துவேஷத்தினாலோ ஏற்பட்டதல்ல. தான்வாழவேண்டும் என்று எண்ணுவது பிறர் மாளவேண்டும் என்று எண்ணுவதாகாது. நமது தாய்மொழியின்மீது பற்றுவைக்கவும் அதை வளர்க்கவும் நமக்கு உரிமையுண்டு. அதை யாரும் தவறு என்று கொள்ளக் கூடாது. தி. மு. க புத்தகங்களை தடைபடுத்தவேண்டுமென சிலர் விரும்புவதாக தெரிகிறது. இது சீப்பை மறைத்து வைத்துவிட்டு திருமணத்தை நிறுத்திவிடலாம் என்ற அசட்டு எண்ணத்தைப் போன்றது என்று கூற வருந்துகிறோம். பொதுவாக அறிவு நூல்களுக்குத் தடைவிதிப்பது மக்களின் அறிவுக்குத் தடை விதிப்பது என்றுதான் ஆகும். ஆகையால் இந்த எண்ணத்தை ஆட்சியினர் சிந்தித்தே செயலில் இறங்குவர் என்று நம்புகிறோம்.



திரு இரா. அதி. மணி

பொதுவாக இலங்கை தி. மு. க. விற்கு ஏற்ற சட்டதிட்டங்கள் இனிமேல்தான் உருவாகப் போகின்றன. அதற்குள்ளாக ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற கிளைக் கழகங்கள் தங்களின் தேர்தல்களை முறைப்படி நடத்தி முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் பேரில் இப்பொழுது கிளைக் கழகங்களின் தேர்தல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த கிளைக் கழகங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பொதுக் குழுதான் இலங்கை தி. மு. க. தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும். அந்த நிர்வாகிகள்தான் இலங்கைக்கு ஏற்ற முறையான ஒரு சட்டதிட்டத்தை தயாரித்துத் தருவர். அதற்குள் அவசரப்பட்டு ஆட்சியினரோ அல்லது பொலீசாரோ ஏதாவதுவேண்டாத நடவடிக்கைகளிலீடுபட்டு இயக்கதை ஒழித்துக்கட்ட முனைந்தால், அது விரும்பத்தகாதது; வருந்தத்தக்கது; வெற்றி காணவும் முடியாதது என்று மாத்திரம் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

கடைசியாக ஆட்சியினர் நம்மை அறிந்து கொள்ள முயற்சிப்பதுபற்றி நமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறோம். ஆங்காங்கேயுள்ள தி. மு. க. தோழர்கள் அமைதி, கட்டுப்பாடு, கண்ணியம், கடமை இவைகளை உணர்ந்து உண்மையுடன் தொண்டாற்ற வேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல பல பணிகள் செய்து வெற்றிகாண வேண்டும். ஆட்சியினர் ஏதாவது தாங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென ஆசைப்பட்டால் அன்பு கூர்ந்து அச்சமின்றி அவர்கட்கு உண்மையான தகவல்களை அறிந்து நமது கண்ணியத்தை உணர்த்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இயற்கையை எழிலுற வைக்கும் கவிஞனின் கவினுறு கண்கள்

(2—ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுகும் மலர்கள் எங்கும் மலர்ந்திருந்தன. ஓரிடத்திலே கருநாகத்தின் தோற்றம் போலக் காந்தள் அரும்புகள் காட்சியளித்தன. பக்கத்திலே ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்த ஒரு மயில், ஆடல் மயக்கத்தாலோ, யாதோ, காந்தள் முகையைக் கருநாகப் பாம்பென எண்ணிக் கௌவிப் பிடித்தது; ஏமாற்றமடைந்து ஏங்கி நின்றது. இதைப் பக்கத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்த முல்லையரும்புகள் 'களுக்'கெனச் சிரித்தாற் கண்டு விடுவார்களோ என்றஞ்சிப் போலும், ஒலியை உள்ளடக்கிக் குறுநகைசெய்வதுபோன்று மலர்ந்தன. இந்தக் காட்சியைத் தன் இதய ராணியை நோக்கி,

"ஏந்திள முல்லையாளே!
எழுதரு மெழிலாளே
காந்தளின் முகைகண்ணிற்
கணைடொரு களிமஞ்ஞை
பாந்தளி தெனயுன்னிக்
கவ்விய படி பாராத்
தேந்தள வுகள்செய்யுஞ்
சிறுகுறு நகை காணாய்"

என்று காட்டுகிறான் இராமன். [பாந்தள்-பாம்பு, தளவுகள்-முல்லை]

கம்பரின் பார்வை, கானகத்து மலர்ந்த முல்லை, கவின்பெறு மயிலின் ஏமாற்றங் கண்டு குறுநகை புரியுமளவுக்கு உயிர்பெறுமாறுசெய்த தன்மை எண்ணியெண்ணி இன்புறற்பாலதாம்.

அன்று மயிலின் ஏமாற்றத்தைக் கண்டு குறுநகை செய்த முல்லை, நேற்றுச் சோலையின் பக்கம் உலவச் சென்ற செழுந் தமிழ்ப் புலவன் பாரதிதாஸனைக் கண்டு 'குலுக்' கென்று சிரித்ததாம். பாரதிதாஸனின் பார்வை முல்லைக்களித்த உயிரால், வாசம் வந்த வசத்திற் திரும்பி, நறுமணத்திலே மயங்கி நின்ற அவரையே பார்த்துச் சிரிக்குமளவுக்கு அம் முல்லை திறம்பெற்றுவிட்டது.

"மாலைப் போதில்
சோலையின் பக்கம்
சென்றேன்; குளிர்ந்த
தென்றல் வந்தது.
வந்த தென்றலில்
வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்தில்
திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு
படர்ந்து கிடந்தது
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன்
மகிழ்ச்சி கொண்டேனே!"

என்று அவர் கூறுமாற்றான் முல்லையின் சிரிப்பொலி நம் காதுகளிலும் முரல்வதைக் கேட்கலாம்.

கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளையின் கற்பனைத் திறத்தினால் சூரியகாந்தியாகிய சுந்தரப் பெண்மணி கதிரவனின் காதலைப் பெறக் கடுந்தவம் புரிவதைக் காணலாம்.

வேகாமல் வெந்து வெயிலில் உலர்ந்து விண்ணிலே கண்ணுக நிற்கும் அம்மலரை நோக்கி,

"பொன்னிற முண்டு
பொலிவுண்டு கண்டுனைப்
போற்ற இனிய வடிவமுண்டு
என்ன அரிய வரம்பெற
இன்னும் நீ
இத்தவம் செய்வது பூமகளே!"

என்று அவர் விளவும் முறையில் 'எனதுளங்கவர்ந்த கள்வனும் செங்கதிரோனின் அன்பைப் பெறத் தானையா இந்த வேதனை யெல்லாம்' என்று தான் வாய்திறந்து அம்மலர் விடையளிக்கும் என்பதை அது கூறுமளவே நாம் உணரக்கூடுவதாகும்.

அது மட்டுமன்றி, இன்னொரு பெண்ணின் காதலன்மீது தான் விருப்புற்று அவனை மயக்கித் தன் வலையிலே வீழ்த்த விரும்பும் அக்காந்தி மலரை

"மஞ்சள் குவித்து
முகமினுக்கி இந்த
மாயப்பொடி வீசி நிற்கும் நிலை
கஞ்சமகள் வந்து
காணிற் சிரிக்குமோ
கண்ணீர் உகுக்குமோ
யாரறிவார்!"

என்று ஏளனம் செய்யும் முறையிலே, கவிஞரின் பார்வையின் சக்தி வழுவிய ஒழுக்கமுள்ள வனிதையர்களையே ஒருமுறை நிறையச் சிந்திக்கச் செய்யக் கூடியதாக அமைந்துள்ளது பயின்று, பயின்று மகிழத்தக்கதாகும்.

செந்தமிழ்இலக்கியப் பொழிவிலே உலவுவோர், கவிஞர்களின் உள்ளமாகிய மலர்களின் மீது உதித்தெழுகின்ற அழகாகிய பகலவன் அள்ளிப்பொழியும் ஒளிக்கதிர்களின் பிரகாசத்தால், இப்படி உயிர்பெற்றுத் திகழும் எத்தனையோ மலர்களைக் கண்டு அவற்றின் எழிலில் மூழ்கி இன்பம் அனுபவிக்க வேண்டுமென்பதை அறிவுறுத்தி நிற்கின்றோம்.

கழகச் செய்திகள்

உடப்பு அரசினர் பாடசாலையில் இரு விழாக்கள்.

உடப்பு அரசினர் உயர்தர தமிழ்ப் பாடசாலை மைதானத்தில் தலைமையாசிரியர் திரு. ஐ. ஆ. இராமசுவாமி தலைமையில் சமீபத்தில் உடற்பயிற்சி விழாவும் சிரேஷ்ட மாணவன் செல்வன் மு. இராசலிங்கம் தலைமையில் 'கலாவளர்ச்சிக் கழக விழாவும் வெகு விமரிசையாக நடைபெற்றன.

புது முறையான பலவித உடற்பயிற்சிகளில் ஆண் பெண் இருபாலாரும் டங்குபற்றி ஊரவரை மகிழ்வித்தனர். கலைவிழாவில் மாணவரின் பேச்சு, ஆடல், பாடல், நடிப்பு என்பன இடம் பெற்றிருந்தன. அவற்றுள் 'இராம இராவணயுத்தம், உலக சமாதான மகாநாடு, என்பன உன்னத நிலையில் நடத்திக் காண்பிக்கப்பட்டன.

——

வாசிகசாலைத் திறப்பு விழா

மகாராணியின் இலங்கை விஜயத்தை ஞாபகார்த்தமாகக் கொண்டு உக்கிரசப் பிட்டிய வை. எம். எம். ஏ. சங்கத்தினர்களால் ஓர் இலவச வாசிகசாலை ஆரம்பிக்கப் பட்டது. ஜனப் ஏ. எம். மீரூசாகிபு (மாஜிமனேஜரும்) பாடசாலைக்கு நிலம் உதவியவரும்) அவர்களால் 10-4-54 ல்வெகு விமரிசையாகத் திறந்து வைக்கப் பட்டது. பின் சமயகுரு "பாததிஹ" ஒதினார். பின்னர் ஜனப்களான எம். எம். முகமது தம்பி (தலைமையாசிரியர் பட்டியசம) ஏ. எம். சரீப்டீன் (மத்திசம்) இ. செ. சம்சுதீன் (மனேஜர்) ஆகியோர்களால் வாசிகசாலையின் பயன் முதலான வைகளைப் பற்றிப் பேசினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட பெரியார்கள் தங்களால் ஆன உதவிகளைச் செய்வதாகக் கூறினர்கள் பின்னர் தலைவர் திரு. இ. செய்னுதீன் காரியதரிசி திரு. எஸ். எம். ஆதம் லெப்பை வாசிகசாலை அதிபர் திரு. நசீட் வீ. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வாசிகசாலை திறக்க இடம் தந்துதவிய பெரியாருக்கும் புத்தகம் பணம் முதலியன உதவிய பெரியார்களுக்கும் நன்றிகூறப்பட்டது.

——

கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை

கொழும்புகதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபையின் 28வது ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் கப்பித்தாவத்தையிலுள்ள மேற்படி சபையின் மடாலய மண்டபத்தில் 28-3-54 ஞாயிற்றுக்கிழமை திரு. வி. ஏ. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

இச்சபையார் 25-1-54 தொடக்கம் ஒரு பாடசாலையை ஸ்தாபித்து நடத்துவதன் காரணமாக சபையின் பிரமாணங்கள் சிலமாற்றியமைக்கப்பட்டன.

கதிர்காமத்துக்கும் திசமகாரூமைக்கும் மத்தியிலுள்ள போகப் பலாசை என்னுமிடத்தில் சபையாருக்குரிய காணியில் ஒரு மடம் கட்டவேண்டுமென்றும் அதற்காக வேண்டிய நடவடிக்கையை அதிகாரசபையார் கூடிய சீக்கிரம் எடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சபையார் கப்பித்தாவத்தையில் நடத்தும், கொழும்பு தொண்டர் வித்தியாலயத்தில், இருநூற்றுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் கல்வி கற்கிறார்களென்றும், இடமின்மையால் சேரவிருக்கும் அனேக மாணவர்களைச் சேர்க்கமுடியாமலிருப்பது வருந்தத் தக்கதென்றும் அதிகார சபையார் வெளியிட்ட அறிக்கையில் வற்புறுத்தப்பட்டது.

இவ்வாண்டுக்குரிய பின்வரும் செயலாளர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டனர்:-

தலைவர்: திரு. க. மதியாபரணம் உபதலைவர்கள்: திருவாளர்கள் கா. நாகலிங்கம், வே. அ. கந்தையா, சி. சரவணமுத்து, ஆர். சபாநாயகம், டாக்டர் க. கணேரத்தினம். பாடசாலைமனேஜர்: திரு க. கனகரத்தினம்.

கௌரவபொதுக்காரியதரிசி: திரு. வே. மயில்வாகனம் பாடசாலைக் காரியதரிசி: திரு. வி. எஸ். அரியரத்தினம் உபகாரியதரிசி: திரு. இ. சிதம்பரநாதன் தலைதிகாரி. திரு. வ. சின்னத்துரை உபதலைதிகாரி: கு. மாணிக்கவாசகர்.

முகத்தை அழகு.....

[10—ம் பக்கத் தொடர்ச்சி]

உயர்ந்த மனிதகுலத்தை உருவாக்கவேண்டும்

சிந்தனையால், உலகில் உலவும் எண்ண அலைகளால், வாழ்க்கை என்னும் ஆசிரியன் புகட்டும் பாடங்களால், உள்ளம் வளருகிறது. வளரும் உள்ளத்தைச் செப்பனிட்டுச் சீரிய பாதைவழியாக இட்டுச் செல்லும் கல்வியையே குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.

மக்கள் நல்லவர்களாக வேண்டுமானால் அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி, ஜாதி ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிய வேண்டும். மக்கள் மனதிலே குரோதத்தை, துவேசத்தை சுயநலத்தைத் தூவும் முறையிலே உள்ள எண்ணங்களை, ஏற்பாடுகளை அகற்ற கூடிய கல்வியைக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரின் மூளையையும் அறிவுக் களஞ்சியமாக்க வேண்டும்.

"சோம்பலும் சோர்வும் கொண்டு ஒரு நூற்றாண்டு உயிர் வாழ்வதை விட, ஒரு நாளேனும் பெருமுயற்சி போடு வாழ்ந்திருந்தால் மேலானது" என்ற புத்தரின் பொன்மொழியை மாணவர் கைக்கொண்டொழுகச் செய்வது ஆசிரியர் பணியாகும். அப்பொழுதுதான் மாணவர் தைரியத்துடன், முன்னேற்ற மடைந்து வாழ முடியும்.

"உணர்வுகளை அறிவினால் ஆளும்போது, அறிவானது அரியணையில் அமரும்போது, உணர்வின் துடிப்பு அடங்கும்போது, மனிதன் நாகரீகம் அடைகிறான்" என்கிறார் அறிஞர் இங்கர்ஸால்.

உலகம் நாகரிகம் அடையும் நாள் வருவதைத் துரிதப்படுத்தக் குழந்தைகளுக்கு நற்கல்வி அளிக்க வேண்டும். தொட்டிலிலிருந்தே இக்கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

நல்லாசிரியனைப் பின்பற்றியே நன்மாணாக்கன் தோன்றுகிறான் என்பதை ஆசிரியர் கவனித்து ஒழுக வேண்டும். போதனையைச் சாதனையில் காட்ட வேண்டும். "உன்னைப்போல் பிறரையும் நேசிப்பாயாக" என்ற யேசுநாதரின் பொன்மொழிப்படி ஆசிரியன் நடப்பானுகில் மாணவனும் அதுபோல ஒழுகி முன்னேறுவான் என்பது திண்ணம்.

அச்சு வேலைகள்

எதுவானாலும் சரி உடனே அவற்றை
'சுதந்திரன்' அச்சகத்திற்கு
அனுப்பிவையுங்கள்.

சுதந்திரன் அச்சகம்
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான 3-வது வாரம்!

காமினி (கொழும்பு) சபையார் (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி) ஜூபிடர் (குருணாகல்) சாயா (கேகாலை) ஜெமினி (மாத்தறை)

ரிச்மண்ட் (களுத்துறை) பேர்ள் (சிலாபம்) ரத்னாவளி (ஜா-எல) குயின்ஸ்லன் (நுகேகொட) விஜேந்திரா (அனுராதபுர)

சினிமா ஒலிம்பஸ் (காலி) சந்திரா (அவிசாவெல) பத்மா (ஹெரன) நடராஜா (நீர்கொழும்பு) ஸ்ரீமகால் (குளியாபிட்டி)



லெடி ரணசிங்க, ரீட்டாரத்னயக,
பிரேம்ஜயந், டி. பி. இலங்கரத்ன,
பெட்ரம்பெர்ணாண்டோ,
பொமினிஜெயவர்தன
திறம்பட நடித்த

யாரா குற்றம்? (சிங்களப் படம்)

வெற்றிமுரசுகொட்டும் ஆறுவது வாரம்!

கிங்ஸ்லி கொழும்பு | வெலிங்டன் யாழ்ப்பாணம் & திருகோணமலை | நியூசினிமா குருணாகல் | விஜயா மட்டக்களப்பு



மாடர்ன் பதுளை | சென்ட்ரல் மாத்தளை

- தாய்மை வெல்க, தாயகம் வாழ்க!
- தென்றல் தரும் பொதிகைச் சந்தனமோ
- தென் பாண்டிக் கடல் முத்தோ
- சேரத்துத் தந்தமோ

என

- சித்திரையாம் திருமாதத்தில்
- சிங்காரத் திரையெலாம்
- செந்தமிழர் சிந்தை யெலாம்
- தமிழ் முழக்கம் செய்கிறார்

சிவாஜி கணேசன்

மனோகர் பிக்சர்ஸ்

'மனோகரா'

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபக கூட்டுத் தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1954 ஏப்ரல் 25ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org